VISIT…

இவ்வளவு அருமையான புத்தகங்களைத் தரும் உங்களுக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்கள். நன்றியும் கூட.''

இப்படிப்பட்ட எண்ணற்ற வாசகிகள். வாசகர்களின் பாராட்டுக்களுக்கு எங்கள் நன்றி.

வாசகிகள். வாசகர்களின் பாராட்டை மேலும். பெறும் வகையில் **'கண்ணன் மனம் என்னவோ'** என்ற அருமையான நாவலை திருமதி. ரமணிசந்திரன் அவர்கள் தந்துள்ளார்கள்.

படித்து மகிழுங்கள். கருத்தை எழுதுங்கள்.

அருணோதயம் அருணன்

கண்ணன் மனம் என்னவோ?

அவ்வளவு பெரிய நிதி நிறுவனத் தலைவர் தன்னிடம் நேரில் பேச விரும்புவதாகத் தகவல் வந்த போது. நாகேந்திரனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

தொழிலை விரிவுபடுத்துவதற்காக. இருபத்தைந்து லட்சம் ரூபாய் கிடைக்குமா என்று அவர். அந்த நிதி நிறுவனம் - 'உங்களுக்காக'விடம் விசாரித்திருந்தார். ஓரளவு பெரிய தொகைதான்.

அங்கே கடன் கொடுக்கும் விதிமுறைகள் எப்படி என்ற விசாரிப்புதான்.

ஏனெனில். சீக்கிரம் பெரிய அளவில் தொழிலை நடத்த முடியும். நடத்தி மிகப் பெரிய பணக்காரருள் ஒருவர்

ஆகிவிடலாம் என்ற நம்பிக்கை இப்போது அவருக்கு வந்திருந்தது. சுமோவும், மாருதியுமாக இருப்பவர், பென்சும் டயோட்டாவுமாக வழுக்கிக் கொண்டே போகலாம் என்ற நிச்சயம்.

அதற்கான அடிப்படை, இப்போது அவரது கைக்குக் கிடைத்திருந்தது.

ஆனால், அது ஒன்றும் அதுவாக அவர் கைக்குக் கிடைக்க வில்லை. அதென்ன பழமா, பழுத்ததும் தானாகக் கீழே விழுவதற்கு? அதிலும், சும்மா அவரது கையிலேயே விழுந்து விடுமா என்ன?

பழம் நழுவிப் பாலில் விழுவதும், அது நழுவி வாயில் விழுவதும், சும்மா எழுத்தில்தான் நடக்கும். வாழ்வில்... ஊகூம் புத்தியுள்ளவன், அத்தோடு துணிச்சலும் உள்ளவன், திட்டமிட்டுத் துணிந்து கைப்பற்றுவான்.

அவரைப் போல.

ஆண்டுக்கணக்கில் திட்டமிட்டு, மாதக்கணக்கில் எதிரியின் வீட்டுக்குள்ளேயே ஆள் வைத்து அபகரித்து வந்தது.

எதிரி கம்பெனியில் புதுத் தயாரிப்புக்காக ஆராய்ச்சி நடக்கிறது என்று தெரிந்ததுமே நாகேந்திரன் உஷாராகிவிட்டார். ஏற்கனவே அவர்கள் தயாரிப்புகளுக்குத்தான் முதல் மார்க்கெட். இதில் இன்னமும் தரத்தை உயர்த்தினால், அவரெல்லாம் பிழைப்பதா வேண்டாமா?

அவர்கள் வீடென்ன கோயிலா யாரும் எதையும் திருட மாட்டார்கள் என்பதற்கு? சாமி சிலையே திருட்டுப் போகிறது. எச்சரிக்கையோடு இராதது அவர்கள் தப்பு.

பாதுகாப்பு விஷயத்தில் 'பரிமளம்' உரிமையாளர்கள் ரொம்பவே மோசம்தான். மூத்தவர் பேரன்தான். காலம் கெட்டு

விட்டது. உங்கள் இளமைக் காலம் போல இப்போது இல்லை, இன்னும் கொஞ்சம் கட்டுக் காவல் வேண்டும் என்று வற்புறுத்திக் கொண்டு இருப்பதாகக் கேள்வி.

சொல்விச் சொல்லி தொழிற்சாலையில் இப்போது பலமான காவல். அவனே முன்னின்று கவனிக்கிறான். ஆனால் வீடு, வருவோரும் போவோருமாக இன்னமும் சத்திரம்தான். மூன்று தலைமுறையாக, எல்லோருமாய் நல்ல உறவுடனும், நல்ல வசதியுடனும் இருந்தால். அப்படித்தான். வருவோரும் போவோருமாகக் கூட்டம் அதிகமாக இருக்கும். யார் வருகிறார் பார் போகிறார் என்று யாருக்கும் தெரியாது. சில்லரைத் திருட்டுகள் கண்ணில் படாமலே போய்விடும். இதெல்லாமே நாகேந்திரனுக்கு வசதியாகவும் ஆயிற்று. அங்கேயே வேலைக்கென்று அவர் ஆளை நுழைய விட்டு அவன் மூலமாகவே அலமாரியுள் வைத்திருந்த ஃபார்முலாவைத் திருடிக் கொண்டு வந்துவிட்டார்.

இதன் மதிப்பு மட்டும் தெரிந்திருக்குமானால், திருடி வந்தவன் இதற்காகக் குறைந்தது ஆறு இலக்கத்திலேனும் விலை கேட்டிருப்பான். ஆறு இலக்கத்திலும், ஐந்து, ஆறு என்று. ஆனால் அவனைப் பொறுத்தவரையில் இது வெறும் காகிதம்.

ஏதோ அவர்களது தொழில் சம்பந்தமான குறிப்புகள்.

அப்படி எண்ணித்தான் கொண்டு வந்து அவர் கையில் கொடுத்துவிட்டான். அதற்காக நாகேந்திரன் கொடுத்த பத்தாயிரத்தை வாங்கிக் கொண்டு ஊரில் நிலத்தைப் பார்க்கச் சென்றும் விட்டான். எனவே இனி அவன் பிரச்சினை ஆக மாட்டான்.

திருடும் போது மட்டும் அவன் பிடிபட்டிருந்தால்... பிடிபட்டு நாகேந்திரனைக் கை காட்டி விட்டிருந்தால். இப்போது அவரும் சேர்ந்து சிறையில் இருக்க வேண்டும். அந்த மாதிரி ஓர்

அபாயத்துக்கு துணிந்து தான். இந்தத் திருட்டில் அவர் முனைந்ததே.

ஃபார்முலா கைக்கு வந்து சேரும் வரை நெஞ்சு 'திடுக் திடுக்' என அடித்துக்கொள்ள அவர்தான் என்ன பாடுபட்டுவிட்டார்.

கழுதைகள், தடிமாடுகள் போல மூன்று பிள்ளைகள் இருந்து என்ன பயன்? இந்த முயற்சியில், ஒரு துரும்பை எடுத்துப் போட்டிருப்பான்களா? தப்பு வழி போவதெல்லாம் உங்களுக்குத் தான் பழக்கம். எங்களை இதில் இழுக்காதீர்கள்! என்று உத்தம ரத்தின வேஷம் போட்டான்களே. இதை வைத்துக் கோடிக் கணக்கில் சம்பாதித்தால், இளித்துக் கொண்டு பங்குக்கு வராமலா போவான்கள்?

போகிறதுகள், கழுதைகள். எப்படியும் நம் பிள்ளைகள் தானே. என்ற எண்ணம் தான் அவருக்கும். ஆனால், கொடுக்கு முன் நறுக்கென்று நாலு வார்த்தை கேட்காமல் கொடுக்கக் கூடாது.

அவர்களையும் கேட்க வேண்டும். அவர்களை பெற்ற ஆத்தாளையும் கேட்க வேண்டும்.

என்னமோ உலகத்தில் இல்லாத அதிசயமாகச் சின்ன வீடு இன்னும் சிலது என்று போகிறான் புருஷன் என்று தெரிந்ததும் 'இனி ஊருக்குத்தான் பெண்டாட்டி, உண்மையில் அல்ல' என்று அன்றைக்கு அவரை ஒதுக்கினாளே. இப்போது கோடி கோடியாய்க் கொட்டுகிற போது அந்த வைராக்கியத்தை ஆற்றோடு விட்டு விட்டு ஓடி வருவாளல்லவா? அப்போது அவளையும் கேட்க வேண்டும். ஊருக்குத்தான் பெண்டாட்டி என்றவளிடம் 'எனக்கு ஊருக்கு ஒரு பெண்டாட்டி! ஒத்துக் கொண்டு இருக்கிறாயா?' என்று கேட்க வேண்டும்.

'இதோ இந்த ரஞ்சிதத்தைப் பார். இவளுக்கும்தான் தாலி கட்டியிருக்கிறேன். உனக்குக் கல்யாண மண்டபத்தில்

கட்டினேன் என்றால், இவளுக்குக் கோயிலில் கட்டினேன். இன்னொன்றை வீட்டுக்கே கூட்டிவந்தால் கூட வாயைத் திறக்கிறாளா? இப்போதுதான் கொஞ்ச காலமாகப் பெண் வளர்ந்து விட்டாள். அப்பாவைத் தப்பாக எண்ணுவாள். இதையெல்லாம் வெளியே வைத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லியிருக்கிறாள். அவ்வப்போது மறந்து போய்க் கூட்டி வந்தால்கூட இப்படி ஆகாத்யம் பண்ணுவதில்லை. பார். பெண்டாட்டி என்றால் அப்படித்தாண்டி இருக்க வேண்டும்.' என்று 'சுளீர் சுளீர்' என்று சாட்டையடி மாதிரி நாலு கேள்வி கேட்டு அவளைத் திணறடிக்க வேண்டும்.

ஆனால் அதைச் சாதிக்க முதலில் கோடிகோடியாக சம்பாதிக்க வேண்டும்.

கொஞ்சம் நிறையப் பணம் மட்டும் முதலீடு பண்ண முடிந்தால், அப்புறம் தமிழ்நாடு முதன்மைப் பணக்காரர்கள் பத்து பேருக்குள் ஒருவராக விரைவிலேயே வந்து விடுவது உறுதி.

அப்புறம் மெய்யாகவே, ஊருக்கு ஒருத்தியை வைத்துக் கொள்ளலாம்.

இவை அனைத்துக்கும் அடிப்படை அந்த ஃபார்முலாதான்.

ஆனால், அதிலும் ஒரு சிக்கல். சின்னச் சிக்கலாகத்தான் இருக்கும் என்பது இன்னமும் அவரது நம்பிக்கை. அந்த நம்பிக்கையில்தான் வாசனைத் திரவியம் பற்றி அறிந்த அறிவியல் நிபுணர் இருவரை வரவழைத்து, அந்த ஃபார்முலாவின் விளக்கத்தை எழுதித் தரும்படிக் கேட்டிருக்கிறார், நாகேந்திரன்.

ஏனெனில், இதே சென்ட் தயாரிப்பில் இருபது ஆண்டுகளாக இருக்கும் அவருக்கே அதில் தலைகால் புரியவில்லை.

பல்வேறு சங்கேத எழுத்துக்கள், சங்கேத வார்த்தைகள்.

இன்னின்னது இந்த இந்த விகிதத்தில் இப்படியிப்படித்தான் கலக்க வேண்டும் என்பது அவரது கருத்து. ஆனால் ஃபார்முலா வேறு சொன்னது.

இருக்கட்டும், இதன்படியே தயாரித்துப் பார்க்கலாம் என்று புரிந்தவரையில் கூடவே அவரது அனுபவத்தையும் கொண்டு முயற்சி செய்தால் கழுநீர்த் தொட்டி வாசனையில் ஒன்று வந்து நின்றது.

அந்த நாற்றம் மற்றதில் ஏறி விடாமல் காப்பதற்குள் பெரும்பாடாகப் போயிற்று. அப்படியும் கச்சாப் பொருட்கள் சிலதை அடியோடு தூக்கி எறியும்படி நேர்ந்துவிட்டது.

மடப் பயல்கள். ஃபார்முலா என்றால் உரியதை உரியவாறு அப்படியே எழுதி வைக்க வேண்டாமா? என்னென்னவோ குறிப்பு வைத்து இப்படி மாற்றி மாற்றி எழுதி வைத் திருக்கிறான்களே. நாளைக்கு இவன்களுக்கே குறிப்பு வார்த்தைகள் மறந்து போனால், பெரும் செலவு செய்து கண்டு பிடித்து வைத்திருக்கும் இந்த அருமையான ஃபார்முலா வீணாகிப் போய்விடாதா?

எல்லாம் அந்த முதல் பேரப் பயல் நித்யபூரணனால் வந்தது.

பெயரைப் பார். நித்யபூரணனாம். தேங்காய்ப் பூரணம் என்று வைப்பதுதானே? உருட்டி கொழுக்கட்டைக்குள் வைத்து நன்றாகச் சாப்பிடலாம். அப்படி சாப்பிட்டுக் கொண்டு சும்மா இருந்தும் இருக்கலாம்.

அதை விட்டு அந்தக் கழுதையைப் போய் வாரிசு என்று அறிவித்துத் தொழிலுக்குள் இறக்கி அவன் வேறு புதுப் புது வழிமுறைகளைக் கையாண்டு தொழிலை வளர்த்தால் போட்டிக் கம்பெனிக்காரன் எல்லாம் என்ன செய்வது? தூக்குப் போட்டுக் கொண்டு சாவதா?

அதற்கு மேல், இப்படி ஆராய்ச்சி வேறு. அதை வேறு வெளிப்படையாக எழுதிவைக்காமல் சங்கேதக் குறிப்புகளில் எழுதி வைத்து தொல்லை கொடுக்கிறான் ராஸ்கல்.

இதனால் அவருக்கே எவ்வளவு பணம் வீணாகிவிட்டது.

இப்படிப்பட்ட இன்னும் பல செலவுகளுக்குப் பயந்தே ஒரு தரம் சற்று அதிகச் செலவானாலும் பரவாயில்லை என்று அந்த இரு வல்லுனர்களையும் வரவழைத்தார் அவர்.

அவர்களும் ஒன்று மாற்றி ஒன்று என்று ஆராய்ந்த வண்ணம்தான் இருந்தார்கள்.

ஆராய்ச்சி என்றால் சும்மாவா?

பணம் தண்ணீராக ஓடிக் கொண்டு இருந்தது. இரு வல்லுனர்களுக்கும் ஊதியம் வேறு.

ஆனால் இறுதிப் பலனைக் கருதியே நாகேந்திரனும் துணிந்து செலவழித்துக் கொண்டு இருந்தார்.

அந்த ஆராய்ச்சிகளின் விளைவாக ஓரளவுக்கு அவரது தயாரிப்புகளை விட மேலான வாசனையோடு ஒன்று கிடைக்கவும் நாகேந்திரனுக்கு உச்சி குளிர்ந்துவிட்டது. இது தான் அந்த ஃபார்முலா என்று முடிவு செய்தபோது அப்படியும் இல்லை என்று தெரிய வரவும், கொஞ்சம் வருத்தமும் பட்டார்.

பரிமளம் நிறுவனத்தாரின் புரிய தயாரிப்பு, தடவி இருபத்து நாலு மணி நேரத்துக்கு வாசனைக்கு உத்திரவாதம் கொடுத்தால் இது இரண்டு மணி நேரம் கூட நிலைக்கவில்லையே?

மீண்டும் ஆராய்ச்சி தொடர்ந்தது.

ஃபார்முலா கையில் இருக்கும் தைரியத்தில் எப்படியும் அதைச் சீக்கிரமே புரிந்து கொண்டு விடலாம் என்கிற நம்பிக்கையில் மேற்கொண்டு அதன் தயாரிப்பின் அடிப்படை வேலைகளில் ஈடுபட்டார் நாகேந்திரன்.

அதில் முக்கியமான ஒரு வேலைதான் இந்த நிறுவனத்தினர் கடன் கேட்டது.

இருபத்தைந்து லட்சம் என்பது ஒரு மாதிரி பெரிய தொகை தான் என்றாலும், நிதி நிறுவனத்தின் உரிமையாளரே அதுவும் இந்தத் தொடக்க நிலையிலேயே நேரில் சந்திக்கத் தேவையான அளவுக்குப் பிரம்மாண்டமானது அல்ல.

ஒன்று அவரது கீர்த்தி நிறுவனத் தலைவரை எட்டியிருக்க வேண்டும். ஆனால் தொழில் ரீதியான பண விவகாரங்களில் அவர் அப்படி ஒன்றும் மோசமானவர் அல்ல.

பொய்யாக எவனும் வத்தி வைத்திருப்பானா? அது அவரே அவ்வப்போது செய்வதுதான். கீழே உள்ள எவனும் அவருக்கு மேலே வந்துவிடக்கூடாது என்ற எண்ணத்தில் இப்படி ஏதாவது புரளி கிளப்பி விடுவதுதான். இப்போது அதை அவருக்கே யாரேனும் செய்கிறார்கள் போலும்.

யாரவன்? அந்தத் தேங்காய்ப் பூரணமாகத்தான் இருக்கும். அவன் மட்டும் ஏதாவது வத்தி வைத்திருந்தால்... மவனே நீ தொலைந்தாய்.

உள்ளூரக் கறுவியவாறேதான், 'உங்களுக்காக' நிதி நிறுவனத்தினுடைய சேர்மன் நடேசனை நாகேந்திரன் பார்க்கச் சென்றதே.

ஆனால் சேர்மன் அறையின் சூழ்நிலையோ, அவர் நினைத்ததற்கு முற்றிலும் மாறாக இருந்தது.

"வாருங்கள் வாருங்கள்" என்று இருக்கையிலிருந்து எழுந்து வந்து இருகைகளையும் பற்றி பழகிய நண்பனைப் போன்று நடேசன் அவரை வரவேற்றதே நாகேந்திரனுக்கு அதிசயம்தான்.

ரொம்பவும் சூமுகமான வரவேற்பு. 'பிரியமான' என்று கூடச் சொல்லலாம். ஏன்?

நடேசனும், நாகேந்திரனும் இதற்கு முன் ஒருவரை ஒருவர் சந்தித்துப் பேசியது இல்லை. இவர் இன்னார் என்று தூரத்தில் காட்டி, ஒரு நண்பர் சொன்னது தவிர மற்றபடி நேரடி அறிமுகம் கூடக் கிடையாது. அப்படியிருக்க இந்த ஆர்வமான வரவேற்புக்குக் காரணம் என்ன?

'வாடிக்கையாளர் கடவுள்' என்கிற மாதிரி கோட்பாடுகள் எல்லாம் இங்கே இருப்பதாகவும் தெரியவில்லை.

உள்ளூர யோசித்தபடியே "ஆமாம் ஆ...மாம்" என்று அசடு வழிந்தார் நாகேந்திரன்.

"உட்காருங்கள்" என்று இருக்கையைக் காட்டி நாகேந்திரன் அமர்ந்ததும் மேஜை மீதிருந்த மணியைத் தட்டி காக்கி உடையுடன் வந்தவனை நல்ல காஃபி கொண்டுவரச் சொன்னார் நடேசன்.

அவன் அகன்றதும் "அப்புறம்? தொழில் எல்லாம் எப்படி இருக்கிறது?" என்று குசலம் விசாரித்தார். "எல்லாம் நன்றாக ஓடுகிறதா?"

குரலில் கரிசனம் சொட்டியது.

சட்டென விழித்து, மனிதர் ஆழம் பார்க்கிறாரோ என்று நாகேந்திரன் ஐயுறும் போதே "அதைப் போய், உங்களிடம் கேட்டுக் கொண்டு இருக்கிறேனே. விரிவாக்கம் செய்யப் போகிறீர்கள் போலிருக்கிறதே. இருபத்தைந்து லட்சம் கடன் கேட்டிருப்பதாக ஆஃபீசில் சொன்னார்கள். ஆனால் அது... அந்தத் தொகை உங்களுக்குப் போதுமா? நீங்கள் நினைக்கிற அளவு செய்வதானால் இது போதாதே. வேறு பணம் ஏதேனும் வைத்திருக்கிறீர்களா? ஏனெனில் ஃபார்முலா கையில் இருக்கும்போது அதை முழு அளவில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் அல்லவா?" என்று நடேசன் கேட்கவும் மற்றவர் ஒரேயடியாகத் திகைத்துப் போனார்.

என்ன இது? இந்த விஷயம் இவருக்கு எப்படித் தெரியும்? ஃபார்முலா இருப்பது தெரியும் என்றால் அதை அவர் திருடி வந்ததையும் அறிந்திருப்பாரோ? பேசுகிற மாதிரிப் பேசி எதிலும் மாட்டி வைக்க முயற்சிக்கிறாரோ?

ஃபார்முலா பற்றி நடேசன் பேசவும், ஒரு கணம் நாகேந்திரனுக்கு உடம்பே ஆடிப் போயிற்று. காசு பணம் என்று திருடாவிட்டாலும் இந்த மாதிரித் தொழில் முறைத் திருட்டுக்கும் பெரிய தண்டனை உண்டுதான்.

இதைப் புகார் கொடுத்து அவர் திருடினார் என்றோ, அவர் திருடத்தான் செய்தார் என்றோ நிரூபிப்பது கொஞ்சம் கடினம். 'நானும் ஆராய்ந்து கண்டு பிடித்தேன்' என்று கூட அவர் வாதாடலாம். தங்கள் கண்டு பிடிப்பைப் பதிவு செய்து 'பேடன்ட்' உரிமையை இன்னமும் 'பரிமளம்' நிறுவனம் பெற்றிராதது அவருக்குச் சற்று சாதகம். என் கண்டுபிடிப்பே என்று வாதாடலாம்.

ஆனால் கோர்ட், கேஸ் என்று போனால் மதில் பூனை எந்தப் பக்கம் பாயும் என்று சொல்ல முடியாது.

அதனால் அந்த நித்யபூரணனே இந்த நிதி நிறுவனத்தில் கடனுக்கு முயற்சிப்பதை அறிந்து இங்கே விவரம் சொல்லி மிரட்ட ஏற்பாடு செய்திருப்பானோ?

இங்கே அவனுக்குத் தெரிந்த ஆள் - இந்த நடேசனே கூட அவனுக்குப் பழக்கமானவராக இருக்கலாம்.

என்ன? இவர்களை விட்டால் வேறு நிதி நிறுவனங்களே கிடையாதா? வாய் திறவாமல் வேறு ஆளைப் பார்க்க வேண்டியதுதான்.

நாகேந்திரன் ஏதேதோ எண்ணமிட்டுக் கொண்டிருந்த போது நடேசன் மீண்டும் பேசத் தொடங்கினார். "பாருங்கள், மிஸ்டர் நாகேந்திரன். உங்கள் கடன் விண்ணப்பத்தைக் கிழித்துத் தூர எறியுங்கள். அதற்குப் பதிலாக நான் ஒரு யோசனை சொல்லுகிறேன். ஐடியா எப்படி என்று யோசித்துச் சொல்லுங்கள். இந்த சென்ட் தயாரிப்பை புதிய ஃபார்முலாவின்படி தயாரிக்கலாம். பெரிய அளவில் செய்வோம். உங்கள் விண்ணப்பத்தில் குறிப்பிட்டிருப்பதை விடப் பத்து மடங்கு அதிக அளவில் நிறையத் தயாரிப்போம். நிறைய விளம்பரம் செய்வோம். நாடு முழுக்க அனுப்புவோம். இரண்டு, மூன்று கோடி செலவு செய்வோம். லாபத்தை அள்ளுவோம். என்ன சொல்லுகிறீர்கள்?" என்று அவர் கேட்கவும் நாகேந்திரனின் தலை சுழன்றது.

பத்து மடங்கு அதிக அளவில் தயாரிப்பது என்றால் பத்து மடங்கு அதிக லாபமும் வரும்.

ஆனால் 'செய்வோம்' என்கிறாரே. பண விஷயம் எப்படிக் கணக்கிடுவதாக இருக்கிறார். பத்து மடங்கு அதிகக் கடன் வாங்கச் செய்து கடனில் ஆழ்த்தப் பார்க்கிறாரா? அதற்கு இடம் கொடுக்கக் கூடாது. ஆனால் அவ்வளவு முதல் போட்டுப் பெரிய அளவில் திறம்பட நடத்தினால் 'பரிமளத்'தையே பூ என்று ஊதித் தள்ளி விடலாம்.

ஆனால் அதற்கெல்லாம் பெரிய அளவில் ஆள்பலம், நிர்வாக இயந்திரம் எல்லாம் வேண்டும்.

உள்ளத்தின் ஆசையை அடக்கிக் கொண்டு "அந்த அளவெல்லாம் என்னால் ஆகாது சார். 'விரலுக்குத் தகுந்த

வீக்கம்' வேண்டும் சார். தனி ஆளாகப் பெரிய அளவில் பார்க்க, என்னால் ஆகாது. அதனால்..."

"தனி ஆளாக நீங்கள் மட்டுமாகப் பார்ப்பானேன் நாகேந்திரன்? என் பையனை உங்கள் உதவிக்குத் தருகிறேன். பணம் முழுவதும் நானே போடுகிறேன். இருவரும் சம கூட்டாகச் செய்வோம். ஒரு பைசா, நீங்கள் வட்டி தர வேண்டாம். இந்தியா முழுவதற்கும் நம் நிறுவனத்தின் மூலமாகவே நிர்வாகம் செய்வோம்."

"ச.. சம கூட்டு என்றால்?" பண விஷயம் தெளிவாகப் பேசி விட வேண்டும்'அல்லவா?

நடேசன் பெரிதாக முறுவலித்தார். "சம கூட்டு என்றால், ஆளுக்குப் பாதிபாதி என்று அர்த்தம். நஷ்டம் வர வாய்ப் பில்லை. அதனால் லாபத்தில் ஆளுக்கு ஐம்பது சதவீதம்."

நாகேந்திரன் மேலும் திகைத்தார்.

சற்று நேரம் மூச்சு விடவே அவருக்கு மறந்து போயிற்று. அவ்வளவு திகைப்பு.

ஐம்பது சதவீதம் என்றாலும், அவர் திட்டமிட்டதைவிட ஐந்து மடங்கு அதிகப் பணம் கிடைக்கும். அதுவும் சொந்தப் பணமே போடாமல்.

அதாவது அவரைப் பொறுத்தவரையில் இழப்புக்கே இடம் இல்லை. முயற்சி தோல்வியே அடைந்தாலும் கூட அவருக்கு ஒரு பைசா நஷ்டமிராது. இதுவரை செலவு பண்ணியதைக்கூட முதலீட்டுக் கணக்கில் எடுத்துவிடலாம்.

ஆனால் இவ்வளவும் இந்த மனிதர் ஏன் செய்கிறார்?

நடேசனும் ஒன்றும் அவ்வளவு நல்லவர் என்று பெயர் எடுத்தவர் இல்லை. தான தர்மங்கள் செய்தார் என்றாலும் அதெல்லாம் வெறும் விளம்பரத்துக்காக மட்டுமே. பத்திரி

கைகளில் கொட்டை எழுத்தில் இவரது தர்மச் செலவுகள் வருமானால் அப்படி வருவதற்காக மட்டுமே செய்யப்படுகிற தரும காரியங்கள். மற்றபடி தகராறு என்று வந்தால் தொலைத்துக் கட்டிவிடுவார் என்றுதான் கேள்வி.

அதைக் குறையும் சொல்ல முடியாது. கொடுக்கல், வாங்கல் தொழிலில் இருந்து கொண்டு, பெரும் போக்கராய் இருக்க முடியாதுதானே? இருந்தால், அப்புறம் எல்லாமே 'கோவிந்தா' ஆகிவிடுமே!

ஆனால் முன்னே பின்னே பழகியிராத அவருக்கு அந்த உதவி செய்வானேன்?

ஐம்பது சதவீத லாபத்துக்காக மட்டும் அல்ல என்கிற மட்டும் நாகேந்திரனுக்கு நிச்சயம்.

தானே வரட்டும் என்று எண்ணியவராய், "ரொம்பவும் நன்றி சார். அப்படியானால், கூட்டுத் தொழிலுக்கான பத்திரங்களைத் தயார் பண்ணிக் கொண்டு உங்களைச் சந்திக்கிறேன்" என்று எழப் போனார்.

"சற்று பொறுங்கள், மிஸ்டர் நாகேந்திரன். இந்த முயற்சியில் நம் இருவர் பொறுப்பும் என்னென்ன என்று முதலில் முடிவு செய்வோம். அதன் பிறகு பங்குதாரர் பத்திரம் எழுதுவதைப் பற்றிப் பார்ப்போம்" என்றார் நடேசன் இலகுவாக.

விஷயம் இப்போதுதான் வெளிவரப் போகிறது.

முழுக் கவனத்துடன் கூடவே இந்த அருமையான வாய்ப்பு கைவிட்டுப் போய்விடுமோ என்ற பதைப்புடன் நாகேந்திரன் மற்றவரின் பேச்சைக் கவனித்தார்.

நடேசன் பேச்சு தெளிவாக இருந்தது.

"இந்த திட்டத்துக்குத் தேவையான பணம், நிர்வாக இயந்திரம் முழுவதையும் என் பங்காக நான் கொடுக்கிறேன். மொத்த பணம்

மூன்று கோடியையும் நானே கொடுக்கிறேன். மூன்று கோடி என்பது சின்னத் தொகையில்லை..."

"நிச்சயம் சார்."

"அது பற்றிப் பிரச்சினையே இல்லை சார். ஐம்பது சத வீதத்தில் ஒற்றை ரூபாய் கூடக் குறையாமல் கொடுப்பதற்கு நான் ஒத்துக் கொள்ளுகிறேன்."

நாகேந்திரனின் பேச்சைக் காதில் வாங்காதவர் போல நடேசன் தொடர்ந்தார். "ஐம்பது சத வீதத்தையும், ஃபார்முலாவையும், உங்கள் மகளையும்" என்று எதிரில் இருந்தவரின் முகத்தில் பார்வையைப் பதித்த வண்ணம் சொல்லி முடித்தார்.

சில கணங்கள் நாகேந்திரனுக்குத் தன் காதுகளையே நம்ப முடியவில்லை.

தொழில் விவகாரம் பேசும்போது பணம் வரலாம். பெண்ணை எப்படி...

அந்த அளவுக்கு அவர்கூட இறங்கியது இல்லையே?

கொடி போல மகளின் அழகிய தோற்றம் அவரது கண்முன் தோன்றியது.

அவளும் இந்தக் கிழவனுமா?

புருவம் வரை நரைத்தபின்னும் இவனுக்கு இப்படியோர் ஆசையா? கோடிக்கணக்கில் பணம் இருக்கிறது என்பதற்காக ஒரு சின்னப் பெண்ணையா பலி கேட்பது?

நாகேந்திரனின் மனதைப் படித்தவர் போல "கொஞ்சம் தப்பாகப் புரிந்து கொண்டீர்கள் என்று தோன்றுகிறது நாகேந்திரன். என்னை பொறுத்த வரையில் எனக்குப் பந்தயக் குதிரைகளிடம் உள்ள லயிப்பு பெண்களிடம் கிடையாது. நான் உங்கள் மகளைக் கேட்டது. எனக்காக அல்ல. என் மகனுக்காக" என்றார் நடேசன்.

சற்றுத் தெளிந்த நாகேந்திரனின் முகம் மீண்டும் இருண்டது. "ஆனால் உங்கள் பையனுக்குத்தான் திருமணம் ஆகிவிட்டதே சார். நாலைந்துவயதில் இரண்டு பிள்ளைகள், மனைவியோடு அவரை நானே பார்த்திருக்கிறேனே."

"ஆமாம். ஐந்து வயதும், மூன்று வயதும். அந்த மருமகள் இப்போது மூன்றாவது கூட உண்டாகியிருக்கிறாள். நான் உங்கள் மகளைக் கேட்பது அதே என் மகனுக்காகத்தான். உங்கள் மகளை அவன் எங்கேயோ பார்த்தானாம். உடனே மையலாகி விட்டானாம். எப்படியும் அவளோடு வாழ்ந்தே ஆகவேண்டும் என்கிறான். ஒரே பையன். அவன் ஆசைப்பட்டுக் கேட்ட எதையும் நான் வாங்கிக் கொடுக்காமல் விட்டதில்லை. வேண்டுமானால் தாலி கட்டி இரண்டாம் தாரமாக மணந்து கொள்ளவே சொல்லுகிறேன்" என்றார் நடேசன் சாதாரணமாக.

நாகேந்திரனின் முகக் கருமை மாறாததோடு, அதிகரிப்பதைக் கவனித்து "என்னய்யா சொத்து கித்துக்குப் பாத்தியதை கிடைக்காதே என்று கவலையா? உங்கள் மகளை நான் அப்படிச் சும்மா விட்டு விடுவேனா? வேண்டுமானால் கடைசி வரை நல்ல வருமானம் வருகிற மாதிரி மொத்தமாகப் பணம் 'டெப்பாசிட்' செய்து விடுகிறேன். தொழில் வருமானம் வேறு நிறையவே இருக்கும்" என்றார் தொடர்ந்து.

நல்ல வாய்ப்பு கையை விட்டுப் போகிறதே என்ற வருத்தத்தோடேயே நாகேந்திரன் மறுப்பாய்த் தலையசைத்தார். "இல்லை சார் அது சரிவராது. ஏற்கனவே கல்யாணம் ஆனவனுக்குப் போய் அவளை.. ஊகூம். நியாயம் இல்லை. அவள் அம்மாவும் ஒப்பமாட்டாள்" என்று மறுத்தார்.

"நியாயமாவது மண்ணாங்கட்டியாவது? என்ன பேச்சய்யா. இது? அவள் தாய் ஏன் ஒப்ப மாட்டாள்? அவளே உனக்குத் தொடுப்புதானே அய்யா? மணி மணியாய் மூன்று பையன்களும், அவர்களைப் பெற்றவளும் இருப்பது தெரிந்த பிறகும் வந்து

ஒண்டிக் கொண்டவள்தானே? அப்புறம் அவள் மகளுக்கு மட்டும் அது ஏன் நியாயமில்லாமல் போய் விடும்?"

அவரது குடும்ப சரித்திரத்தை அக்கு வேறாய், ஆணி வேறாய் அலசி வைத்திருந்தது போல நடேசன் கேட்கவும் நாகேந்திரன் திகைத்தார்.

கூடவே நடேசன் பேச்சில் மெல்ல மெல்ல மரியாதை குறைவதையும் அவர் உணராமல் இல்லை.

மேலும் மறுத்தால் அவரை அடித்து விரட்டவும் நடேசன் தயங்க மாட்டார். கூடவே ஒரு பெரும் வாய்ப்பு கனவாகவே போய்விடும். அவர் எதிர்பார்த்ததை விடவும் மிகப் பெரிய வாய்ப்பு.

அத்தோடு நடேசன் சொல்லுவதும் சரிதானே? ரஞ்சிதமே இரண்டாவதாய் கோவிலில் பேருக்கு ஒரு தாலியை வாங்கிக் கொண்டு வந்தவள்தானே? ரொம்ப நாள் நிலைக்கும் என்று கூட நினைக்காத உறவுதான்.

ஆனால் அவள் ஒழுங்காக நடந்து கொண்டதால் உண்மைத் திருமணம் போல அவரே ரஞ்சிதத்துக்குப் பல உரிமைகளைக் கொடுத்துவிட்டார். மனைவியாகவே நினைத்துவிட்டார். அப்படியே நடத்தவும் செய்தார்.

ஆனால் இப்படிச் சேர்ந்து கொண்டவளுடைய மகளுக்கு மட்டும் வேறு என்ன வாழ்வு கிடைக்கும்?

பெரிய இடத்திலிருந்து யாரும் அவளைக் கட்டிக் கொள்ள முன்வர மாட்டார்கள்.

யோசித்துப் பார்க்கும்போது இந்த வாழ்வு கிடைப்பதே மகளுக்கு மாபெரும் அதிருஷ்டமாகத்தான் இப்போது அவருக்குப் பட்டது.

நடேசனுடைய பையன் செல்வராஜா பார்வைக்கும் அப்படி மோசம் கிடையாது. இளைஞனும் பணக்காரனுமான கணவனோடு, ஏசி காரும் பங்களாவும், வெளிநாட்டுப் பயணங்களும் கிட்டும்போது ஒரு பெண்ணுக்கு வேறு என்ன வேண்டும்?

அதிலும் இந்த மாதிரிப் பிறந்தவளுக்கு!

அத்தோடு தகப்பன் இப்படி உயர வழி வேறு இருக்கும் போது இப்படிப் பிறந்தவளை இவ்வளவு காலம் அருமையாக வளர்த்ததற்கு நன்றியாக அவள் இதையேனும் செய்ய வேண்டாமா?

யோசனை முடிந்து விட்டது.

நடேசனை நிமிர்ந்து பார்த்து "சம்மதம்" என்றார் நாகேந்திரன். "ஆனால் முதலில் தொழில் வேலைகள் முடிய வேண்டும்."

பெண்ணை மகன் விரும்புவதால்தான் நடேசன் இவ்வளவு செய்வதே. முதலில் பெண் கிட்டிவிட்டால் பிறகு மற்றது நீர் மேல் எழுத்தாகி விடக் கூடாதே!

பாம்பின் கால் பாம்பறியும்!

புரிந்து கொண்டு நடேசன் நகைத்தார்.

அந்தப் பெண் கட்டாயம் வேண்டும் என்று மகன் செல்வா சொன்னதிலிருந்தே அவள் பற்றிய விவரங்களைச் சேகரித்து, அவளுடைய தந்தையான நாகேந்திரனின் நடமாட்டங்களைக் கண்காணித்து அதில் அவருக்கும் பெருத்த லாபம் இருப்பதைக் கண்டு கொண்டு, பணத் தேவைக்கு அவரது சொந்த நிறுவனத்தில் விண்ணப்பிக்குமாறு தன் ஆள் மூலம் நாகேந்திரனுக்கு ஐடியாக் கொடுத்து, இந்த அளவுக்கு கொண்டு வந்து நிறுத்தியவருக்கு நாகேந்திரனின் இப்போதைய யோசனையின் போக்குப் புரியாதா என்ன?

"இரண்டு, மூன்று மாதங்களில் ஒன்றும் ஆகிவிடாது கிணற்றுத் தண்ணீரை வெள்ளம் கொண்டு போய் விடாது என்று மகனிடம் சொல்லி வைக்கிறேன். இவ்வளவு பெரிய தொழிலை கட்டிக்காக்க வேண்டியவன் உங்கள் மருமகன். சற்று பொறுத்திருக்கவும் பயில வேண்டும் அல்லவா? பயிலட்டும்."

இரு பெருந் தலைகளுமாகச் சேர்ந்து ஓர் இருபது வயது இளம்பெண்ணின் தலைவிதியை அவளது விருப்பு வெறுப்புகள் கொள்கை கோட்பாடுகளைப் பற்றிய அக்கறையே இல்லாமல் நிர்ணயித்து முடித்தன.

அவன் முடிவு செய்துவிட்டான்.

இனி இதை மாட்டிக் கொள்ளாமல் எப்படிச் செய்வது என்பதைத்தான் திட்டமிட வேண்டும்.

அவன் திட்டமிட்டு எதைச் சொன்னாலும் அவனுடைய மூவர் குழுவில் மற்ற இருவரும் மறுத்து ஒரு வார்த்தை கூறாமல் அப்படியே அதை நிறைவேற்றுவார்கள். அந்த நம்பிக்கை அவனுக்கு நிச்சயமாக இருந்தது.

அந்தப் பெண்ணைக் கடத்துவதிலும் சரி, திட்டமிட்ட பணத்தை வாங்கியபின் அவளை விடுவித்து அனுப்புவதிலும் சரி அவர்கள் இருவரும் பரிபூரணமாக ஒத்துழைப்பார்கள்.

எனவே, அந்தப் பெண்ணைக் கடத்தும் வழி முறைகளைப் பற்றி யோசித்தான் அவன்.

எதையும் அரைகுறையில் விட்டோ சோம்பியிருந்தோ அவனுக்குப் பழக்கம் இல்லை. எனவே தன் திட்டத்திற்குத் தேவையான மற்ற வேலைகளையும் மடமடவென்று செய்து முடித்தான்.

மாமல்லபுரம் செல்லும் வழியில் இருந்த அவர்களது விருந்தினர்மாளிகை நன்கு சுத்தப்படுத்தப்பட்டது. அதைக் கவனித்துக் கொண்டு அவ்வப்போது அங்கு சென்று தங்குவோருக்குப் பணி புரியும் வயதான சொக்கன் தம்பதியருக்கு ஊரில் ஓர் அவசர வேலை உருவாக்கப்பட்டு அவர்கள் அங்கே அனுப்பப்பட்டனர்.

அதற்குள் பெரிய வேலை நடத்தப்பட வேண்டிய இடத்தை அவன் தானே நேரடியாகச் சென்று கண்காணித்தான். பார்த்த அளவில் தன் நோக்கம் எளிதாக நிறைவேறும் என்றே அவனுக்குத் தோன்றியது.

கூடவே என்ன மாதிரிப் பெண் இவள் என்ற ஆச்சரியம் கலந்த குறுகுறுப்பும் அவனுக்கு உண்டாயிற்று.

பொதுவாக இந்த வயதுப் பெண்கள் துள்ளலும் துடிப்புமாகப் பல தோழியர் புடை சூழ, பாப்கார்னைக் கொறித்தபடி, உரக்கப் பேசிச் சிரிப்பதும் அங்குமிங்கும் எதிர்ப்படுவோரைப் பற்றி வர்ணிப்பதும், கேலி பேசுவதுமாகத் தாங்கள் அங்கே இருப்பதைக் கண்ணையும் காதையும் உறுத்தும் வண்ணம் காட்டிக் கொள்வார்கள்.

மாறாக அடக்கமாக இருப்பவர்கள்கூட இவளைப் போல ஆளில்லாத இடம் தேடி இப்படித் தனியே சுற்ற மாட்டார்கள்.

என்னத்தையோ பறி கொடுத்தவள் மாதிரி தன்னந் தனியே 'உம்' மென்ற முகத்துடன் உலகத்தையே வெறுத்தவள் போல.. அல்லது உலகத்தில் உள்ள மக்களைத்தான் வெறுத்து விட்டாளோ?

இந்த மகாராணியுடன் கலந்து பழக யாருக்குமே தகுதியில்லை என்று எண்ணித் தனியே சுற்றிக் கொண்டும் இருக்கலாம்.

இருக்கும். ஆசைநாயகியுடைய செல்லப் பெண் அல்லவா? அந்தக் கொழுப்பு இல்லாமலா போகும்? பரம்பரை அரச குமாரிகளுக்குக் கூட இந்தத் திமிர் இராது.

சட்டென அவனுக்கு ஓர் ஐயம் உண்டாயிற்று.

ஓரளவு வசதி படைத்தவனுடைய செல்வக்குமரி இப்படித் தனியே அலைவாளா? நிச்சயமாக, மாட்டாளே.

என்னவோ அவனது நோக்கம் தெரிந்து அதை நல்லபடியாக நிறைவேற்ற விரும்புகிறவள் போல அல்லவா இந்தப் பெண் நடந்து கொள்கிறாள்.

இதில் ஏதாவது சூது இருக்குமோ என்ற சந்தேகம் தோன்றவும் சட்டென அவன் தேகம் முழுவதுமே அப்படியே வியர்த்துவிட்டது.

அவள் தந்தை பக்கா அயோக்கியன். 'தான் திருடன் பிறரை நம்பான்' என்பதற்கிணங்க அந்த ஆள் இது போல ஒன்றையும் எதிர்பார்த்திருக்கலாம்தானே? அவனை அடியோடு அழிக்கத் திட்டமிட்டு தூண்டில் புழுவாக இந்தப் பெண்ணைப் பயன்படுத்தி அவனை முள்ளில் மாட்டவைக்கலாம் அல்லவா?

அப்படி மாட்டிக் கொண்டால் எவ்வளவு கேவலமாகிப் போகும்?

அப்புறம் எல்லா வகையிலும் அழிவுதான்.

இந்த எண்ணம் தோன்றியபின் இரு மடங்கு கவனத்துடன் தூர இருந்து அவன் அவளைக் கண்காணித்தான்.

பூட்டுக்கு மேல் பூட்டுப் போட்டுப் பூட்டிய மாதிரி இறுகிய முக பாவத்துடன் அந்தக் கர்வம் பிடித்தவள் தன்னந் தனியாளாய்

கால் ஓய நடந்தாளே தவிர அவளைப் பின் பற்றியோ கண்காணித்தபடியோ சற்று முற்றும் எந்தத் திசையிலும் யாருமே வரவில்லை.

தன்னை யார் என்ன செய்ய முடியும் என்ற திமிரில் அதிகம் ஆள் நடமாட்டம் இல்லாத அந்தப் பகுதியிலும் அந்தப் பெண் தனியாகவேதான் சுற்றிக் கொண்டிருந்தாள். அந்த மாதிரிப் பகுதிகளில்தான் அவள் சுற்றியதே.

எப்படியோ அவர்களுக்கு அதுவே மிகவும் வசதிதானே?

கிட்டத்தட்ட ஒரு வாரம் அவளைக் கண்காணித்து எந்த விதமான சிக்கலும் இல்லை என்று திருப்தி அடைந்த பின் தன் திட்டத்தை அன்று நிறைவேற்ற அவன் முடிவு செய்தான்.

திட்டமும் வெகு இலகுவாகவே நிறைவேறியது.

தனியே நடக்கும் அவளைச் சற்று இடைவெளிவிட்டுக் கண்ணாடி ஏற்றியிருந்த காரில் பின் தொடர்ந்து சென்றபோது தன்னிலேயே மூழ்கியிருந்த அந்தப் பெண் அதைக் கவனிக்க வில்லை. எனவே யாரும் பார்க்காத நேரத்தில் சட்டென அவளது வாயைப் பொத்தி காரில் ஏற்றுவது சற்றும் கடினமாக இருக்கவில்லை.

ஒல்லியாக இருப்பதற்காகப் பட்டினி கிடந்து மெலிகிறவள் போலும். அவளை இறுகப் பற்றி இழுத்து வரும்போது தொளதொளப்பான சுரிதாரின் உள்ளே அவளது உடல் மிக மெல்லியதாக அவன் கைக்குள் அடங்கிப் போயிற்று. அத்தோடு விடுபடுவதற்காக அவள் செய்த முயற்சியும் வலுவற்றதாக இருந்துவிட அதுவும் அவனுக்கு வசதியாக இருந்தது.

என்ன பெண்கள்? ஒல்லியாகத் தெரிய வேண்டும் என்பதற்காக இப்படிப் பட்டினி கிடந்து சத்துக் கெட்டுப் போக வேண்டுமா? என்று ஏளனமாக எண்ணியபடிதான் அவன் அவளைக் காரினுள் ஏற்றியது.

தொடர்ந்த அவளது திமிறலிலும் பலம் இருக்கவில்லை.

'இதுவும் நல்லதுதான். உடம்பில் திடம் இல்லாதபோது மனதிலும் திடம் இராது. இரண்டு மிரட்டலில் சொன்னபடி ஆடத் தொடங்கி விடுவாள்' என்று எண்ணியபடி இலகுவாகவே அவளை அசையாது பிடித்துக் கொண்டிருந்தான் அவன்.

மற்றவன் வேகமாகக் காரை ஒட்ட ஜன சந்தடி இருந்த பகுதியெல்லாம் தாண்டிய பின்னரே அவள் வாயிலிருந்து அவன் கையை எடுத்தான்.

"இதோ பார் எப்படியாவது தப்பி விட முயற்சி பண்ணாதே. சத்தம் கித்தம் போட்டாயென்றால் அப்படியே கழுத்தை நெரித்துக் கொன்று விடுவேன்" என்று அடிக்குரலில் மிரட்டினான்.

"அதை முதலில் செய்" என்றாள் அந்தப் பெண் அலுப்புடன். "எனக்கே சாகத்தான் ஆசை. தற்கொலை செய்து கொள்ளத் துணிவின்றி உயிரோடு இருக்கிறேன். நீயாகக் கொன்றுவிட்டால் எனக்குப் பேருதவி" என்று வெறுத்த குரலில் அவள் கூற அவன் திகைத்தான்.

இது நிச்சயமாக அந்த நாகேந்திரனது வேலையாகத்தான் இருக்கும் என்பதில் நித்யபூரணனுக்குக் கொஞ்சமும் சந்தேகமே கிடையாது. ஆனால் அதை நிரூபிக்கும் வழிதான் ஒன்றுமே தோன்றவில்லை.

இரண்டு ஆண்டுகளாக அரும்பாடுபட்டு இந்த ஃபார்முலாவைக் கண்டு பிடித்தவர்கள் அவனது நிறுவனத்தார்.

சரியாகச் சொல்லப் போனால் பெரும்பாலும் அது அவனது சொந்த முயற்சியே. அவன் மட்டும் பிடிவாதமாக இருந்திராவிட்டால் இந்த ஃபார்முலா கண்டு பிடிக்கப்பட்டே இராது. செலவும்தான் என்ன குறைவாகவா ஆயிற்று?

பல லட்சங்கள்!

பணச் செலவோடு அவனது பரபரப்பையும் பார்த்துவிட்டு அவனுடைய தாத்தா நித்யானந்தம்கூட "எதற்காக நித்யா இந்தப் பாடு? இப்போதே தமிழ்நாட்டில் நம் சரக்குதானே அதிகமாக விற்கிறது? இந்தத் தரம் குறையாமல் பார்த்துக் கொண்டால் போதாதா? விட்டுவிடேன்" என்று சொல்லியிருக்கிறார்.

இந்தக் குடும்பத்துடைய பெருந்தலைவர் அவர்தான். அவரது பெயரைக் கொண்டுதான் இவனுக்கும் பெயர் வைத்தார்கள். அவனை வீட்டில் அந்தப் பெயர் சொல்லி அழைப்பவரும் அவர் மட்டும்தான். மற்றவர்கள் எல்லாம் மரியாதை நிமித்தமாகப் 'பூரணன்' என்று தான் கூப்பிடுவது.

'பரிமளம்' சென்ட் கம்பெனியைத் தொடங்கியவரும் நித்தியானந்தம்தான்.

தானே தயாரித்து பாட்டிலில் அடைத்து கடை கடையாகக் கொண்டுபோய்க் கொடுத்துவிட்டு வருவாராம். விற்றால் காசு. ஒரு வாரத்தில் விற்காததைத் திருப்பி எடுத்துக் கொள்ள வேண்டும் என்கிற அடிப்படையில் தொடங்கிய தொழில். இப்போது முன் பணம் கட்டிக் காத்திருந்து சரக்கு எடுக்கிற நிலைக்குக் கொண்டு வந்த பெருமை அவரையே சாரும்.

'பரிமளம்' வாசனைத் திரவியங்களின் தரம் அப்படி.

முதலில் ரோஜா, தாழம்பூ என்று தொடங்கியது. பிறகு பல்வேறு விதமான வாசனைகளில் தயாரித்து விற்றார்கள்.

இன்னமும் ரோஜா, தாழம்பூ என்று பழைய சென்ட் வேண்டும் என்று கேட்டு வாங்குகிறவர்கள் இருக்கிறார்கள்.

தோல் அரிப்பது இல்லை. துணிகள் கறையாவது இல்லை
ஆளை அடிப்பது போன்ற அதிகப்படி வாசனையும் கிடையாது
மனதிற்கு இதமாக இனிமை கூட்டும் மணம் அவர்களது
தனிப்பட்ட சிறப்பு.

எனவே தமிழ்நாடு முழுவதிலும் அவர்களது தயாரிப்பை
பெயர் சொல்லிக் கேட்டு வாங்கினார்கள்.

நன்றாகவே விற்றது. பணமும் நிறைய வந்ததால் எல்லோர்
மனமும் நிறைந்திருந்தது. காலா காலத்துக்கும் இப்படியே
வாழ்ந்து விடலாம் என்ற ஒரு பெரும்போக்குத்தனம் உடம்பில்
ஊறிவிட்டது.

ஆனால் இது போதாது என்பது நித்யபூரணனின் கருத்து.

பெரிய பெரிய மன்னர் பரம்பரையினர் அனைவருமே
அப்படித்தான் எண்ணியிருப்பார்கள். இன்று அவர்களில்
எவருமே இருந்த இடம் தெரியவில்லை. மிட்டா மிராசு என்று
சுருங்கி இப்போது பண்ணை நிலங்களுக்குக் கூட உச்ச வரம்பு
வந்துவிட்டது. ஆளுகை எல்லை வீட்டுக்குள் மட்டுமாய்
அடங்கிவிட்டது.

எல்லாமே அப்படித்தான்.

ஏன் இந்தத் தொழிலை எடுத்துக் கொள்ளலாம். ஜவ்வாதும்
புனுகும், அத்தரும், அரகஜாவும் எத்தனை பேர் பயன்
படுத்துகிறார்கள்?

அழகழகான சிறு பாட்டில்களில் விதவிதமான நறுமணங்கள்

'இப்போதைக்கு நாம் முதன்மை நிலையில் இருந்தாலும்
இந்த நிலையைத் தக்க வைத்துக் கொள்ள நாம் இன்னமும்புதிது
புதிதாக நிறைய ஆராய்ந்து கண்டு பிடித்துக் கொண்டே இருக்க
வேண்டும்' என்றான் அவன்.

இந்த முயற்சி பலரும் செய்து கொண்டேதான் இருப்பார்கள்
அதனால் எந்த நாளும் நாம் பின்தங்கி விடாமல் இருப்பதற்காகப்

புதிது புதிதாக முயன்று கொண்டே இருக்க வேண்டும் என்பான்
அவன்.

ரயிலில் இஞ்சின்தான்முயற்சி. ரயில் பெட்டிதான் ஓடுகிறதே
என்று இஞ்சினைக் கழற்றி விட்டு விட்டால், அப்புறம் என்ன
ஆகும்? முதலில் வேகம் குறையும். பிறகு நின்றே விடும்.
அதனால் இன்னும் இன்னும் முயற்சி செய்துகொண்டே
இருந்தால்தான் இன்றைய நிலையைக் காப்பாற்றுவதோடு
இன்னும் உயர்வதும் சாத்தியமாகும் என்று பல்வேறு விதமாகத்
தொடர்ந்து வாதாடித்தான் ஆராய்ச்சியையும் தொடர்ந்து செய்து
முடித்தான் நித்யபூரணன்.

வாதாடினான் என்றால், அதற்காக மற்ற எல்லோரும் அவனது
முயற்சியை எதிர்த்தார்கள் என்றோ அவர்கள் எல்லோரும்
சோம்பேறிகள் இவன் மட்டும்தான் சுறுசுறுப்பு என்றோ
அர்த்தமில்லை.

நித்யபூரணனுடைய சிறிய தந்தைகள், அவர்களுடைய
பிள்ளைகள், பூரணனுடைய தம்பி, எல்லோருமே உழைத்துச்
சாப்பிடுகிறவர்கள்தான். யாருமே அடுத்தவர் உழைப்பில்
உட்கார்ந்து உண்ணுகிறவர்கள் இல்லை. அவரவருக்குக்
கொடுக்கப்பட்ட வேலைகளைத் திறம்படவே செய்வார்கள்.

என்ன, கொடுத்த வேலைக்கு மேலாக 'இதற்கு மேல்
இன்னும் சிறப்பாக' என்ன செய்யலாம் என்று தேடுவதில்லை.
ஜப்பானியரின் தொழில் முன்னேற்றத்தின் தாரக மந்திரமே,
இதுதான் என்றுதானே 'காஃப்மேயர்' சொல்லுகிறார்.

வருமானம் பற்றாமல் போயிருந்தால், ஒரு வேளை,
அவர்களும் அதே முயற்சியில் ஈடுபட்டிருக்கலாம். ஆனால்
கை நிறைய வந்த வருமானம் திருப்தியைத் தந்துவிட அந்த
அதிகப்படி முயற்சி பற்றி யாருக்கும் தோன்றாமலே போயிற்று.

நித்யபூரணனைத் தவிர!

இப்போதே. அவர்கள் குடும்பம் வளமானதுதான். ஆனால் பெரும் பணக்காரர்கள் என்று சொல்ல முடியாது. குடும்பத்தின் அத்தனை நபர்களுக்கும் பங்கிட்டுக் கொடுத்தால் ஒன்றுமில்லாமல் போய்விடும் என்று அவ்வப்போது பாட்டனார் நித்யானந்தத் திடம் பூரணன் கூறுவான்.

"பிரிவு, பிரிவு என்று பேசி அந்த எண்ணத்தை விதைக் காதேடா" என்று பாட்டன் அதட்டுவார். "இப்போதே தனித் தனி வீட்டில் தானே இருக்கிறார்கள்? தனித்தனி சமையல், தனித்தனி கார், விருப்பம் போலச் செலவு பண்ணக் கை நிறையக் காசு. வேறு என்ன வேண்டும்?"

"தனித் தனித் தொழில் வேண்டும் என்று நினைத்தால் பங்கிட்டுக் கொடுத்துத்தானே ஆக வேண்டும்? அப்போது பெரிதாக என்ன கொடுக்க முடியும்?"

பெரியவர் மௌனம் சாதிப்பார்.

இப்போதைக்கு மூன்று மகன்களுக்கும் ஆளுக்கொரு பெரிய வீடு கட்டிக் கொடுத்திருக்கிறார். ஒவ்வொரு வீட்டிலும், இரண்டு நல்ல கார்கள் நிற்கின்றன. செலவுக்குத் தட்டுப்பாடு இல்லாதவகையில், ஒவ்வொரு குடும்பத்துக்கும், மாதத்துக்கு முப்பதாயிரம் கைக்கு வரும். இது போக ஆண்டுக்கு ஒருதரம் பெண்களுக்கு நல்ல பெரிய நகை ஒன்றும். இரு பட்டுச் சேலைகளும் நிச்சயம். இவ்வளவு என்று பணத்தைக் கொடுத்துவிட அவரவர் விருப்பம்போல வாங்கிக் கொள்ளுவார்கள்.

மக்களின் படிப்பும், பெண்களின் திருமணமும், பொதுச் செலவு.

எனவே, யாரும் குறைப்படுவதற்கில்லை.

குறைப்படவும் இல்லை.

நாம் பழகும்பலரையும் விடச் சிறந்த பொருட்கள் நம்மிடம் இருக்கிறது எனும்போது, எப்படிக் குறைபடத் போன்றும்?

'பரிமளம்' உரிமையாளர்கள் என்ற பெயரிலும் பெருமை உண்டு.

நித்யபூரணன்தான் தாத்தாவிடம் வாதாடுவான்.

"வந்து கொண்டே இருக்கிறது. செலவு செய்கிறோம். தொழில் என்றால் எப்போதும் போட்டி நிச்சயம். வெற்றி யாருக்கு வேண்டுமானாலும் கிட்டலாம். அப்படி என்றேனும் தோற்க நேர்ந்தால், அப்போது நம் குடும்பத்தின் கதி என்ன?" என்று தனித்திருக்கும்போது அவரிடம் கேட்பான்.

"நமக்குத் தோல்வி என்று அந்த வார்த்தையைக் கேட்குமுன், என் உயிர் போய்விடும்" என்றார் பெரியவர்.

"அதனால் யாருக்கு என்ன லாபம் தாத்தா? ஒரு சிறந்த தலைவனை வீடும் தொழிலும் இழக்கும். பாசமுள்ள தாத்தாவை நாங்கள் இழப்போம். எந்த வகையில், இது நம்பிரச்சினைக்குத் தீர்வு? அதைச் சொல்லுங்கள்" என்று அவரை உலுப்பி எடுத்தான்.

இதெல்லாம் நித்யானந்தம் சிந்திக்காதது இல்லை.

ஆனால், அவருக்கு விடைதான் தெரியவில்லை.

நித்யபூரணனின் கேள்விகள் அவரை யோசிக்க வைத்தன.

தள்ளாமை காரணம் என்று சொல்லிக்கொண்டு பேரனை, நிர்வாகி ஆக்கினார். 'என்ன வேண்டுமானாலும் செய்' என்று ஒதுங்கிக் கொண்டார்.

அவனுக்கிருந்த வேகத்தில் தலை சிறந்த விஞ்ஞானிகள் சிலரைக் கூட்டிவந்து ஆராய்ச்சி செய்யச் சொன்னான் நித்யபூரணன். இரண்டு ஆண்டு கடுமையான உழைப்பின் பின் பூரணன் விரும்பியது கண்டுபிடிக்கப்பட்டது. அவர்களது

வாசனைத் தயாரிப்புகளைப் பயன்படுத்திய பின், பல மணி நேரம்... கிட்டத் தட்ட இருபத்தி நாலு மணி நேரம் அந்த அறை நறுமணம் நிலைத்திருப்பதற்கான அடிப்படை கிடைத்துவிட்டது.

இனிமேல், ஒவ்வொரு வாசனையாக அதில் சேர்த்துத் தயார் செய்ய வேண்டியதுதான்.

விஞ்ஞானிகள் எழுதித் தந்த கண்டுபிடிப்பை நித்யபூரணன் அப்படியே வைத்திருக்கவில்லை.

அவனும் கூட யாரும், இங்கே வந்து இதைத் திருடக் கூடும் என்ற கருதினானில்லை.

ஆனால் என்றேனும் யாருக்கேனும் அந்த எண்ணம் தோன்றினாலும், புதுத் தயாரிப்பின் விதி முறை அவர்களுக்கு புரிவதாக இருக்கக் கூடாது என்ற எண்ணத்தில் தயாரிப்புக்கு தேவைப்படும் பொருட்கள் அத்தனைக்கும், மாற்று வார்த்தைகள், எழுத்துக்கள், புள்ளிகள், கோடுகள் என்று பல்வேறு சங்கேதக் குறிப்புகள் கொடுத்து எழுதிவைத்துவிட்டு அசலை அழித்துவிட்டிருந்தான்.

அதன் பிறகே, அப்போதும், சங்கேதக் குறிப்புகளில் எழுதப் பட்டிருந்த பார்முலாவைத்தான், நித்யபூரணன் அவனுடைய தாத்தாவிடம் காட்டியதே.

ஃபார்முலாவைப் பார்த்துப் பெரியவருக்கும் பரவசமே பொறுப்பைக் கொடுத்ததற்குப் பேரன் சாதித்துக் காட்டிவிட்டானே அல்லவா? தன் பிள்ளைகளிடம் காட்டி மகிழ எண்ணி அவரே தானே வைத்திருந்தார். அப்படியே காட்டவும் செய்தார்.

நித்யபூரணனுடைய தந்தை சிற்றப்பாக்கள், மூவருடைய மகன், மகள்கள் என்று குடும்பத்தில் எல்லோருக்குமே இந்த பற்றிப் பெருமைதான்.

குடும்பத்தில் முதல் பேரக் குழந்தை என்பதோடு சிறுவயதில் இருந்தே, அவன் கெட்டிக்காரனாக வளர்ந்ததும், கூடவே

எல்லோரும் ஒரே குடும்பம் என்கிற உணர்வும் ஊக்குவிக்கப் கிழ்ச்சியுற்றது.

அம்மா, சித்திகள் எல்லோரும் சேர்ந்து விருந்து மைத்தார்கள்.

வீடே கோலாகலமாக இருந்தது.

அதன்பிறகு தயாரிப்பு வேலைகளுக்காக நித்யானந்தத்திடம் ரணன் ஃபார்முலாவைக் கேட்ட போதுதான் அது திருட்டுப் போயிருந்ததே, வீட்டாருக்குத் தெரிய வந்தது.

யாரைக் குற்றம் சொல்வது?

பல லட்சம் பணத்தைக் கூட, அதே அலமாரியில்தான் வைத்து எடுப்பது. பல்லாண்டு காலமாக.

மூன்று மகன்களுக்கும் தனித்தனி வீடு என்றாலும் எல்லோருமே பெரியவரை அடிக்கடி வந்து பார்த்துவிட்டுப் போவது வழக்கம். பிறந்த நாளோ, கல்யாண நாளோ கொண்டாடுவது அங்கேதான். பேறுகாலமோ, மசக்கையோ நித்யானந்தத்துடைய மனைவி கனகத்தின் துணைதான் பெண்களுக்கு! இப்போது பேத்திப் பெண்கள் இருவருக்குக் குழந்தை பிறந்த போது கூட அப்படித்தான் அவரவர் வீட்டுக்கு விருந்தினர் வந்தால் கூட இங்கே கூட்டி வந்து விடுவார்கள்.

பழமரம் தேடி வரும் பறவைகள் போல, நித்யானந்தத்தின் வீட்டில், விருந்தினருக்கும் குறைவிராது.

இந்தக் கூட்டத்தில் இது எப்போது எப்படிப் போயிற்று என்று யாரைக் குற்றம் சொல்வது?

அலமாரியில் எதையாவது எடுக்கும்போது தவறி விழுந்து தொலைந்திருக்குமோ என்ற சந்தேகம் நித்யானந்தத்துக்கு வந்து மறைந்தது.

அவர் மனைவி அவ்வளவு அலட்சியமாக எதையும் கையாளுகிறவள் அல்ல. ஒரு பொருள் அலமாரியிலிருந்து விழுவதைக் கவனியாது இருந்திருக்க மாட்டாள் என்பதோடு மொழி தெரியா விட்டாலும் அவருடைய மனைவி கனகத்துக்கு ஆங்கில மொழியில் ஏதாவது எழுதியிருக்கும் தாள் என்றால் மகாக் கவனம் உண்டு. ஏதேனும் முக்கியமான பத்திரமாக இருக்கும் என்று வேண்டாத காகிதங்களைக் கூடப் பத்திரப் படுத்தி வைப்பாள். அப்படியிருக்க இந்த ஃபார்முலாவைத் தொலைய விட்டிருக்க மாட்டாள்.

நித்யபூரணனுக்கும். தன் பாட்டி மீது அதே நம்பிக்கை இருந்தது.

ஃபார்முலா திருடப்பட்டிருக்குமோ என்ற சந்தேகம் தோன்றியது அதனால்தான்.

எடுபிடிக்கு உதவியாளனாக இருந்த பாண்டி. தன் ஊரான தஞ்சைக்குப் போய் வருவதாகச் சொல்லிச் சென்றவன் திரும்பி வரவில்லை. அவனது சாமான்களையும் ஒன்று விடாமல் எடுத்துச் சென்றிருக்கிறான் என்று தெரிந்ததும். இது நிச்சயமாகத் திருட்டுதான் என்ற முடிவுக்குத் தாத்தாவும் பேரனும் வந்தார்கள்.

அதன் பிறகே பாண்டி என்ற பெயர் உடையவன், எப்படித் தஞ்சாவூர்க்காரனாக இருக்க முடியும் என்கிற சந்தேகம் காலம் கடந்து வந்தது.

பாண்டியின் பெயரே... இந்தத் திருட்டின் மூலகர்த்தாவையும் பூரணனுக்குக் காட்டிக் கொடுத்தது.

சொந்த ஊராகத் தஞ்சையைக் குறிப்பிட்டதுதான், அவன் மேல் சந்தேகம் ஏற்படக் காரணமாய் அமைந்தது. ஒன்று அவன் பெயரை மாற்றிச் சொல்லியிருக்க வேண்டும். அல்லது தஞ்சை அவனது சொந்த ஊர் அல்ல.

மேலும் விசாரித்ததில் அவன் மதுரைக்கு டிக்கட் எடுத்தது தெரிய வந்தது. மதுரை மாவட்டத்தில் அவன் ஊர் எதுவோ?

ஆனால் வாசனைப் பொருள் தயாரிப்பில் அவர்களுக்கு அடுத்த இடத்தில் இருப்பவரான நாகேந்திரன் மதுரை மாவட்டத்துக்காரர். அவருடைய மகன்களில் ஒருவனின் பெயரில் பின் பாதி பாண்டியன்தான். பூரணன் படித்த கல்லூரியில்தான் அவனும் படித்தான். ஆனால் அவன் நல்ல பையன். பாவம். அவனுடைய தந்தையைப் போன்றவன் அல்ல.

மனைவி மக்களைத் துறந்து, இன்னொருத்தியோடு குடும்பம் நடத்தும் அயோக்கியன் அந்தப் பாண்டியனுடைய தந்தை நாகேந்திரன். சின்ன வீட்டிலேயேதான் குடியிருப்பே!

எத்தனையோ மனைவிகள் இருந்த போதும், மும்தாஜிடம் மயங்கிக் கிடந்த ஷாஜஹான் போல, இவள் தான் நாகேந்திரனுக்கு இனிக்கும் சர்க்கரை. அவள் மகள்தான் பட்டத்து இளவரசி.

தகப்பனுக்கு ஏற்ற மகள். ஓர் அவசரம் என்று சொன்னால் கூட "இப்போது அப்பாவைக் கூப்பிட முடியாது. சாரி" என்று

வெட்டெனக் கூறி, முகத்தில் அடித்தாற்போலப் பட்டென்று ரிசீவரை வைத்து விடுவாள்.

ஒருதரம் வெகு சமீபத்தில் நித்யபூரணனுக்கே அந்த அவமதிப்பு நிகழ்ந்திருந்தது. வாசனைப் பொருட்களுக்கான வரியை அரசு திடுமெனப் பல மடங்கு உயர்த்தியதை எதிர்த்து மந்திரியைப் பார்த்து மனுக் கொடுக்க நாகேந்திரனையும் உடன் அழைக்க வேண்டியிருந்தது. தலைமைப் பதவி வெகு காலமாகவே 'பரிமள'த்திடம்தான். எனவே பூரணனே அவரைக் கூப்பிட நேர்ந்த போதுதான் இந்த மூக்கறுப்பு நிகழ்ந்தது.

மரியாதை தெரியாத பெண் என்று மனதிற்குள்ளேயே திட்டியிருக்கிறான்.

பெற்றோர் கொடுக்கும் செல்லம் பேயாக வளர்த்து வைத்திருக்கிறது.

தகப்பனும் பேயன்தானே?

சொந்த வாழ்வில் இருக்கும் குணக்கேடு, தொழிலிலும் வந்திருக்கிறது. திருடவும் துணிவு வந்திருக்கிறது.

வெறும் சந்தேகத்தை மட்டும் வைத்து முடிவு கட்டக் கூடாது என்று போட்டியாளர் நாகேந்திரனின் நடவடிக்கைகளை பூரணன் உளவு பார்த்தான்.

அவர் புது மாதிரி தயாரிக்க முயன்று தூரக் கொட்டியது தெரிய வந்தது. அடுத்து விஞ்ஞானிகளை அழைத்து வந்து ஆராய்ச்சி செய்தது. கடைசியாகக் கடனுக்கு முயற்சி செய்வது வரை அறிந்ததும் ஃபார்முலாவைத் திருடியது அவரே என்பது அவனுக்கு உறுதியாயிற்று. நிதி நிறுவனம் அவருக்குப் பெரும்தொகை அளிக்க முன் வந்திருப்பதும் தெரிந்தது.

அவ்வளவு எளிதாக நாகேந்திரன் ஃபார்முலாவை அறிந்து கொண்டுவிட முடியாதுதான். பெருமுயற்சி செய்ய வேண்டும்

ஆனால் அடிப்படையாகக் கலக்கப்படும் மூலப் பொருட்கள் அதே தொழிலில் இருப்பவர்களுக்குத் தெரியாதிருக்க முடியாது. பல்வேறு அளவுகளில் மூலப் பொருட்களைச் சேர்த்துப் பலதரம் முயன்றால் ஒரு தரம் அதிருஷ்டம் இருந்து சரியான கலவையும் கிட்டி விடலாம்.

அப்படிக் கிட்டுவதற்கு முன் ஃபார்முலாவைத் திரும்பப் பெற வேண்டும்.

நாகேந்திரன் பயன்படுத்திவிடக் கூடாது என்பது மட்டுமின்றி பூரணனின் தயாரிப்புக்கே அந்த ஃபார்முலா தேவைப்பட்டது.

அவனும் சேர்ந்திருந்து உழைத்துக் கண்டு பிடித்ததுதான் என்ற போதும் எந்தெந்த நிலையில் எதையெதை எந்தெந்த அளவுகளில் சேர்க்க வேண்டும் என்ற வெகு துல்லியமான கணக்கீட்டுக்கு அவனுக்கும் அந்த ஃபார்முலா வேண்டியிருந்தது.

அதில் ஒரு சிறு தவறு மிகச் சிறு தவறு நேர்ந்தாலும் எல்லாமே பயனற்றுப் போனதைப் பூரணன் ஆராய்ச்சியின் போது நேரடியாகக் கண்டிருந்ததால் ஃபார்முலா இல்லாமல் தானாக வேறு முயற்சி செய்து பார்க்கவும் அவனுக்கு மனமில்லை.

அத்தோடு இரண்டு ஆண்டு காலமாகப் பெரும் பொருள் செலவு செய்து கஷ்டப்பட்டு உழைத்துக் கண்டு பிடித்தது அவன். நேர்மையற்ற இந்த மனிதர் அதைத் திருடிக்கொண்டு போய்ப் பயன்படுத்தி வெற்றி பெறுவதா?

பாடுபட்டவன் அவன்; பலனை அனுபவிப்பவன் இன்னொருவனா?

நியாயமான இந்த ஆத்திரம் நித்யபூரணனை ரொம்பவே துடிக்க வைத்தது.

எப்படியாவது அந்த ஃபார்முலாவைத் திரும்பக் கைப்பற்றியாக வேண்டும்.

நேர்வழியில் அதை மீண்டும் பெறுவது மிகக் கடினம். கோர்ட்டுக்குப் போவதால் பயனில்லை. ஏனெனில் ஃபார்முலாவை இன்னமும் பதிவு செய்யவில்லை. அது என்னுடையது என்று சட்டப்படி சண்டையிட முடியாது.

ஆனால் அதை அடைந்தாக வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்தே இல்லை. ஏனெனில் அது அவர்களது சொத்து. அவர்கள் சொத்து அடுத்தவனுக்கு ஏணிப்படி ஆகக் கூடாது.

எப்படிக் குறுக்கு வழியில் நாகேந்திரன் அதைக் கைப் பற்றினாரோ அதே போல குறுக்கு வழியிலேனும் அதைத் திரும்ப அடைந்தாக வேண்டும்.

அதற்கான வழி முறைகளைத் தீவிரமாக ஆராய்ந்த நித்யபூரணன் ஒரு முடிவுக்கு வந்தான்.

அதைத் தனியாக நிறைவேற்ற இயலாது என்பதால் அவனுடைய சித்தப்பாக்களின் மக்களான இரு தம்பிகளையும் சேர்த்துக் கொண்டான்.

அந்த வீட்டுக் கடைசித் தலைமுறை அத்தனை பேருக்குமே நித்யபூரணன் பெரிய ஹீரோ. அவன் ஒன்று சொல்லவும், பரத் மகேஷ் இருவருமே தலை கீழாக நிற்கவும் தயாரானார்கள்.

"அந்த நாகேந்திரனைப் பிடித்து வந்து அடித்து உதைத்து ஃபார்முலாவை வாங்கலாமா?" என்றான் ஒருவன்.

"அந்தாளைப் போலவே நாமும் திருடி வந்து விடலாமா?" என்று வினவினான் அடுத்தவன்.

"அதெல்லாம் சரி வராதுடா. அவர் அதை எங்கே ஒளித்து வைத்திருக்கிறார் என்று தெரியாதே" என்றான் பூரணன். "அத்தோடு அவர் அடியாள் ஒருவனைக் கூடவே வைத்திருப்பவர். அதனால் நான் ஒரு திட்டம் வைத்திருக்கிறேன்" என்று தன் திட்டத்தைத் தம்பிகளுக்கு விளக்கினான்.

"சூப்பர் திட்டம் அண்ணா. யார்யார் என்ன செய்ய வேண்டும் என்று சொல்லுங்கள்."

"முதலில் நம் மாமல்லபுரம் விருந்தினர் விடுதியைச் சுத்தம் செய்ய வேண்டும். சுத்தம் என்றால் தண்ணீர் குழாய், நெட்லான் அந்த மாதிரி எல்லாமே பார்க்க வேண்டும். வேலை முடிந்ததும் சொக்கனை வேறு போக்குக் காட்டி அனுப்பி விட வேண்டும். அப்புறம் ரொட்டி, சிப்ஸ் என்று சாப்பாட்டுப் பொருட்கள் கொஞ்சம்.. கொஞ்சமென்ன நிறையவே வாங்கி வைக்க வேண்டும். அப்புறம் அங்கே இருக்கும் டெலிபோன் கருவியை எங்கேனும் வைத்து பூட்டிவிட வேண்டும்."

"மிரட்டுவதையெல்லாம் செல்லிலேயே பண்ணிக் கொள்ளலாம் என்கிறாயாண்ணா?"

"டேய், டேய், எனக்குத் தெரியாமல் அது போல எதையும் எப்போதேனும் செய்துவிடாதே. செல் பேச்சைத் துப்புத் துலக்குவது எளிது. நாம் செய்ய இருப்பதோ பயங்கரத் தப்புக் காரியம். இந்த வேலை நாம் செய்தோம் என்பது யாருக்குமே தெரியக் கூடாது. போலீசுக்கு மட்டுமல்ல, நம் குடும்பத்துக்குக் கூட ஒரு போதும்."

"ம்ம்ம்.. அவள் சொல்லிவிட மாட்டாளா?"

"சொல்லலாம். ஆனால் அவள் வார்த்தை மட்டும்தானே? நாம் இல்லை என்றால் யாரால் மறுத்துக் கூற முடியும்? நம் வெற்றியைக் கண்டு பொறாமையில் நம் பெயரைக் கெடுக்கவென்று கதை கட்டுவதாகச் சொல்லி நாம் எளிதாகத் தப்பித்து விடலாம். அத்தோடு அவளை நாம் எதற்காகக் கடத்த வேண்டுமாம் என்று நோக்கத்தைக் கேட்டால் அவர்களால் என்ன பதில் சொல்ல முடியும்? உண்மையைச் சொன்னால் முதல் திருட்டை ஒத்துக் கொள்ள வேண்டியிருக்கும் என்று பேசாமல் கமுக்கமாகவே இருந்து விடுவார்கள். இதில் நமக்குத்

தேவை துணிச்சல் மட்டும்தான். ஏனெனில் நாம் வளர்ந்த முறைக்கு இது முற்றிலும் மாறானது. அதனால் குழம்பி தயங்கியோ, தவறாகச் செய்தோ, எதையும் கெடுத்துக்கொண்டு விடக் கூடாது" என்று பெரியவன் சொன்னதற்கு இருவரும் தலையாட்டினர்.

"நீ சொல்லு அண்ணா. அதை அப்படியே நாங்கள் செய்கிறோம். இதெல்லாம் உனக்குத்தானே நன்றாகத் தெரியும்" என்ற பரத் பணிவாகச் சொல்ல அதற்கு அடுத்தவன் மகேஷ் 'ஆமாம்' போடவும், ஒரு கணம் திகைத்த உடனேயே அடக்க மாட்டாமல் நகைத்தான் பூரணன்.

"என்னண்ணா? என்ன? என்ன வேடிக்கை?" என்று இரு தம்பிகளும் பரபரக்கவும் சிரிப்பை அடக்கிக் கொண்டு அவன் விளக்கினான்.

"என்னடா நாம் செய்யப் போவது தப்புக் காரியம் எச்சரிக்கையோடு செய்யவேண்டும் என்று எச்சரித்தால் என்னையே பயங்கர வில்லனாக்கி விட்டீர்களேடா" என்று சோகமாகச் சொன்னான்.

இருவரும் சற்றுத் திகைத்துப் பின் தெளிந்து சிரிக்கத் தொடங்கினர்.

கூடச் சேர்ந்து சிரித்துவிட்டு "ஆக நீங்கள் மட்டும்தான் தப்பு தண்டாவுக்குப் போகாத உத்தமப் பிள்ளைகள். நான் அதெல்லாம் கற்றுத் தேர்ந்தவனாடா? ம்? ஆனாலும் அநியாயம்டா தம்பிகளா" என்று நகை முகத்துடனேயே மூத்தவன் கூற மற்ற இருவரும் அசடு வழிந்தனர்.

"அதில்லை அண்ணா, நீ ரொம்பக் கெட்டிக்காரன். நீ சொல்லுகிற மாதிரி அப்படியே செய்கிறோம் என்று சொல்ல நினைத்தோம். ஆனால் தப்பாக உளறிக் கொட்டி விட்டோம்." மகேஷ் விளக்க "ஆமாண்ணா" என்று இப்போது பரத் ஒத்து ஊதினான்.

முறுவலோடு அந்த விளக்கத்தை ஏற்று "புரிகிறதும்மா. ஆனால் இந்த மாதிரி குழப்பம் எதுவும் பிறகு வந்துவிடாமல் பார்த்துக் கொள்ளுங்கள். சரிதானா?" என்று எச்சரிக்கையோடு அன்றையப் பேச்சை நித்யபூரணன் முடித்தான்.

அன்றையப் பேச்சில் அணுப்பிசகாமல் திட்டமிட்டபடி அந்தப் பெண்ணை காரிலும் ஏற்றி வெகு தூரம் கொண்டு போய்விட்டார்கள்.

ஆனால்... அவளைக் கடத்தி அவளைத் திருப்பி அனுப்பப் பணயமாக அவர்களது ஃபார்முலாவைக் கேட்டுப் பெறுவது தான் அவர்களின் திட்டம்.

ஆனால் அவள் கொன்று விடும்படி கேட்கிறாளே.

சாகத்தான் ஆசை என்று கூறிய விதத்திலும் குரலிலுமாக நித்யபூரணன் முதலில் திகைத்தது உண்மைதான்.

ஆனால் சின்னவன் கையில் கார் தடுமாறவும் "டேடேய், பார்த்து, பார்த்து ஓட்டு" என்று எச்சரித்தான்.

பரத் ஒழுங்காக ஓட்டத் தொடங்கியதும் "இந்தப் பேச்சைப் போய் நம்பி விட்டாயா? இவர்கள் எல்லாம் அப்படி எளிதாகச் செத்துவிட மாட்டார்கள் தம்பி. அப்பன் புத்தி பாதி இருந்தாலும் நம்மை மாதிரி ஆட்கள் பத்துப் பேரைச் சாகடித்துவிட்டுத்தான், இவர்கள் மேலே போவார்கள். எல்லாம் நம்மை ஏய்ப்பதற்காகச் சொன்னது. சும்மா வெறும் பொய். பரிதாபப்பட்டு விடுவித்து விடுமாறு நம்மைத் தூண்டும் ஒரு தந்திரம். அவ்வளவுதான்" என்றான் அலட்சியமாக.

"அப்படியில்..." என்று மறுக்கத் தொடங்கிய அவள், சொல்லிப் பயன் என்ன என்பது போல ஒரு தலையசைப்புடன் வாயை மூடிக் கொண்டாள்.

அல்லது எதற்குச் சொல்ல வேண்டும் என்று அலட்சிய மாகவும் இருக்கலாம்.

பின்னதுதான் உண்மையாக இருக்க வேண்டும்.

பட்டினி கிடந்து, உடலின் வலு குறைந்து போயிருந்த போதும், மூளை நன்றாகவே வேலை செய்கிறது. தந்தை வழிச் சொத்தாக வந்த குயுக்தி. தாய் மட்டுமென்ன? மணமாகிப் பிள்ளைகளோடு இருக்கும் ஒருவனைக் குடும்பத்திலிருந்து பிரித்து தன்னைச் சுற்றி வருமாறு செய்திருப்பவள்தானே? சட்டம் நியாயம் எதையும் மதிக்காத அந்தத் திமிரும் இவளுக்கு நிறையவே இருக்கும்.

ஆனால் இந்த திமிர் தந்திரம் எல்லாம் அவனிடம் செல்லாது.

வைரத்தை வைரத்தால் அறுப்பது போல மற்றவர்கள் என்னென்ன மந்திர தந்திரம் செய்தாலும் அவர்களை விட அதிகத் திறமையோடு செயல்பட்ட அவர்களை வெல்லும் வலிமை அவனுக்கு உண்டு.

அத்தோடு பல முறை எண்ணியெண்ணிப் பார்த்து அவன் துணிந்து செய்திருக்கும் கருமம் இது. வெற்றி கிட்டும்வரை யார் என்ன நாடகம் போட்டாலும் இடையில் விட்டுவிடமுடியாது.

அடுத்த முக்கியமான திருப்பம் நெருங்கிக் கொண்டிருந்தது. அந்தத் திருப்பத்தை இவள் கவனித்துவிட்டால் பின்னொரு தரம் அதை அடையாளம் காட்டி அவர்களது இருப்பிடத்தையும் கண்டு பிடித்துவிட முடியும்.

அடர் நிறம் ஒட்டிய கண்ணாடிக் கதவை ஏற்றியிருந்த ஏசி காரில் அவள் இருப்பது வெளியே தெரியாது என்பதோடு

கத்தினாலும் லேசில் வெளியே கேட்காது. ஆனால் அவளால் பார்க்க முடியுமே!

எனவே அவள் கண்ணைக் கட்டிவிட எண்ணி அதற்காக வென்று பையினுள் வைத்திருந்த பெரிய துணியை உருவி எடுத்தபடி அவளை அணுகினால் அப்போதுதான் சுய உணர்வு வந்தவள் போல அவள் சட்டென அவளது பக்கக் கதவுப்புறமாக ஒதுங்கினாள். அத்தோடன்றி கார்க் கதவையும் திறக்க முயன்றாள்.

என்ன இப்போதுதான் கடத்தப்படுவதே அம்மையாரின் மண்டைக்குள் உறைக்கிறதா? இவ்வளவு நேரம் ஏசி காரில் சந்தோஷச் சவாரி என்று எண்ணினாள் போலும்.

"இந்தக் காரின் கதவுகளை காரோட்டியின் ஒத்துழைப் பின்றித் திறக்க முடியாது" என்று ஏளனமான குரலில் பூரணன் கூறவும் வினாடிக்குள் அவள் முகம் ரத்தப் பசையற்றது போல வெளுத்தது.

அகல விரிந்த கண்களில் பயவெறி வேறு.

அவள் மனதில் ஓடும் எண்ணங்களைக் கணத்தில் ஊகித்தவனாய் அவன் உதட்டைப் பிதுக்கினான். "பயப்படாதே. இந்த அமைப்பு காரில் செல்லும் சின்னப் பிள்ளைகள் தானாகக் கதவைத் திறந்து விபரீதமாகி விடக்கூடாது என்பதற்காக ஏற்படுத்தியதே தவிர, உன்னைப் போன்ற இளம் பெண்களைக் கடத்திச் செல்லும் வசதிக்காக அல்ல. நாங்கள் அப்படிப் பட்டவர்கள் அல்ல" என்று தெளிவுபடுத்தினான்.

கண்களின் பயம் முழுமையாக மறையாவிட்டாலும் "பி பின்னே என்னை ஏன் இப்படி... என்னை... நீங்கள் இருவரும் என்னைக் கடத்தத்தானே செய்கிறீர்களே?" என்று கேட்டாள் அவள்.

"கடத்தத்தான் செய்கிறோம். ஆனால் அதனால் உனக்
எந்தத் துன்பமும் நேராது. நம்புவது கடினமாக இருந்தாலும் இ
உண்மையே! விவரம் பிறகு சொல்கிறேன். இப்போது செல்
வழி தெரியாமல் இருப்பதற்காக உன் கண்ணைக் க
வேண்டும். ஒத்துழைத்தால் உனக்கு நல்லது. மற்றபடி நா
முரட்டுத்தனம் காட்ட வேண்டியிருக்கும்" என்று எச்சரித்தல
மீண்டும் துணியோடு அவள் அருகே நகர்ந்தான் அவன்.

மீண்டும் அவள் புறத்துக் கதவோடு ஒட்டிக் கொள்கிறவ
போல முடிந்தவரை விலகி "செல்லும் வழியை நான் பாரா
இருக்க வேண்டும். அவ்வளவுதானே? நான் சீட்டிலிருந்
இறங்கி கீழே பார்த்தபடி உட்கார்ந்து கொள்கிறேன். ஆ
போதும்தானே? என்னைத் தொட வேண்டாம். ப்ளீஸ்" என்
அவள்.

சொன்னதோடு நில்லாமல் கீழிறங்கி உட்புறம் திரும்
பக்கவாட்டு நிலையில் தலை கவிழ்ந்து அவள் அமர்ந்துவிட
தோளைக் குலுக்கிவிட்டு அவனும் சும்மா இருந்தான்.

என்னவோ அவள் மகா ரதி போலவும் அவளைத் தொ
அவன் துடித்துக் கொண்டு இருப்பது போலவும் நினைக்கிறாள்
அல்லதுதெருவில் தனியாகச் செல்லும் பெண்களைக் கடத்
கெடுக்கும் கும்பல் என்று அவர்களை எண்ணிவிட்டாளா?

எல்லாமே கேவலம்தான்!

ஆனால் இப்படி ஒரு பிரச்சினையை அவளுடைய தந்
ஏற்படுத்தியதால் அல்லவா இந்த நடவடிக்கை அவன் எடு
நேர்ந்தது? மற்றபடி அவள் முகத்தைக்கூட அவன் பார்த்திரு
மாட்டானே?

ஆயினும் கண்ணைக் கட்டாவிட்டால் திடுமெனத் தன்
பாய்ந்து விடலாம் என்று அவள் திட்டமிடுகிறாளோ எ
சந்தேகமும் தோன்றி விட அவள் மீது ஒரு கண்
வைத்தவாறு நித்யபூரணன் எச்சரிக்கையுடனேயே இருந்தா

ஆனால் கால் வைப்பதற்கான அந்தச் சின்ன இடுக்கிலிருந்து
அவனைத் தாக்குவதோ. அப்படி ஒன்றும்
மெல்லிய மேனி என்பதால் பக்கவாட்டில் திரும்பி
முடிந்தது. அவ்வளவே. வேறு முயற்சி சாத்தியமல்ல.

ஆனால் அவள் அப்படி எந்த முயற்சியும் செய்தாளில்லை.
நீட்டினால் அவன் கால் மீது இடிக்கும். அதைத் தவிர்க்க
முட்டுக் கூட்டி அமர்ந்தவள் தன் தலையே
பார்த்தபடி.

நல்ல வேளையாகக் காரும் உயர் ரகம் என்பதோடு
இருந்தது. மற்றபடி பயணமே அவளுக்குச்

ஆனால் அந்த மாதிரி உடல் உபாதைகள் எதையும் எண்ணிப்
கூடத் தோன்றாதவள் போல அந்தப் பெண் சோர்வுடன்
நிலை நித்யபூரணனை உறுத்தியது.

அவளுக்கு ஏதும் உடம்பு சரியில்லையா?

அப்படியிருந்தால் அவளுக்கு எப்படி வைத்தியம் பார்ப்பது?

எதிரியுடைய மகள் அதனால் அவள் எப்படியோ சாகட்டும்
விட்டுவிட முடியாதே.

அவளைக் கடத்திக் கொண்டு வந்ததிலிருந்து அவளது உடல்
பற்றிய பொறுப்பு அவனது ஆகிவிடுகிறது என்பதோடு
அவள் யாராயிருந்தாலும் இன்னொரு மனிதப் பிறவியின்
வதனையைச் சும்மா பார்த்துக் கொண்டிருப்பது எப்படி?

ஆனால் இதெல்லாமே அவளது இளக்கத்தைத் தூண்டி
டுவதற்கான நடிப்பாகவும் இருக்கலாம் என்று யோசித்துப்
டிவாதமாக மனதை கடினப்படுத்திக் கொண்டான் அவன்.

சற்று நேரம் அப்படிச் சோர்ந்து கிடந்தபின் லேசாகத் தலையை உலுக்கிக் கொண்டு அவள் கேட்டாள். "விவரம் சொல்லுவதாகச் சொன்னீர்களே. ஒரு பெண்ணை-என்னைக் கடத்தி எதைச் சாதிக்கப் போகிறீர்கள்?" என்று விழி உயர்த்தாமலே விசாரித்தாள்.

குண்டூசிக் குத்தலா?

"அந்தப் பெண்ணின்-அதாவது உன் தந்தை என் எதிரியாக இருந்தால் எத்தனையோ சாதிக்கலாம்தானே?" என்று பதில் கொடுத்தான் பூரணன்.

"எப்படி?"

"அருமைப் பெண்ணுக்கு ஆபத்து என்றால் நான் சொல்வதை நாகேந்திரன் அலறிப் புடைத்துக் கொண்டு செய்வாரே."

வியப்பும் ஏளனமுமாக அவனை நிமிர்ந்து பார்த்தாள் அவள். 'அட. பைத்தியமே' என்று அழைப்பது போல அதைவிட மோசமாக 'அட முட்டாளே' என்றது அவளது பார்வை.

"கண்ணைக் கட்டி விடுவதுதான் நல்லதோ?" எனச் சுள்ளென அவன் கேட்டபடி அவன் துணியோடு நகரவும் அவள் நத்தையாய்ச் சுருங்கினாள்.

"வேண்டாம். இனி நிமிர மாட்டேன். ஆனால் நீங்கள் நினைத்தது- நினைத்துக் கொண்டிருப்பது எல்லாம் தப்பு எனக்காக. என் தந்தை. எதுவும் செய்ய மாட்டார்" என்றாள் அவள்.

"இந்தக் கதையை நம்ப என் காதில் பூ சுற்றியிருக்கவில்லை உன் அம்மாவுக்காகவும். உனக்காகவும். மனைவி மக்களை யெல்லாம் கைவிட்டுவிட்டு உங்கள் வீடே கதி என்று கிடக்கிறார் அவர் உனக்காக ஒன்றும் செய்ய மாட்டாரா? அதையும்

பரிசோதித்துப் பார்த்துவிடுவோமே" என்றான் அவன் ஏளனமாக.

"ஒரு வேளை நீங்கள் விரும்புவதை அப்பா செய்ய மறுத்துவிட்டால்?" என்று சின்னக் குரலில் கேட்டாள் அவள்.

சகோதரர்கள் மீண்டும் திகைத்துப் போனார்கள்.

பரத் காரை நிறுத்திய வேகத்தில் அவள் அதிர பூரணன் சுதாரித்து "என்னடா நாய். நரி ஏதேனும் திடுமெனக் குறுக்கே பாய்ந்துவிட்டதா? நல்ல வேளை. கவலைப்படும்படியான பிரச்சினை எதுவும் இல்லை. காரை ஓட்டும்போது இதற்கெல்லாம் தயாராக இருக்க வேண்டாமா? சற்றுப் பார்த்து ஓட்டு" என்ற தம்பிக்குக் குறிப்புக் கொடுத்தான்.

அதை ஏற்று "சரியண்ணா. குறுக்கிட்டது நரி. காலையில் பார்த்திருந்தால் அதிருஷ்டமாகி இருக்கும். ஆனால் இப்போது..." என்றபடி மீண்டும் காரை எடுத்தான் பரத்.

"இப்போது மட்டுமென்ன? நரி எப்போதும் நரிதானே? இப்போது பார்த்தாலும் நமக்கு அதிருஷ்டமாகத்தான் முடியும்" என்று அழுத்தமான குரலில் தம்பியிடம் கூறியவன், அவள் தன் தோளைத் தடவி விட்டுக் கொள்வதைக் கவனித்து "சாரி. இந்த மாதிரித் துன்பங்கள் தருவது எங்கள் திட்டம் அல்ல. நீ கொஞ்சம் கவனத்துடன் நடந்துகொண்டால் இது கூட நேர்ந்திராது" என்றான் பூடகமாக.

குனிந்திருந்த முகத்தை அவள் உயர்த்திப் பார்க்கா விட்டாலும் அவளது புருவம் யோசனையில் சுளிப்பதைக் கவனித்து இவள் முட்டாளல்ல என்று பூரணன் எண்ணினான்.

அதை மெய்ப்பிப்பது போல "சாரி. ஆனால் தவறான அபிப்பிராயத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு சட்டப் படியான ஒரு குற்றத்தைப் பயனற்றுச் செய்கிறீர்களே என்று நினைத்தேன். அதனால்தான் சொன்னேன்," என்றாள் அவள்.

மீண்டும் அவள் பேச்சில் சந்தேகம் வந்தது நித்ய பூரணனுக்கு. அவனைக் குழப்பி இலகுவாகத் தப்பிக்க முயற்சிக்கிறாள் என்று தோன்றிவிட "தவறா இல்லையா என்பதைச் சோதித்துப் பார்த்தே அறிந்து கொள்கிறேன். ஏனெனில் எல்லார் பேச்சையும் முழுசாக நம்பிவிட முடியாதல்லவா?" என்றான் அசட்டையாக.

என்ன எண்ணினாளோ அதற்கு மேல் அவள் எதுவும் பேசவில்லை.

நெடுஞ்சாலையிலிருந்து பிரிந்து ரொம்ப தூரம் உள்ளே சென்ற பிறகுதான் நித்யானந்தம் குடும்பத்தாரின் விருந்தினர் விடுதி வரும். அதுவும் வழி நெடுக அங்கங்கே சவுக்குத் தோப்புகள் நிறைந்த பகுதியாதலால் அந்தச் சிறு பங்களாவைக் கண்டுபிடிப்பது கடினம்.

எனவே வீட்டை அடைந்தபின் அவளது கண்ணைக் கட்ட வேண்டும். பார்வையை மறைக்க வேண்டும் என்றெல்லாம் பூரணன் நினைக்கவில்லை.

காரை விட்டு இறங்கி சற்று கைகால்களை நீட்டி இயல்பு நிலைக்குக் கொண்டு வந்தவாறே அவள் சுற்றுமுற்றும் பார்க்கத்தான் செய்தாள். ஆனால் பழையகாலக் காட்டு அரணைப் போலப் பல்வேறு நிலைகளில் இருந்த சவுக்குத் தோப்புகளைக் காணவும், ஒரு நெடு மூச்சுடன் அவள் பேசாதிருந்து விட்டாள்.

உள்ளே சென்றதும் உட்காரச் சொல்லிவிட்டு சமையல் அறைக்குச் சென்று மூன்று குளிர்பானக் 'கேன்'களை எடுத்து வந்து காவலாய் நின்ற தம்பியிடமும், சேர்ந்து அமர்ந்திருந்த அவளிடமும், ஆளுக்கு ஒன்றைக் கொடுத்துவிட்டுப் பூரணன் தானும் ஒன்றை அருந்தினான்.

தாகம் தீர்ந்ததும் "உன் வீட்டில் எப்போது உன்னைத் தேட தொடங்குவார்கள்?" என்று அவளிடம் விசாரித்தான்.

குளிர்பானம் கொஞ்சம் புத்துணர்ச்சியை அளித்ததோ என்னவோ?

"ஆகா, இதையெல்லாம் உங்களிடம் எப்போது சொல்வது என்றுதானே நான் காத்துக் கொண்டிருக்கிறேன்" என்றாள் அவள் கிண்டலாக.

"கேட்ட கேள்விக்கு உளறாமல் ஒழுங்காகப் பதில் சொல்லு" என்று அதட்டினான் பரத்.

தலை சரித்து நோக்கி "இந்த விவரம் எல்லாம் சரியானதாகச் சொல்லுவேன் என்று உங்களுக்கு என்ன நிச்சயம்?" என்று சற்றே ஏளனம் கலந்த குரலில் அவள் வினவ, பரத் வெளிப் படையாக அதிர்ந்தான்.

ஆனால் "சீக்கிரமாக வீட்டுக்குப் போக ஆசையிருந்தால் கட்டாயம் சொல்லுவாய்" என்ற பூரணன் அமர்த்தலாகவே மொழிந்தான்.

அப்போதும் அவளது பாவனை மாறவில்லை. "ஒரு வேளை சீக்கிரமாக வீட்டுக்குப் போக நான் ஒன்றும் துடித்துக் கொண்டிருக்கவில்லை என்றால்?"

இப்போது நித்யபூரணனும் அதிர்ந்தான். "ஏய்.. ஏய்.." என்று மேலே வார்த்தை வராமல் திணறினான்.

"என் பெயர் 'ஏய்' இல்லை. பவித்ரா" என்றாள் குரலில் சிறு அழுத்தத்துடன். அவளை வெறித்து நோக்கிவிட்டு "தெரியும்" என்றான் அவன் சுருக்கமாக.

"பவித்ரா என்றால் தூய்மை என்று அர்த்தம். இல்லையாண்ணா?" என்று கேட்டான் பரத். "நல்ல பெயர்."

"பெயருக்கென்ன? யார் வேண்டுமானாலும், என்ன பெயர் வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம். நஞ்சு நிறைந்த பாம்பை, நல்ல பாம்பு என்று அழைப்பதில்லையா?" என்று

தம்பியிடம் மொழிந்தவன் அவள் பக்கம் திரும்பி "இவ்வளவு
கணக்கிட்டு உன்னைக் கடத்தி வந்திருக்கிறோம். உன் பெய
தெரியாமலா இருக்கும்? உன் பெயரும் தெரியும். உ
சரித்திரமும் நன்றாகத் தெரியும். அதனால்தான் உன் தந்
என்னிடமிருந்து திருடிப் போன பொருளைத் திரும்பிப் பெ
பணயப் பொருளாகப் பயன்படுத்துவதற்காக உன்னை இங்
கொண்டுவந்திருக்கிறோம். உன் தந்தை எங்கள் சொத்
மரியாதையாகத் திருப்பித் தந்துவிட்டால் அவர் மகளா
உன்னையும் மரியாதையாகத் திருப்பி அனுப்பிவிடுவோம்
அப்படித் தரும்வரை உனக்கு பிடிக்கிறதோ இல்லையோ
இங்கேதான் இருந்தாக வேண்டும்" என்றான் கறார் குரலில்.

"திருட்டு வேறா?" என்றவளின் முகம் வாடியது. நிமிர்ந்
இருவர் முகங்களையும் மாறிமாறிப் பார்த்துவிட்டு "திருடுகி
அளவுக்கு அப்பா இறங்குவது என்றால்,, என்னால் நம்
முடியவில்லையே. பணம்.. நகை.. ஊகும். மெய்யாகவே நம்
முடியவில்லையே. அப்பா எதிலும் நஷ்டப்பட்டு விட்டாரா? ஒ
வேளை.. ஒரு வேளை அதனால்தான் இப்படி...." என்
எதையோ யோசித்தவள் சட்டென நடப்புக்கு மீண்
"ஆனாலும் அடுத்தவர் பொருளைத் திருடுவது என்றா
என்னால் நம்ப முடியவில்லை. அப்படி அவர் என்
திருடினார்?" என்று பவித்ரா விவரம் கேட்டாள்.

நம்பாமல் அவள் கேட்ட விதம் ஆத்திரமூட்ட "அ
என்னவாக இருந்தால் உனக்கென்ன? எங்கள் குடும்பத்துக்
சொந்தமான மிக முக்கியமான ஒன்றை அவர் ஆள் வைத்
திருடியிருக்கிறார். அதை அவர் எங்களிடம் திருப்
தரும்வரை உனக்கு விடுதலை இல்லை. அவ்வளவுதா
விஷயம்" என்றான் அவன் அழுத்தம் திருத்தமாக.

அப்படி என்ன பொருளை அவள் தந்தை ஆள் வைத்
திருடக் கூடும் என்று யோசிக்கும் போதே சட்டென பவித்ரா
மனம் பதறியது.

இந்த இருவரும் கூறுவது எந்த அளவுக்கு உண்மை?

அவள் ஓர் இளம் பெண். அவளைப் பிடித்து வந்திருக்கும் இருவரும் இளைஞர்கள். இந்த இருவரிடம் அவள் இப்போது தனியே மாட்டிக்கொண்டு இருக்கிறாள். ஒரு வேளை அவள் தாயார் சொன்ன நூறு பேரைப்போல இவர்கள் பெண்ணாசை பிடித்தவர்களாக இருந்தால். என்ன கேவலங்கள் நிகழக் கூடும்? இதிலிருந்து எப்படித் தப்புவது?

அவளது விழிகள் பீதியுடன் அலைவதைக் கண்டுவிட்டு "கவனி. உன் கௌரவத்துக்கோ, ஆரோக்கியத்துக்கோ, இங்கே எந்தவிதக் குறைபாடும் நேர்ந்துவிடாது. இதை நீ நம்ப வேண்டும்" என்று உறுதியான குரலில் பூரணன் கூறவும் அந்தக் குரலில் அவள் சற்றே அமைதியுற்றாள்.

அண்ணன் கூறியுதன் பொருளை உணர்ந்ததும் பரதனின் முகம் கன்றியது. "சீச்சீ. என்ன மோசமான புத்தி. அப்பனுக்குப் பிள்ளை, இல்லை பெண் தப்பாமல் பிறந்திருக்கிறாள்" என்றான் அருவறுப்புடன். "சே. எல்லோரையும் தன்னைப் பெற்றவனைப் போல எண்ணிவிட்டாள் போல. உடனே இவள் தந்தைக்கு போன் செய்து சீக்கிரமாக இவள் இங்கிருந்து போக வழி செய் அண்ணா. எல்லாம் ஒரே கேவலமாக இருக்கிறது" என்று அருவறுப்புடன் உரைத்தான்.

தோளைக் குலுக்கி "இப்போது உனக்கு இன்னும் கொஞ்சம் நம்பிக்கை உண்டாகியிருக்கும் என்று நினைக்கிறேன். பார் பெண்ணே. உன்னை இங்கே சிறை வைத்து அழகு பார்த்துக் கொண்டிருக்கும் ஆசை, எங்களுக்கும் கிடையாது. எங்கள் குடும்பங்களின் எதிர்காலம் இதில் சிக்கியிருப்பதால்தான் நாங்கள் இந்த அளவுக்குத் துணிந்ததே. சற்று உதவி செய்தாயானால் இருதரப்புக்கும் வெறுப்பான இந்த நிலைமை சீக்கிரம் முடிவுக்கு வந்துவிடும்" என்றான் நித்யபூரணன்.

"சொல்லு. நீ வீடு திரும்பவில்லை என்பதை வீட்டார் எப்போது கண்டுபிடித்துத் தேடத் தொடங்குவார்கள்?"

தரையைப் பார்த்தவண்ணம் ஒரு சில கணங்கள் அவள் மௌனமாக இருந்தாள்.

பொறுமையிழந்து எழுந்த பரதனின் தோள் மீது கை வைத்து அவனைத் தேக்கினான் பூரணன்.

அதற்குள் அவள் நிமிர்ந்து "பொதுவாக.. வந்து.. என்னை வீட்டில் யாரும் தேடத் தேவையிராது. இப்போது நிச்சயமாகத் தேட மாட்டார்கள்..." என்று முடித்தாள்.

"தண்ணீர் தெளித்து விட்டுவிட்ட கேஸ் போல இருக்கிறது" என்றான் பரத் ஏளனமாக. அவள் தங்களைத் தவறாக எண்ணினாள் என்ற கோபம் அவனுக்கு.

அவளையே பார்த்தபடி "இப்போது என்ன தனி?" என்று கேட்டான் பூரணன்.

அவள் பதில் சொல்லாது நிற்கவும் "உன் சொந்த விஷயம் எங்களுக்குத் தேவையில்லைதான். ஆனால் நீ காணாமல் போயிருக்கிறாய் என்று உணர்ந்தால்தானே நீ கடத்தப் பட்டிருக்கக் கூடும் என்றும் அவர்கள் யோசிப்பார்கள்... என்னை ஏதாவது ஒரு சமயம் உன்னைக் காணோமே என்று உன் வீட்டார் தேடுவார்கள்தானே?" என்று அவன் தொடர்ந்து கேட்டான்.

இறுகிய முகத்துடன் "இப்போது தேட மாட்டார்கள். அப்பா நிச்சயமாகத் தேட மாட்டார் அவ்வளவுதான்" என்றாள் அவள்.

"அப்படியானால் அவர் தேடுவதற்காக நாம் காத்திருக்கத் தேவையில்லை" என்ற பூரணன் பரத்தைப் பார்த்தான்.

அவன் அவளுக்குக் காவலாக நிற்க, முன்னவன் பக்கவாட்டு அறையைத் திறந்து உள்ளே சென்று அலமாரியுள் பூட்டி வைத்திருந்த டெலிபோன் கருவியை எடுத்துவந்து மீண்டும் இணைப்புக் கொடுத்தான்.

"உன் தந்தைக்குத்தான்" என்று பவித்ராவிடம் கூறியவன் எதிர் முனையில் யாரோ ரிசீவரை எடுக்கவும் "நாகேந்திரனிடம் பேச வேண்டும்" என்றான்.

நாகேந்திரன் வந்ததும் "பாருங்கள் மிஸ்டர் நாகேந்திரன் உங்கள் மகள் பவித்ரா இப்போது எங்கள் வசம் இருக்கிறாள். அவளைத் திருப்பி அனுப்ப வேண்டுமானால்.." என்று தொடங்கியவனை அவர் மேலே பேசவிடவில்லை.

அவன் பேச்சில் குறுக்கிட்டு "என்ன? கல்யாணத்தை நிறுத்த வேண்டும். அதுதானே? அந்தப் பேச்சுக்கே இடமில்லை. கழுதையை மரியாதையாக வீட்டுக்கு வந்து சேரச் சொல்லு. இல்லாவிட்டால் அவளுக்கு உதவி செய்யும் உன்னை முதலில் தொலைத்துக் கட்டி விடுவேன். சொல்லு அவளிடம். இந்தக் கல்யாணம் நடந்தே தீரும் என்று சொல்லி அவளை இங்கே கொண்டுவந்து சேர்த்துவிட்டு நீயும் தப்பிப் பிழை" என்று உத்தரவிட்டார். அவரது பேச்சுக்குப் பதில் கூறும் வாய்ப்பைக் கூடக் கொடுக்காமல் ரிசீவரை தொப்பென்று அதன் தாங்கியில் போட்டுவிட்டார்.

டெலிபோன் கருவியை மெல்லக் கீழே வைத்த நித்யபூரணனை பரத் திகைப்புடன் நோக்கினான். "என்னண்ணா நம் நிபந்தனை ஒன்றையும் நீ அவரிடம் சொல்லவில்லையே ஏன்? தொடர்பு 'கட்' 'டாகி விட்டதா? இந்த இடத்தில் அவ்வப் போது இது ஒரு பிரச்சினை" என்று அலுத்துக் கொண்டான். "மீண்டும் தொடர்பு எப்போது வருமோ?"

"தொடர்பு விட்டுப் போகவில்லை பரத்" என்று முறுவலித்தான் அவன் அண்ணன்.

"பின்னே?" என்று ஆவலுடன் விசாரித்தான் தம்பி "அவரே இதை எதிர்பார்த்திருந்தாரா? மகள் காணாமல் போனதுமே விஷயத்தை ஊகித்து மகளுக்காக ஃபார்முலாவைத் தந்துவிடுகிறதாய் அவரே முந்திக் கொண்டு சொல்விவிட்டாரா?" என்று பரபரத்தான்.

"அவரா?" என்று லேசாக நகைத்தான் நித்யபூரணன் "ஃபார்முலா பற்றிய எண்ணமே அவருக்கு இல்லை பரத். அவரது பிரச்சினையே வேறு" என்றவன் பவித்ராவை ஒருதரம் பார்த்துவிட்டு "மகளுக்குக் கல்யாணம் பண்ண வேண்டுமாம். அவளை உடனே கொண்டு வந்து சேர்க்காவிட்டால் என்னைத் தொலைத்துக் கட்டிவிடுவாராம்" என்று புருவம் உயர்த்தி கூறினான்.

"என்னது? அப்படியானால் நாம் யார் எங்கே இருக்கிறோம் என்றெல்லாம் அவருக்குத் தெரியுமா?" என்று திகைத்தான் தம்பி.

"ஊகூம். அதெப்படிடா, தெரிய முடியும்? தெரியாது."

"ஐயோ" என்று தலையைப் பிய்த்துக் கொண்டான் சின்னவன். "நீ சொல்வது தலை கால் ஒன்றும் புரியவில்லை. அங்கே மகேஷ் வேறு என்ன என்று காத்துக் கிடப்பான். அவனிடம் என்ன சொல்வது?"

"வெற்றிகரமாகக் கடத்தி வந்துவிட்டோம் என்று மட்டும் சொல்லு . மற்றது வேலை நடக்க நடக்கக் கூப்பிட்டு சொல்வதாகச் சொல்லு. இதையே நினைத்துக் கொண்டு அங்கே வேலையைக் கோட்டை விட்டு விடக்கூடாது என்றும் தெரிவி. முழுப் பொறுப்பும் அவன் கையில் இருக்கிறது என்பதை நினைவுபடுத்து" என்று அவனை அனுப்பிவிட்டு பவித்ராவின் பக்கம் திரும்பினான்.

அவள் நிமிரக் கூட இல்லை.

அவள் எதிரே சென்று அமர்ந்து "என்ன காதலா?" என்று விசாரித்தான் நித்யபூரணன்.

அவளது மௌனத்தைக் கவனியாதவன் போலத் தொடர்ந்தான். "காதலுக்கு அப்பா மறுப்பாக்கும். வேறு மாப்பிள்ளையோடு திருமணத்தை நிச்சயம் செய்து விட்டாராக்கும். அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கிற அடையாளமாகத்தான் இப்படி வீட்டை விட்டு அதிகம் வெளியே சுற்றுவது போல? பட்டினி டிராமாவும் போட்டுத்தான் இந்த மெலிவா?"

கிட்டத்தட்ட அவன் சொன்னது மெய்யே என்பது போலச் சிறு கன்றலுடன் அவள் உதட்டைக் கடித்துக் கொள்ள அவன் தொடர்ந்தான்.

"பெற்று இவ்வளவு வளர்த்தவர்கள் கெடுதலுக்கா சொல்வார்கள்? அவர்கள் பக்கம் இருக்கும் நல்லதையும் சற்று யோசித்துப் பார்க்கவாமே பவித்ரா" என்று எடுத்துச் சொன்னான் பூரணன்.

வெட்டுவது போல அவனைப் பார்த்தாள் அவள். "என் திருமணம் என் சொந்த விஷயம். அதைப் பற்றிப் பேச மற்றவர்களுக்கு எந்த உரிமையும் இல்லை. அதிலும் என்னைக் கடத்திக் கொண்டு வந்திருக்கும் உனக்கு மற்றவருக்குப் புத்தி சொல்லக் கொஞ்சமும் அருகதையே கிடையாது. சைத்தான் வேதம் ஓதுவதை விட மோசமாக இருக்கிறது" என்று படபடத்தாள்.

"பரவாயில்லை இவ்வளவு நேரம் அளந்து பேசியதற்கும் சேர்த்து இப்போது பொரிந்து கொட்டி விட்டாய். ஆனால் அருகதை இருக்கிறதோ இல்லையோ பேசியாக வேண்டிய கட்டாயம் எனக்கு..." என்றவனை இடைமறித்து "ஏன்? என்

கழுத்தில் தாலி ஏறினால் உங்கள் ஃபார்முலாவை அப்பா தராவமில்லையா? அந்தப் பெண்ணின் வாழ்க்கையை விடுவாராமா? என்ன கதை" என்றாள் அவள் ஏளனமாக.

"அப்படியல்ல" என்று அவளோடு ஒத்துப் போனான் நித்யபூரணன். "ஆனால் உன் திருமணம் பற்றி நான் பே காரணம் சுயநலம்தான். கல்யாண விஷயம் சரியாக முடிந்த மற்ற எதையும் அவரிடம் பேச முடியும் போலத் தோன்றுகி அதனால்தான்..."

"அதற்காக இரண்டாம் தாரமாக ஒருவனை மணக்க என்ன முடியாது" என்று பிடிவாதக் குரலில் கூறினாள் அவள்.

"இரண்... ஓ... அதுதான் சிக்கலா? பாரம்மா விதவை விவா என்று பெரிதாகப் பேசுகிறீர்கள். விவாகரத்து செய்தவர் மீண்டும் மணக்கிறார்கள். பெண்கள் இரண்டாவது திருமண செய்யலாம் என்றால், ஆண்களை மட்டும் இரண்டாம் தா என்று நீ ஒதுக்கலாமா?" என்று வாதிட்டான் அவன்.

அவள் கண்களில் மின்னல் வெட்டியது. "ஆனால் எந் பெண்ணும் முதல் கணவனோடு வாழ்ந்து கொண் இன்னொருவனை மணப்பதில்லையே." என்றாள் குத்தலாக.

ஆனால் சொல்லி முடிக்கும் போதே அவள் கு நடுங்கிவிட, அவனும் திகைத்துப் போனான்.

"காட் அப்படியா விஷயம்? ஆனால்..."

"ஆனால் என்ன? உன்னைப் பெற்றவள் செய்ததுதா என்கிறீர்களா? எந்த மாதிரியான சூழ்நிலையில் என் தா அப்படிச் செய்தார்களோ எனக்குத் தெரியாது. ஆன அதனால் என் அம்மா பட்ட துன்பங்களையெல்லாம் நே பார்த்திருக்கிறேன். அம்மா மறைக்க முயன்றவைகளை ஊகித்து அறிந்து வருந்தியிருக்கிறேன். அதன் பிறகும் அ போன்ற ஓர் அவமான வாழ்க்கையை நான் எப்படி ஏற்ப அத்தோடு அந்தப் பெண்? அந்த ஆளுடைய மனைவி. அ

ன்னொரு பெண்ணான நானே அழிப்பதா? அந்த அநியாயம் ான் செய்யமாட்டேன். உன் அம்மா செய்யவில்லையா என்று ண்டும் கேட்டுவிட வேண்டாம். என்னால் அது முடியாது. அவ்வளவுதான். அதனால் இதற்கு மேல் இந்தப் பேச்சை ிடுங்கள்."

எரிமலையின் சீறலாய் பவித்ரா கொட்டி முடிக்கும் வரை ரணன் குறுக்கிடவில்லை.

சிவந்து கனன்ற முகம், பெரிய பெரிய மூச்சுகள். நடுங்கிய ரல். எல்லாவற்றையும் கவனித்தபடி பேசாமலே இருந்தான்.

அவளது குமுறல் நின்றதும், "நான் அப்படி ஏதும் கேட்பதாக ல்லை பவித்ரா. திருவாளர் நாகேந்திரன் தொழிலில் ட்டுமில்லாமல் சொந்த வாழ்விலும் சரியில்லை. பாலிருக்கிறதே என்றுதான் எண்ணினேன்" என்றான் தாழ்ந்த ரலில். அதற்கு மேல் அந்தப் பேச்சை விடுத்து, "சரி பாகட்டும். இந்தப் போராட்டத்தில் நீ பல நாட்களாகச் சரியாகச் ாப்பிடவே இல்லை என்று உன் மெலிவு சொல்கிறது. இங்கே ணவுப் பொருட்கள் பலதும் வாங்கி வைத்திருக்கிறோம். வா, ாப்பிடலாம்" என்று அவளை உணவருந்த அழைத்தான்.

அவள் சற்றுத் தயங்கவும், "பரவாயில்லை வந்து சாப்பிடு. நீ ட்டினி கிடப்பதைப் பார்த்து மனம் இளகவோ வருத்தப்படவோ ங்கே உன் பெற்றோர் இல்லை பார். பின்னே, பட்டினி கிடந்து ன்ன லாபம்? இன்றைய களேபரத்தில் குறைந்த பட்சம் வயிறு றைய உண்ணும் சுகமேனும் உனக்குக் கிடைக்கட்டுமே" ன்று முறுவலிக்கவும், அவளுக்கும் அது சரிதானே என்று தான்றி விட்டது.

பேச்சின் பெரும் பகுதியைக் கேட்டுக் கொண்டிருந்த தனுக்கும், பவித்ரா மேல் பரிவு ஏற்பட்டு விட்டது.

வில்லனுடைய மகளே என்ற போதும் அவர்களுடை[illegible] எதிரியால் பாதிக்கப்பட்ட இன்னொரு பிறவி. எதிரிக்கு எதிரி[illegible]

பெற்ற பெண் என்கிற பரிவு பாசம் கூட ஒன்றுமே இல்[illegible] போலிருக்கிறதே பாவம்.

"வாருங்கள் பவித்ரா. சாப்பாடெல்லாம் இந்த அறை[illegible] இருக்கிறது" என்று முதல் முறையாக அவளுக்கு மதி[illegible] கொடுத்து மரியாதைப் பன்மையில் அழைத்தான்.

அன்றைய உணவு கொஞ்சம் சிறப்பாகவே இருந்தது.

தொடர்ந்து எத்தனை நாட்கள், ரொட்டியில் கிடக்க நேரு[illegible] என்று அன்றைய உணவுக்குச் 'சாட்' அயிட்டங்களாகப் பா[illegible] வாங்கிக் காரிலேயே கொண்டு வந்திருந்தான் பரதன்.

மூவருமே ஒரு வெட்டு வெட்டினர்.

பவித்ரா விரும்பிச் சாப்பிடுவது பார்த்து அவளுக்கு மீ[illegible]ட்டார்கள் எடுத்துவைத்தான் நித்யபூரணன். 'விருந்தோம்பலாக்கும்' [illegible] ஏளனமாக நினைத்தபோதும் என்னவோ அவனது உப[illegible] இதமாக இருக்கவே அவளும் அவனிடமே கேட்டு [illegible] உண்டாள்.

பயன்படுத்தியவை எல்லாமே ஒரு தரம் பயன்படுத்தி[illegible] தூர எறிகிற தட்டு, தம்ளர்கள்.

நித்யபூரணன் கன அக்கறையாக அவற்றை ஒரு பா[illegible] பையில் சேகரித்து பத்திரப்படுத்துவதைக் கண்டாள் [illegible] என்னதான் சுற்றுப்புறச் சூழல் சுத்தம் பார்க்கிறவன் என்[illegible] குப்பைத் தொட்டி குப்பைக் குழியில்தானே போட வேண்[illegible] என்னவோ சொத்து பத்து போல இப்படிப் பத்[illegible] படுத்துவானேன்?

குறுகுறுப்பை அடக்காமாட்டாமல், "தூர வீச வேண்டி[illegible] ஏன் சேகரிக்கிறீர்கள்?" என்று விசாரித்தாள்.

பரத் திருதிரு வென்று விழிக்க "உனக்குப் பயந்துதான்" என்று [illegible]றுவலித்தான் மற்றவன்.

"எனக்கா? மொட்டைத் தலைக்கும், முழங்காலுக்கும் [illegible]டிச்சுப் போடுவது பற்றிப் பேசுவார்கள். அது போல இதுவும் [illegible]ன்றும் புரியவில்லை" என்றாள் அவள்.

"முடிச்சு இருக்கிறது. பொதுவாக இந்த இடம் பகலில் வழி [illegible]ர்த்து வந்தாலும் கூடக் கண்டுபிடிப்பது வெகுசிரமம்தான் [illegible]ன்றாலும், ஏதோ எங்கள் கெட்ட நேரம் பிற்பாடு உனக்கு [illegible]ங்கே வர வழி தெரிந்து விட்டது என்று வைத்துக் கொள் [illegible]களுக்கு அது ஆபத்துதானே?"

"புரியவில்லை. இந்த இடத்து வழி எனக்குத் தெரிவதால் [illegible]களுக்கு என்ன ஆபத்து வரக்கூடும்?"

"சேச்சே. பவித்ரா நல்லவர்கள். நம்மைக் காட்டிக் கொடுக்க [illegible]ட்டார்கள். அண்ணா." என்றான் பரத்.

"காட்டிக்கொடு.... ஓகோ நான் போலீசாருடன் இங்கே [illegible]க்கூடும் என்கிறீர்களா? அப்படிப் போலீசோடு வரும்போது [illegible]த பேப்பர் கப்புகள் தட்டுகள் எல்லாம் கிடந்தால் இங்கே [illegible]னைச் சிறை வைத்ததற்குச் சான்று என்று ஆகிவிடும் [illegible]றுதான் இவற்றை இப்படிச் சேகரிக்கிறீர்களா? இப்போது [illegible]தைக் கொண்டுபோய் வழியில் வேறு எங்காவது குப்பைத் [illegible]ட்டியில் போட்டு விடுவீர்கள். அப்படித்தானே?"

மிகவும் சரி. ரசாயனப் பரிசோதனையில் சுமாராக எப்போது [illegible]ன்படுத்தப்பட்டிருக்கக்கூடும் என்பது தெரிந்து விடும். உன் [illegible]ம் எனக்குத் தெரியாது பவித்ரா. உன்னைப் பொறுத்த [illegible]யில் நாங்கள் உன்னைக் கடத்திவந்தவர்கள். எங்களைக் [illegible]டிக் கொடுக்கநினைப்பதில் தப்பு சொல்ல முடியாது. நீயாகக் [illegible]டிக் கொடுக்க நினைக்காவிட்டாலும் உன் தந்தை சும்மா [illegible]க்கமாட்டார். இது சிறு விஷயம்தான் என்றாலும், [illegible]சரிக்கையோடு இருப்பது நல்லதுதானே?"

கையை உதறினான், பரத். "அந்த நாகேந்திரனை ந
மறந்து விட்டேன், அண்ணா" என்றவன் கடைசியாக அ
குடித்து முடித்திருந்த கப்பையும் மற்றவையோடு சேர்த்
பத்திரப்படுத்தினான்.

ஆச்சரியமாக நோக்கினாள், அவள்.

"என்ன?"

"இவ்வளவு கவனத்தோடு இருக்கிறீர்கள். முக்கியமாப்பி
ஃபார்முலாவைத் திருட்டுக் கொடுத்திருக்கிறீர்களே. விசித்
தான்" என்றாள் பவித்ரா.

பரத்தின் முகத்தில் அசடு வழிந்தது.

யாரோ ஒருத்தி, தொழில் என்றால் என்னவென்று தெரி
சின்னப் பெண், நமக்குச் சுட்டிக் காட்டும்படி ஆயிற்றே எ
நித்யபூரணனுக்கு குன்றல்தான். ஆயினும் சமாளித்துக் கொ
"'லேர்னிங் பை எரர்ஸ்' என்று ஆங்கிலத்தில் சொல்வார்
தோல்வியே வெற்றியின் அடிப்படை என்பதும் அதுத
இதுவரை மூன்று தலைமுறைக் காலமாக எங்கள் வீட்
இதுபோலத் திருட்டு நடைபெற்றதில்லை. எல்லோருக்
நல்லது செய்கிறோம்.அவர்களும் இதுவரை நம்பிக்கை
உரியவர்களாகவே நடந்து கொண்டதால், யாரும் நம் வீட்
திருடுவார்கள் என்ற எண்ணமே இல்லாது போய்
மெத்தனமாக இருந்து விட்டோம். எங்களைப் போ
எல்லோரையும் எண்ணியது தப்புதான். பிடிபட்டால் எத்த
ஆண்டுகள் களி தின்ன நேரும் என்ற கவலையே இல்
அடுத்தவர் பொருட்களைத் திருட, பெரிய மனிதர் போர்வை
சிலர் இருப்பார்கள் என்று தெரியாமல் ஒருமுறை
கொடுத்து விட்டோம். ஆனால் 'சூடு பட்ட பூனை' எ
இருக்கிறதல்லவா? ஒரு சூடுபட்டதால், இரு ம
கவனத்துடன் செயல்படத் தொடங்கி விட்டோம்"

வளுக்கும் மனதில் தைக்கும் வண்ணம் பதில் கொடுத்தான்
வன்.

பவித்ராவின் தலை தாழ்ந்து முகம் கன்றியதைக் கவனித்து,
ாவம் , அவர்கள் தந்தை செய்த தப்புக்குப் பவித்ரா என்ன
ய்வார்கள்? விடண்ணா" என்றான் பரதன்.

"கண்ணாடி வீட்டில் இருந்து கொண்டு கல்லெறியக்கூடாது
பி" என்றான் அண்ணன் குறிப்பாக.

"தப்புதான்" என்று ஒத்துக் கொண்டாள் அவள். "ஆனால்
ாதுவாக நீங்கள் மிகவும் கவனமாக இருக்கவே உங்களிடம்
நந்து ஒன்று திருட்டு போனது ஆச்சரியமாக இருந்தது.
வ்வளவுதான்" என்றாள் சின்னக் குரலில்.

அசட்டையாகத் தோளைக் குலுக்கினான் நித்யபூரணன்.

ஒரு சிறு அனுமதியின் பின்,"இப்போது என்னண்ணா
ய்வது?" என்று பரத் வினவினான்.

"கொஞ்சம் பொறுப்போம். பிறகு மீண்டும் டெலிபோன்
ய்வோம். ஒருதரம் இல்லாவிட்டால் இன்னொரு தரம் நாம்
ுவதை அவர் கேட்டுத்தானே ஆக வேண்டும்? மகள்
ுக்கு வரவில்லை எனும் போது எங்கிருக்கிறாள் என்று
ிந்து கொள்ளவேனும் எண்ணுவார் அல்லவா? சற்று நேரம்
த்து முயற்சி செய்வோம்." என்றான் அண்ணன்.

இரண்டாவது தடவையாக நித்யபூரணன் டெலிபோனில்
நாகேந்திரனைப் பிடித்த போதும் அவர் முன் போலவேதான்
னினார்.

மகள் பவித்ராவின் திட்டம் அவருக்குத் தெரியுமாம். அந்த மடச்சியை இருபது ஆண்டுகள் வளர்த்திருக்கிறாரே, இந்த மாதிரி அரை வேக்காட்டுத்தனமான அசட்டுத் திட்டங்களின் மூலம் அவரைப் பணிய வைக்க அவள் எண்ணினால் அது முழு முட்டாள்த் தனமாம். நடக்கவே நடக்காதாம். அதனால் மரியாதையாக வீடு வந்து சேர்ந்து ஒழுங்காக கல்யாணத்தைப் பண்ணிக் கொண்டு நல்லபடியாக வாழ வேண்டுமாம்.

இவ்வளவு போதாதென்று "பாரப்பா தம்பி, சிறு பிள்ளைத் தனமாக அவள்தான் நடந்து கொள்கிறாள் என்றால் மடத்தனமாக நீயும் அதற்குத் துணையாக இராதே. நான் சொன்னதையெல்லாம் அவளுக்கு எடுத்துச் சொல்லு. கேட்டு நடக்கவில்லை என்றால் அவள் என்ன தருவதாகச் சொன்னாளோ அதற்கு இரு மடங்கு பணம் தருகிறேன். அவளைக் கை கால்களைக் கட்டி, வீட்டில் கொண்டு வந்து போட்டு விடு" என்று நித்யபூரணனிடம் பேரம் வேறு பேசினார்.

"நாங்கள் வேறு விஷயமாய்..." என்று அவன் தொடங்கியதை அவர் கவனிப்பதாகவே இல்லை. "எனக்கு தலைக்கு மேல் வேலை இருக்கிறது. நீயே நல்ல புத்தி சொல்லி அழைத்து வா" என்றதோடு போனை வைத்து விட்டார்.

எரிச்சலும் அதை மீறிய சிரிப்புமாக யோசித்துச் சொல்வதாகக் கூறி, ரிசீவரை வைத்தான் அவன்.

"நம் தொழிலையே மாற்றி பேட்டை ரௌடியாக்கி விடுவார் போல் இருக்கிறதே. கை கால்களைக் கட்டி வீட்டில் கொண்டு போய்ப் போட்டுவிட வேண்டுமாம். அதற்காகப் பணம் வேறு தருகிறாராம்." என்று கோபப்பட்டான் பூரணன்.

"என்னண்ணா, இது? மகளை வேறு எதற்காகவும் யாரேனும் கடத்திப் போயிருக்கலாம் என்கிற எண்ணமே அந்த ஆளுக்கு இல்லையே? அப்படியொன்றும் இந்தப் பவித்ரா அழகுக் குறைவாகவும் இல்லை..." என்றபடி பரத், பவித்ராவை ஏற இறங்கப் பார்த்தான்.

நித்யபூரணனின் பார்வையும் அவளை அளவிடவே, பவித்ராவின் முகம் லேசாகச் சிவந்தது. "பாராட்டுக்கு நன்றி" என்று கிண்டலாக நன்றி நவில்வது போலச் சமாளிக்க முயன்றாள் அவள்.

அவளை ஆழப் பார்த்துவிட்டு, "அடுத்த முறை நாகேந்திரனிடம் பவித்ராவைப் பேசச் சொல்ல வேண்டியது தான். மகள் சொல்வதாவது அவர் காதில் ஏறுகிறதா என்று பார்க்கலாம்" என்றான் நித்யபூரணன்.

"ஏறவே ஏறாது" என்று பதற்றத்துடன் கூறினாள் பெண். "அத்தோடு இதெல்லாம் என் ஏற்பாடு என்று எண்ணியிருப்பவர் என்னைக் கண்டபடி திட்டுவார். இதற்காகவே அவரோடு நான் பேசுவதே இல்லை. இப்போது பேசி அவரிடம் இன்னும் ஒரு தரம் வாங்கிக் கட்டிக் கொள்ள நான் தயாரில்லை" என்று மறுத்தாள் அவள்.

"இல்லை. நீதான் பேச வேண்டும்."

"முடியாது."

"சொல்வதைக் கேள். நீ பேசுவதுதான் நல்லது."

"யாருக்கு?" என்று பாயின்டைப் பிடித்தாள் பவித்ரா. "உங்களுக்கு நல்லதை நீங்கள்தான் தேடிக் கொள்ள வேண்டும். என்னைச் செய்யச் சொல்லாதீர்கள்" என்று மீண்டும் மறுத்தவள், "கீழே தள்ளிய குதிரை, குழியையும் பறித்த மாதிரி என்னை நீங்கள் கடத்தி வந்ததே தப்பு. அதற்கு மேல் நிபந்தனையையும் நானே சொல்ல வேண்டும் என்பதா? சரியான கோமாளி வேலையாக இருக்கிறது." என்றாள் ஏளனமாக.

அவள் கூறியதை மறுத்துப் பேச முடியாததாலேயே ஆத்திரமுற்று, "பெற்ற தந்தையிடம் பேச இவ்வளவு தயக்கமா?

அவர் உன் தந்தைதானா என்பதே எனக்கு இப்போது சந்தேகமாக இருக்கிறது"என்று கூறிவிட்டான் அவன்.

வேண்டும் என்றே சீண்டுகிறான். அந்த ஆத்திரத்தில் பெற்றவருக்கு அவளாக போன் செய்வாள் என்ற எதிர்பார்ப்பு. ஆனால் அவனுக்கு இருக்கும் நாக்கு அவளுக்கும் இருக்கிறதுதானே?

அவனை நிமிர்ந்து நோக்கி, "எனக்கு வேறோரு சந்தேகம்" என்றாள் அவள். "என்னவோ ஃபார்முலாஃபார்முலா என்று என்னிடம் அளந்தீர்கள். அப்பாவிடம் அது பற்றி மூச்சுக்கூட விடவில்லையே? மெய்யாகவே அப்படி ஒரு ஃபார்முலா இருக்கிறதா? அல்லது கடத்தலை நியாயப்படுத்த என்று சும்மாவேனும் சொன்ன கட்டுக் கதையா?" என்று வேண்டுமென்றே கேட்டாள்.

"முட்டாள்தனமான கேள்வி" என்று கத்தினான் பரத்.

முகத்தில் சினச் சிவப்பு ஏற, "ஃபார்முலா இருப்பதும் உண்மை அதை உன் தந்தை திருடியிருப்பதும் உண்மை. உண்மையைத் தவிர வேறெதுவும் இல்லை. தெரிந்து கொள். மேலும் புதிதாக அப்படி ஓர் அடிப்படை இல்லாமல் தொழில் விஸ்தரிப்புக்காக 'உங்களுக்காக' வில் நாகேந்திரன் மூன்று கோடி ரூபாய்கடன் கேட்க முடியுமா? அப்படிக் கேட்டாலும் அந்த நிதி நிறுவனம்தான் அவ்வளவு பெரிய தொகையை உன் தந்தையின் இப்போதைய தொழிலை மட்டும் நம்பிக் கொடுக்குமா? எல்லா விஷயங்களையும் கொஞ்சம் யோசித்தே அதாவது மூளையிருந்தால் யோசித்துப் பேசும்மா" என்று சீற்றத்துடன் தொடங்கி ஏளனமாய் முடித்தான் நித்யபூரணன்.

பேயைக் கண்டவள் போல பவித்ராவின் முகம் பஞ்சென வெளுத்தது. "கடவுளே இதுதான் காரணமா? இதை வைத்துத் தான் பேராசை வந்து விட்டதா? பாவிகளா என் துன்பம் எல்லாம்

உங்கள் கவனக்குறைவினால்நேர்ந்த கொடுமைதானா? ஐயோ, உங்கள் பிழையால் என் வாழ்க்கையையே நாசம் செய்து விட்டீர்கள். அநியாயம் ஆகிவிட்டதே" என்று தவித்தாள் அவள்.

மூச்சுக் காற்றுக்கே தினறுகிறவள் போலப் பெரிய பெரிய மூச்சுகளை எடுத்த வண்ணம் கண்களில் அருவியாய்க் கண்ணீர் பெருக அவள் கதறவும், ஆண்கள் இருவரும் திகைத்துப் போயினர்.

இது நடிப்போ நாடகமோ அல்ல. மெய்யாகவே துன்பம் தாங்க முடியாமல் தவிக்கிறாள்.

ஒன்றும் செய்யத் தோன்றாமல் பரத் கைகளைப் பிசைந்தான்.

அவளைச் சில நிமிஷநேரம் அழ விட்டுவிட்டு நித்யபூரணன் உள்ளே சென்று ஒரு ப்ளாஸ்டிக் கப்பில் தண்ணீர் எடுத்து வந்தான்.

"பவித்ரா பவித்ரா" என்று கனிந்த குரலில் அவளை அழைத்தான். "பாரம்மா. சற்று முயன்று மனதை அடக்கிக் கொள். இந்தா இந்தத் தண்ணீரைத் குடி. இந்தா பவித்ரா" என்று அமர்ந்த குரலில் வற்புறுத்தலாகப் பேசி அவளை அந்த நீரைக் குடிக்கவைத்தான்.

அவளது தவிப்பு ஓரளவு மட்டுப்பட்ட போதும், 'ஐயோ' வென்ற அந்த நிராசை அவள் முகத்தில் அப்படியேதான் இருந்தது. கண்ணீரும் மெல்லிய கோடுகளாக இறங்கிக் கொண்டே இருந்தது.

"பாரம்மா எப்படியோ உன் துயரத்துக்கு எங்களது பிரச்சனையே காரணமாகி விட்டது என்று உணர முடிகிறது. ஆனால் எப்படி என்றுதான் புரியவில்லை. என்ன ஆயிற்று? என்ன விஷயம்?" என்று மெல்லிய குரலில் நித்யபூரணன் அவளிடம் விசாரித்தான். "சொல்வது உனக்கும் கூட, ஆறுதலாக இருக்கக்கூடும்."

"அத்தோடு விஷயம் தெரிந்தால்தானே உனக்கு உதவவும் முடியும் என்னண்ணா?" என்று தமையனைப் பார்த்த பரத் திகைத்தான்.

உதவி செய்வதாகத்தானே சொன்னோம், என்று குழம்பினான் அவன். பின்னே எதற்கு இந்த அண்ணன் அவன் வாயை மூடு என்பது போலப் பார்க்க வேண்டும்? குழம்பியபோதும் அண்ணனுக்குப் பணிந்தே பழக்கப்பட்டவன் என்பதால் மேலே பேசாது நிறுத்தி விட்டான்.

"யாராலும் எதுவும் செய்ய முடியாது. ஆனால் உங்களது இந்த ஃபார்முலா அப்பாவுக்குக் கிடைக்காமல் இருந்திருந்தால் எனக்குப் பிரச்சனையே நேர்ந்திராது" என்றாள் பவித்ரா வெறுப்புடன்.

இந்த ஃபார்முலா கைக்கு வந்திராவிட்டால் நாகேந்திரன் தொழிலை விரிவு படுத்த நினைப்பது ஏது? நிதி நிறுவனத்தில் கடன் கேட்பதுதான் ஏது?

நிதி நிறுவனத் தலைவரான நடேசனின் நிபந்தனையோடு கூடிய உதவி தயாரிப்புக் குறிப்புகள் இல்லாமல் எங்கிருந்து வரும்?

ஆனால் அதைப் பற்றிக் கேட்ட பிறகு முக்கியமாக வட்டியோ, நிர்வாகத் தொல்லையோ இல்லாமல் லாபத்தில் ஐம்பது சதவீதம் வரும் என்றான் பிறகு நாகேந்திரன் அப்படியே மாறிவிட்டார். வேறு எதுவுமே அவர் காதில் விழுவதாக இல்லை அவரது கற்பனை எங்கெல்லாமோ, சுற்றத் தொடங்கிவிட்டது.

பலநாட்டுக் குட்டிகளையும் பதம் பார்ப்பதும் அதில் அடக்கம் என்று அவர் பிதற்றியதையெல்லாம் பவித்ரா அவர்களிடம் சொல்லவில்லை. சொல்வது. அவளுடைய தாயாருக்கும்தானே கேவலம்?

சிறு வயதிலிருந்தே அது ஒரு வேதனை பவித்ராவுக்கு நிரந்தரம்.

தந்தை யார்யாரோ பெண்களுடன் அறைக்குள் சென்று பூட்டிக் கொள்வதும் தாயார் தனித்திருந்து வெளியை வெறிப்பதும் சின்னவளாக இருந்தபோதே ஓர் இனம் தெரியாத வேதனையை அவளுக்குத் தந்திருக்கிறது. என்னவென்று தெரியாமலே சில விஷயங்கள் மனதைப் பாதித்து விடும் அல்லவா? அதுபோல.

அவள் சுடிதாரும் பாவாடை தாவணியும் அணியத் தொடங்கிய பிறகு நாகேந்திரன் வீட்டுக்கு யாரையும் கூட்டி வரவில்லை என்றாலும் அங்கங்கே மற்ற பெண்களோடு அவரைக் கண்டிருக்கிறாள். கண்டுமனம் நொந்தும் இருக்கிறாள்.

முந்தைய பூட்டிய அறைகள் ஞாபகம் வர அவைகளை எண்ணியும் வருந்தியிருக்கிறாள்.

கூடவே சட்டத்துக்குப் புறம்பானதான அவளுடைய பெற்றோரின் உறவு நிலையும் அவளை வெகுவாகவே தலைகுனிய வைத்திருக்கிறது. சட்ட நியாயப்படி அவளது நிலையும்தான் என்ன?

இதனாலேயே தந்தையைத் தாயால் தட்டிக் கேட்க முடியவில்லை என்று உணர்ந்ததால் பெற்றவளிடம் மிகுந்த பரிதாபமும் ஏற்பட்டது. கூடவே இப்படியொரு நிலையை ஏன் ஏற்றாள் என்று ஆத்திரமும் உண்டுதான்.

இதனால் அவளுக்கும் அல்லவா அவமானம்? குறைந்த பட்சமாக அவளைப் பெறாமலாவது இருந்திருக்கலாமே என்று பொருமுவாள்.

எல்லாம் எண்ணி மனதுக்குள்ளேயே குமைவது தவிர வெளியே காட்டிக் கொள்வது இல்லை.

அப்படிக் காட்டி ஒரு பயனும் இல்லை என்பதோடு, தாயார் இன்னும் வேதனைப்படும்படி ஆகிவிடுமே. சும்மாவே அவள் அனுபவிக்கும் மன நோவு போதாதா?

ஆனால் மற்ற வகையில் நாகேந்திரனும் நல்ல தந்தையாக தான் இருந்தார். பாசம் காட்டினார். வேண்டியது கேளாமலே வாங்கிக் கொடுத்தார். கேட்டாலோ நிச்சயமாகக் கிடைக்கும் நல்ல பள்ளியில் படிக்க வைத்தார். அவளைத் திட்டியதில்லை அடித்தது இல்லை.

நல்ல இடம் பார்த்துத் திருமணம் செய்ய வேண்டும் என்று கூடச் சொல்லுவார். அவளுடைய தந்தைக்கு அப்படிப்பட்ட இளகிய தருணங்களும் உண்டு என்பதை இந்த கடத்தல்காரர்கள் அறியாதிருப்பதே மேல்.

அதனாலேயே அவரைப் பற்றிய இந்த விவரங்களையும் பவித்ரா, அந்த அண்ணன் தம்பியிடம் சொல்லவில்லை.

ஆனால் அவள் சொன்ன அளவே அவர்களுக்கு போதுமானதாக இருந்தது. அதிலும் பெரியவன் பெருமளவு நாகேந்திரனின் ஆட்டபாட்டங்கள் பற்றி அறிவான். அதனால் அது பற்றி அவள் சொல்லத் தேவையும் இருக்கவில்லை.

பவித்ராவைப் பொறுத்தவரையில் பெற்றவரது இந்தத் திடீர் திருப்பம் இதுவரை அவளுக்குப் புரியாத பயங்கரப் புதிராகவே இருந்தது.

அவளுடைய தாயினதைப் போன்ற நிலையல்லவா அவளுக்கென்று தந்தை தேர்ந்தெடுத்து வைத்திருந்த தலைவிதி. அதுவும் 'நல்ல இடம் பார்த்துத் திருமணம் செய்து வைக்க வேண்டும்' என்று சொல்லிக் கொண்டிருந்தவர். ஒரு பாசமுள்ள தகப்பனார் எப்படி இப்படித் தலைகீழாக மாற முடியும்?

படுகுழியிலல்லவா, தூக்கிப் போடுவேன் என்கிறார்.

திடுமென வந்து மணமாகி விட்டிருந்த ஒருவனுடைய சின்னவீடாக அவளை அவர் வாழச் சொன்னதே இன்னும் அவளுக்கு நம்ப இயலாத திகைப்புதான். என்னதான் தான் திருமணம், என்றாலும் நிலைமை அதுதானே?

அத்தோடு ஒத்துக் கொள் என்று பயங்கர அதட்டல் மறுத்தால் அடி விழும் என்று மிரட்டல் வேறு. இருதரம் கை நீட்டியும் விட்டார்.

பெரிய பெரிய தியாகங்கள் செய்து ரஞ்சிதம் அந்த வீட்டில் குடிகொள்ள வைத்திருந்த அமைதியான சூழல் அடியோடு அழிந்து போயிற்று.

அடியில் என்னதான் சேறும் சகதியுமாக இருந்தாலும் அதை மறைத்து கொண்டு மேற்பரப்பில் தெள்ளியதாகக் காணப்படும் குளம் நீர் போல, அவள் வாழ்வும் அன்று வரை வெளியே அமைதியாகவே பிறர் பார்த்துப் பொறாமைப்படுகிற அளவு உயர்வானதாகத்தானே தோற்றமளித்தது. ஏன் இந்த இருவருமே பவித்ரா அவளுடைய தந்தையுடைய செல்லப்பெண், அவளுக்காக அவர் எதையும் செய்வார் என்று எண்ணித்தானே அவளைக் கடத்தி வந்திருக்கிறார்கள்.

ஆனால் வீட்டில் அவளது நிலைமையே வேறு. பட்டினி, தற்கொலை மிரட்டல் எதற்கும் பலனில்லை. பெற்றவளோ, செய்வதறியாமால் கண்ணீரில் கரைந்தாள்.

மகளுக்கும் தன்னைப் போன்றதோர் இழி நிலையா என்ற தவிப்பு ஒரு புறம் என்றால், முடியாது என்று மறுக்கவும் ரஞ்சிதத்துக்குத் தைரியம் இல்லை. மறுத்தால் அதற்கு மேல் அந்த வீட்டில் இருக்க முடியாது. வயதுப் பெண்ணோடு தெருவில் நிற்பதை அவளால் நினைக்கக்கூட முடியவில்லை. ஆனால் அதற்குப் பயந்து இப்படி சின்னவீட்டுப் பரம்பரையை உருவாக்குவதா என்று அதையும் அவளால் சகிக்கக் கூடவில்லை.

மன பாரத்தைக் கொஞ்சமேனும் குறைக்க அவள் கண்ட ஒரே வழி அழுகைதான் அதுவும் நாகேந்திரன் அறியாமல்தான். அவர் பார்த்தால் திட்டுவார்.

எனவே தந்தை வீட்டில் இல்லாத நேரம் பவித்ரா தாயின் கண்ணீரைக் கண்டு சகிக்கவேண்டும். அல்லது அவளோடு கூடச் சேர்ந்து அழ வேண்டும். தந்தை இருக்கும் சமயத்திலோ நடேசன் குடும்பத்தின் சம்பந்தம் பற்றிய பஜனை மட்டுமே.

இரண்டையுமே சகிக்க மாட்டாமல், அதே சமயம் யார் முகத்தைப் பார்த்துப் பேசவும் பிடிக்காமல் போகவேதான் பவித்ரா வெளியே சுற்றத் தொடங்கியது. அதில் ஓர் அதிகப்படி நன்மையும் கிட்டவே நடையை விடாமல் தொடர்ந்தாள் அவள். அந்த ஒரு சிறு சுகம் தவிர வாழ்வு துன்பமயமாகவே இருந்தது.

"கால் ஓய ஓய, நடப்பது கூடச் சுகமா?" என்று வியப்புடன் நித்யபூரணன் வினவினான்.

"அதானே" என்று பரத் ஒத்து ஊதினான்.

"அதிகம் நடப்பது சுகமில்லைதான். ஆனால் கால் ஓயுமளவு நடந்தால் இரவில் தன்னை மறந்து தூங்க முடியுமே அதற்காகத்தான்."

சகோதரர்கள் இருவருக்கும் சற்று நேரம் பேச்சு நின்று போயிற்று.

உறங்கக் கூட முடியாமல் வருந்துவது என்றால் என்ன பரிதாபம்.

தன் பரிதாபத்தைப் பரத் வெளிப்படையாகக் காட்ட நித்யபூரணன் வேறு யோசித்து மனதைக் கடினப்படுத்திக் கொண்டான்.

இந்த விஷயத்தில் இவள் பரிதாபத்துக்குரியவளாக இருக்கலாம். ஆனால் இவளும் ஒன்றும் மகா உத்தம நங்கை அல்லவே? டெலிபோனில் முகத்தில் அடித்தாற்போல் பேசுவாளே. நேரே பார்க்க முடியாத ஓர் அன்னியனிடம் காரணமின்றி அவ்வளவு கடுமையாகப் பேசுகிறவள், அப்படி

ஒன்றும் 'மோப்பக் குழையும் அனிச்சம்' போல மென்மையானவளாக இருக்க முடியாது. அவளுக்குச் சரியான பொருத்தம் கூட அந்த நடேசனுடைய மகன்தானோ என்னவோ என்று எண்ணும் போதே அவன் மனம் முரண்டியது.

அந்த செல்வராஜாவை அவன் பார்த்திருக்கிறான். பள்ளியில் கல்லூரியில் என்று ஐந்தாறு ஆண்டுகள் தேர்வில் தோற்று பூரணனின் வகுப்பில் கூட ஓர் ஆண்டு படித்திருக்கிறான். படிக்கிற காலத்திலேயே அலையும் கண்கள் அவனுக்கு. வளைந்து கொடுக்கிற பெண்களோடு பலவிதமான லீலைகளும் அப்போதிருந்தே உண்டு. அவனோடு வாழ்வது, அதுவும் எந்தவித உரிமையும் இல்லாத ஆசைக் கிழத்தியாக ஒருத்தி வாழ நேர்வது நிச்சயமாகப் பரிதாபம்தான். அது எந்த மாதிரிப் பெண்ணாக இருந்தாலும்.

அதிலும் பெயரிலேயே பரிசுத்தத்தை வைத்திருக்கும் பெண் பவித்ரா.

அண்ணனும் தம்பியுமாகப் பரிதாபப்பட்டுக் கொண்டிருக்கையில், சட்டென அவர்கள் இருவருமே சற்றும் எதிர் பார்த்திராத வகையில் அவள் சீறினாள்.

"பழி ஓரிடம், பாவம் இன்னோர் இடம் என்பது போலல்லவா, ஆகிவிட்டது? முக்கியமான பொருளைப் பத்திரமாக வைத்துக் கொள்ளத் தெரியாமல் கோட்டை விட்டது நீங்கள். அதற்குரிய தண்டனை எனக்கா? சே, நீங்களெல்லாம் தொழிலா நடத்துகிறீர்கள், பேசாமல் கல்லுடைக்கப்போங்கள். இருவருமே அதற்குத்தான் லாயக்கு" என்றாள் ஆத்திரத்துடன்.

பவித்ராவின் பேச்சின் எதிரொலியாக இளைஞர்கள் இருவர் முகங்களுமே கன்றிச் சிவந்தன.

ஆனால் அவள் முகத்தில் பார்வையைப் பதித்திருந்த நித்யபூரணன் தன் சினத்தை அடக்கிக் கொண்டு பேசாதிருக்க, பரத் எண்ணெயில் விழுந்த அப்பம் போலக் குதித்தான்.

"ஆமாம்மா. கன்னக்கோல் பிடித்துச் சுவர் ஏறிக் குதிக்கிறவர்கள் எல்லாம் சிறைக்கு வெளியே சுதந்திரமாகச் சுற்றுவதோடு வாசனைத் திரவியத் தயாரிப்பிலும் ஈடுபட்டிருக்கிறார்கள் என்கிற விஷயம், எங்களுக்குத் தெரியாமல் போனது எங்களது தப்புதான். அந்தத் தப்புக்குத் தண்டனையாகக் கல் உடைப்பது மட்டும் என்ன, அந்தக் கல்லிலேயே எங்கள் தலையை முட்டிக் கொள்ளவும்தான் வெண்டும்." என்று பொரிந்து கொட்டினான்.

கண்களில் நீர் திரையிட, அவள் தலை தாழவும், "போதுமடா" என்று தம்பியை அடக்கினான் நித்யபூரணன். "அவரவர் துன்பம் அவரவருக்கு. வருத்தத்தில் சொல்வதையெல்லாம் பெரிதாக எடுத்துக் கொள்ளக்கூடாது. எந்தவிதமான கோபமோ, வருத்தமோ நடந்ததை இல்லை என்று ஆக்கி விடாது. நடக்க வேண்டியதையும் மாற்றி விடாது. எனவே வீணாக ஒருவரை ஒருவர் குத்திப் பேச வேண்டாம் என்பது என் கருத்து. இப்போது மேலே செய்ய வேண்டியதை மட்டும் பார்ப்போம்" என்று அமர்த்தலான குரலில் அவன் கூறியது மற்ற இருவர் வாயையும் அடைத்தது.

"இதோ பார் பவித்ரா, எங்களுக்கு எங்கள் ஃபார்முலா வேண்டும். அதைப் பெற நாங்கள் என்ன செய்யவும் தயாராக இருக்கிறோம் என்பது இப்போது உனக்குப் புரிந்திருக்கும். ஆளைக் கடத்துவது, மிரட்டுவது என்று சட்டப்படியான பெரும் குற்றங்களைக் கூடச் செய்யத் துணிந்திருக்கிறோம் என்றால் பார்த்துக் கொள். இந்த அளவு துணிந்தவர்கள் இத்தோடு விட்டுவிட மாட்டோம். அதனால் நீயாகவே மிஸ்டர் நாகேந்திரனுக்கு போன் செய்து விடுவது நல்லது" என்று சற்று அழுத்தமான குரலில் கூறினான்.

விழி உயர்த்தி அவனைப் பார்த்தாள் அவள். "செய்யா விட்டால்?"

"நல்ல உடம்பு நோகும்படி ஆகும். சும்மாவே ஆள் மெலிந்து பலவீனமாகத் தெரிகிறாய். இரண்டு அடி தாங்க மாட்டாய்." என்றான் அவன் கடுமையான குரலில்.

பரத்துக்கும், அண்ணனின் வார்த்தைகள் திகைப்புதான். ஒரு பெண்ணைப் போய் அடிப்பதா என்பது அவனுக்கு.

ஆனால் பவித்ராவின் பார்வையில் கசப்பு இருந்தது. "இருந்து இருந்து பெண்களைப் பணிய வைக்க உங்கள் ஆண்வர்க்கத்தின் ஆயுதமே இதுதானே? கை நீட்டுவது செய்து பாருங்கள். என் அப்பாவும் இதைத்தான் செய்தார். பழைய தலைமுறை என்று நினைத்தேன். இந்தத் தலைமுறையும் ஒன்றும் வித்தியாசமாக இல்லை" என்றாள் கசந்த குரலில்.

"அந்த ஆளையும் எங்களையும் ஒன்றாக்கிப் பேச வேண்டாம். அவர் எங்கள் பொருளைத் திருடியவர். எங்களுடையது நியாயமான போராட்டம். உன் மனதில் கொஞ்ச மேனும் நியாயம் இருந்தால் நீயே எங்களுக்கு உதவுவாய்" என்றான், பூரணன்.

அவனை வெறித்து நோக்கிவிட்டுத் தலையைத் திருப்பிக் கொண்டாள், அவள்.

மௌனமாய் மறுக்கிறாளாக்கும். அல்லது அப்படி என்னடா செய்து விடுவாய் என்கிறாளா?

ஆத்திரமாக அவளை முறைத்து விட்டு மீண்டும் டெலிபோனைக் கையில் எடுத்தான் நித்யபூரணன்.

இப்போது வேறு யாரோ எடுக்க நாகேந்திரன் போனுக்கு வந்து சேரச் சற்றுத் தாமதம் ஆயிற்று.

மாற்றிப் பேசிய இவனது குரலைக் கேட்டதும் இனம் கண்டு, "என்னப்பா இது ஒரு பெரிய சள்ளையாகப் போயிற்றே. இங்கே வேலை ஒன்றும் சரியாக வராமல் நானே எரிச்சலில் இருக்கிறேன். இதில் அந்தக் கழுதையின் பிரச்சனை வேறா? எப்போது அழைத்து வரப் போகிறாய்? அதற்கு எவ்வளவு பணம் வேண்டும்? முதலில் அதைச் சொல்லு" என்று பொறுமையிழந்த குரலில் பேசினார்.

'வேலை ஒன்றும் சரியாக வர' வில்லையாமா? அப்படியானால் அவன் தயாரித்த சங்கேதக் குறிப்புகளை இன்னும் நாகேந்திரனால் தெளிவுபடுத்திக் கொள்ள முடிய வில்லை. முடியவே முடியாது என்ற நம்பிக்கைதான் நித்யபூரணனுக்கு.

ஆயினும் அப்போதைக்கும் திருப்தியாகவே உணர்ந்தபடி, "பணம் வேண்டாம் சார் எங்களுக்கு. அந்த ஃபார்முலாதான் வேணும்..." என்று தொடங்கினான் அவன்.

"அடி செருப்பாலே. கல்யாணத்தை நிறுத்த இப்படித் திட்டமா? ஃபார்முலா இல்லாவிட்டால் புது சென்ட் தயாரிக்க முடியாது. அப்புறம் கல்யாணம் எப்படி நடக்கும் என்று நினைத்தாளா? அப்படியே காப்பி எடுத்து வைத்துக் கொண்டு கொடுத்தால் வேலை நடக்காதா? அப்போது அந்த மட்டி என்ன

செய்வாளாம்? முட்டாள். முட்டாள். அவள்தான் மூளையே இல்லாமல் சொன்னாள் என்றால் உலக்கைக் கொழுந்தாய் நீயும் அதைத் திருப்பிப் படிக்கிறாயே. இதோ பார். பவி கையில் மிஞ்சி மிஞ்சி இருபது ஆயிரம் ரூபாய் இருந்திருக்கக் கூடும். அவள் அணிந்திருந்த நகைகள் ஓர் ஐம்பதாயிரத்துக்கு இருக்கலாம். எல்லாவற்றையும் தருவதாகச் சொல்லியிருப்பாள். இரு குறுக்கே பேசாதே. நான், உனக்கு இரண்டு லட்சம் தருகிறேன். அவளைக் கொணர்ந்து சேர்ப்பித்து விடு. இப்போது எனக்கு நிறைய வேலை இருக்கிறது" என்றவர், "... என்னது? மறுபடியும் தப்பாகி விட்டதா? சனியன். சனியன் எழுதி வைத்திருக்கிறான்பார். ஒருவருக்கும் புரியாமல்... இதோ வருகிறேனப்பா" என்று இடையில் யாரிடமோ பேசிவிட்டு, மீண்டும் டெலிபோனுக்குத் திரும்பி பாரப்பா, உன்னுடன் தாயமாடிக் கொண்டிருக்க எனக்கு ஒரு நிமிஷம்கூட இப்போது கிடையாது. நேரத்தை வீணாக்காமால் நான் சொன்னபடி செய்துவிட்டு பணத்தை வாங்கிக் கொண்டுபே ா. இன்னொன்று இந்த ஃபார்முலா பற்றி, மூச்சு விடக்கூடாது என்று அவளிடம் சொல்லிவை. இப்போது போனை வைத்துவிடு என்ற நாகேந்திரன், அவனது பதிலை எதிர்பாராமலே ரிசீவரை வைத்து விட்டார்.

"என்னண்ணா, இப்போதும் அதே போலச் செய்து விட்டாரா? உன் பேச்சில் மற்ற விஷயம் பற்றி ஒன்றுமே சொல்ல வில்லையே." என்றவனைக் குறுக்கிட்டு "சொல்ல விட்டால் தானே?" என்றான் பூரணன்.

"இனி நாம் பேசிப் பயன் இல்லை பரத். என்ன சொன்னாலும், அவள் சொல்லச் சொன்னாளா, என்றுதான் கேட்கிறார். இது எல்லாமே பவித்ராவின் திட்டம் என்பதுதான் அவரது கருத்து. அந்த அளவுக்குப் பவித்ரா திருமணத்துக்கு எதிர்ப்பு தெரிவித்திருக்க வேண்டும். இந்தக் கல்யாணம் அவருக்கும் மிக மிக முக்கியம்தானே. மூன்று கோடிப் பணம் அல்லவா?, எனவே

அதிலேயே நிற்கிறார். இனி அவரை நம்ப வைக்க வேண்டும் என்றால், பவித்ராதான் பேச வேண்டும். சற்று புரிந்து கொள் பவித்ரா. எங்களுக்கு அந்த ஃபார்முலா கட்டாயமாய் வேண்டும். எத்தனைநாள் ஆனாலும் அது கிடைக்கும் வரை நீ இங்கேயே சிறை கிடக்கும்படி ஆகிவிடும். அந்த நிலை வேண்டாம் என்று நீ நினைத்தால், உன் தந்தையிடம் பேசி உள்ள நிலைமையைச் சொல்லி எங்கள் ஃபார்முலா சீக்கிரமே கிடைக்கும்படி செய். மற்றபடி, எங்கள் ஃபார்முலா கிடைக்கும்வரை உன்னை நாங்கள் விடப் போவது இல்லை" என்றான் அவன், குரலில் உறுதியைக் காட்டி. "அத்தோடு இங்கிருந்து எப்படியாவது தப்பி ஓடி விடலாம் என்றும் நினைக்காதே. இந்தச் சவுக்குத் தோப்புகளுக்குள் வழி கண்டுபிடித்துப் போவது பழக்கப்பட்டவர்களுக்கே கடினம். உன்னால் ஒரு போதும் முடியாது. நரி கிரி பிடுங்கி, செத்து வைக்கப் போகிறாய். அதனால் அந்த மாதிரி அசட்டு முயற்சி ஏதும் செய்யாதே" என்று எச்சரித்தான்.

மீண்டும் அவனை விசித்திரமாய் வெறித்துப் பார்த்தாள் பவித்ரா.

"என்ன? என்ன பார்வை இது? நீ என்ன முறைத்தாலும், எங்கள் நிலை மாற்ற முடியாதது, நிச்சயமானது, தெரிந்து கொள்."

"எத்தனை நாள் ஆனாலும் நான் என் தந்தையிடம் ஒரு போதும் பேசப் போவது இல்லை என்றால், என்ன செய்வீர்கள்? அடி, உதைக்கு நான் அஞ்சுகிறவள் இல்லை."

"அடி, உதைக்கு அஞ்சாதவள் கண் கரணாத இடத்திலிருந்து அவருடன் பேசப் பயப்படுகிறாய் என்றால், வேடிக்கையாக இல்லை?"

"டெலிபோனில் பேசுவதாலேயே உங்கள் தந்தையிடம் எளிதாக மறுத்துப் பேசி விடுவீர்களா?"

இருவரையும் மாறி மாறிப் பார்த்த பரத், தலையில் கையை வைத்துக் கொண்டு உட்கார்ந்துவிட்டான். இப்படித் தொடக்கமே சிக்கலாகும் என்று அவர்கள் எதிர்பார்க்கவில்லையே?

உதடு அழுந்த ஒரு கணம் நின்றுவிட்டு, "அப்படியானால் வேறு வழி தேட வேண்டியதுதான். முதலில், உன் துப்பட்டாவைக் கொடு" என்று நித்யபூரணன் கையை நீட்டவும், மற்ற இருவருமே அதிர்ந்து போயினர்.

ஒன்றும் சொல்ல மாட்டாமல் பரத் விழிக்க, துப்பட்டாவை இழுத்துப் பிடித்துக் கொண்டு, "ஏன்? என் துப்பட்டாவில்தான் உங்கள் எதிர்காலம் ஒளிந்து கொண்டு இருக்கிறதோ?" என்று நக்கல் பேசினாள் பவித்ரா.

"கிட்டத்தட்ட அப்படித்தான்" என்றான் நித்யபூரணன். "நீ எங்களிடம் மாட்டிக் கொண்டு இருக்கிறாய் என்று உன் தந்தை நம்பும்படியான சான்று வேண்டும் அல்லவா? அந்த வலப்புற அறையில் உனக்குத் தேவையான உடைகள் இருக்கின்றன. ஒன்றை எடுத்து அணிந்து கொண்டு இதை இந்த முழு சுரிதார் செட்டையும் கொடு. அதைப் பார்த்த பிறகாவது நம்புவாரோ, அல்லது இதையும் உன்_சூது என்றேதான் சொல்லப் போகிறாரோ?" என்று பூரணன் எரிச்சல்பட "சாரி" என்று சின்னக் குரலில் இயம்பினாள் அவள்.

"சாரியா? அதுவும் சரிதான். இப்படி ஒரு தகப்பனுடைய மகளாகப் பிறந்ததற்கு நீ நிச்சயமாய் வருத்தப்படத்தான் வேண்டும்" என்று முடித்தான் அவன்.

"அதில்லை. உங்களைத் தப்பாக நினைத்ததற்கு 'சாரி' என்று மன்னிப்புக் கேட்டேன்" என்று விளக்கம் கொடுத்தாள் பவித்ரா.

"ச்சு, ரொம்பத்தான் அவசியம்" என்று பூரணன் அலுத்துக் கொண்டான். அவளை ஒரு தரம் பார்த்துவிட்டு "உன்னை புரிந்து

கொள்ளவே முடியவில்லை. ரொம்பவும் ஒழுங்கு,நேர்மை உள்ளவள் போல, என்னைத் தப்பாக நினைத்ததற்கே மன்னிப்புக் கேட்கிறாய். ஆனால் எங்கள் தொழிலையே அழிக்கக் கூடிய தயாரிப்பு ரகசியத்தை அதுவும் எங்கள் உழைப்பினால் நாங்கள் கண்டுபிடித்ததை உன் தந்தை திருடிப் போயிருக்கிறார், அதைத் திரும்பப் பெறும் முயற்சியில் விரலைக் கூட அசைக்க மாட்டேன் என்கிறாய்" என்று கேள்வியாய் நோக்கினான்.

சற்று தயங்கிவிட்டு, "நியாயமும் நேர்மையும் முக்கியம் தான். ஆனால் என் அப்பா செய்த தப்புக்காக என்னை நானே அழித்துக் கொள்ள முடியுமா? அத்தோடு என் அப்பா அவர் விரும்புகிற விதமாக மட்டும்தான் எதையும் பார்ப்பார். இப்போது இந்தச் சுரிதாரை அனுப்பினால் கூட, நீங்கள் சொன்ன மாதிரி அதுவும் என் திட்டமே என்றே சொல்லக் கூடும்" என்றவள் புருவம் சுருக்கி, "இது என்னுடையது என்று கூட அவருக்கு அடையாளம் தெரியுமோ, என்னவோ?" என்று ஐயம் காட்டினாள்: "அந்த அளவுக்கு என்மேல் கோபம் அப்பா, என்னை நிமிர்ந்து கூடப் பார்ப்பது இல்லை."

"இது பெரிய பிரச்சனையல்ல. உன் அப்பாவுக்கு அடையாளம் தெரியாவிட்டால், உன் அம்மா அடையாளம் கண்டு அவரிடம் சொல்லிவிடப் போகிறார்கள்" என்றான் பூரணன்.

"அம்மா" என்று உடல் விறைத்தாள் பவித்ரா.

இரு இளைஞர்களால் கடத்தப்படுகிறோம் என்கிற முதல் கலக்கம், பவித்ராவுக்கு வெகுவாகவே மட்டுப்பட்டு விட்டிருந்தது.

தப்பான பார்வை கூட இல்லாதிருந்ததோடு, இந்தக் கடத்தலின் நோக்கமே வேறு என்று அறிந்ததும் அவளது பயம் கிட்டத்தட்ட மறைந்தே போய் விட்டது. கடத்திய இருவரும் கூட இது போன்ற குற்றங்களுக்குப் புதியவர்கள் என்பதும் நன்றாகவே புரிய, அவ்வப்போது அவளுக்கு வேடிக்கையாகக் கூட இருந்தது.

அதிலும் அந்த இருவரில் பெரியவன், அவளுடைய தந்தையுடன் பேசிய அழகும், சின்னவனின் குழப்பமும், எண்ணி எண்ணிச் சிரிக்கலாம். எத்தனையோ நாட்களுக்குப் பிறகு இறுக்கமின்றி, அவளது இதயம் இயல்பாகத் துடித்தது.

தந்தையைப் பற்றிய குன்றல் இருக்கத்தான் செய்தது.

ஆனாலும், அவளது சொந்தத் துயரம் மட்டும் இல்லையென்றால், நடப்பதைப் பார்த்து பவித்ரா ரசித்திருக்கவே கூடும். அதிலும், சிரிப்பும் எரிச்சலுமாக அந்தப் பெரியவன் தன் பயனற்ற முயற்சியைப் பற்றித் தெரிவித்தது, நினைத்து நினைத்து நகைக்க வேண்டியது. கூடச் சேர்ந்து பேசியே சிரித்திருக்கலாம்.

ஆனால் அவர்களது முயற்சி, அவளது துன்பம் இரண்டின் அடிப்படையுமே ஒன்றே என்று அறிந்த பிறகு சிரிப்பதாவது இன்னொன்றாவது?

எப்போதும் போல மீண்டும் நெஞ்சுக்குள் பிசையத் தொடங்கிவிட்டது.

யாரோ எதையோ தொலைக்க, யாரோ எதையோ திருட, அவள் தலையல்லவா உருண்டு விட்டது.

இந்தத் தூண்டில் மட்டும் இல்லையானால், அவளுடைய தந்தையிடம், அந்த நடேசனால், இப்படி ஒரு நிபந்தனையைச் சொல்ல முடியுமா, என்ன? கூறு கிழித்துப் போட்டிருக்க மாட்டாரா, தந்தை.

ஆனால் அவருக்கு ஒரு தேவை, ஒரு சுகம் என்றானதும்... எல்லாம் மாறி விட்டதே.

அந்த செல்வராஜாவை, அவள் அதுவரை பார்த்த நினைவு இல்லை. வீடு வரை அவன் வந்த போதும், அவனை அவள் நிமிர்ந்து பார்க்கவில்லை.

பார்ப்பதற்கு என்ன இருக்கிறது? இன்னொருத்தியுடைய கணவன். மனைவி உயிரோடு இருக்கிறாள். இரண்டு பிள்ளைகள். மூன்றாவது வயிற்றில்.

இந்த மூன்றாவது வயிற்றில் என்பதுதான் பவித்ராவுக்கு ரொம்பவும் வயிற்றைக் குமட்டியது.

ஒருத்தியோடு உறவாடி வாழ்ந்துகொண்டே, இன்னொருத்தியை விரும்புகிறவன் எப்படிப்பட்ட காவாலியாக இருப்பான்?

'ஆய் ஊய்' என்று கத்தியவளை, "உன் அப்பாவைப் போல இருப்பான்" என்ற தாயின் வார்த்தைகள், உச்சந்தலையில் அடித்துப் போட்டு விட்டன.

இதென்ன, சின்ன வீட்டுப் பரம்பரையா? அம்மா, அப்பாவுடைய சின்ன வீடு. மகள் ஒருத்தனுக்கு. இவள் மகள் இன்னொரு மன ஒழுக்கமற்ற காமுகனுக்கு. எண்ணம் ஓடும்போது, அவள் மெய்யாகவே வாந்தி எடுத்தாள்.

மகளின் தவிப்பைத் தெளிவாக உணர்ந்தபோதும், பக்கத்தில் நின்று தலையைத் தாங்கிக் கொள்ள முடிந்ததே தவிர, ரஞ்சிதத்தால் வேறு ஒன்றும் செய்ய முடியவில்லை.

செல்வராஜா வருகிறான் என்றாலே, வாந்தி வந்தது. காய்ச்சல் என்று படுத்தாள். என்ன செய்திருப்பானோ, பொறுத்துப் போகும்படி ரஞ்சிதம் குறுக்கே வந்து கும்பிட்டாள். ஆத்திரமாக முறைத்துவிட்டு தன் வீட்டுக்கு வரும் வரைதானே இந்த ஜாலம் எல்லாம் அப்போது பார்த்துக் கொள்கிறேன் என்று கறுவிவிட்டு அவன் போக பவித்ரா கண்ணீரில் கரைந்தாள்.

மற்றவர்களால் ஒப்புக்காகச் சொல்லப்பட்ட 'திருமணம்' என்ற வார்த்தையைக் கூட அவன் பயன்படுத்தவில்லை. அப்படியானால் அவளை அவன் எப்படி நடத்துவான்?

உடம்பின் ஒவ்வோர் அணுவும் கூசி நடுங்க, அவள் தந்தையிடம் மறுத்துப் பிடிவாதம் பிடித்து அடி வாங்கினாள். மூன்று கோடி ரூபாய் முதலீட்டில், தொடங்க இருக்கும் தொழிலில் பங்குதாரராகப் பத்திரம் பதிவாகிவிட்ட உற்சாகம் அவருக்கு. அதற்குத் தடையாக எது வந்தாலும், எரித்துப் பொசுக்கி விடத் தயாராக இருந்தார்.

தாயிடம் சொல்லி என்ன பயன்? என்னைப் போலவே, தலைவிதி என்று எண்ணிக் கொள்ளம்மா என்று விட்டு, 'என் கண்ணே' என்று அவளும் கூடச் சேர்ந்து அழுதாள்.

"நீயாவது பிறர் போற்ற பவித்திரமான வாழ்வு வாழ வேண்டும் என்று, இந்தப் பெயர் வைத்தேன்" என்று ரஞ்சிதம் குமுற, அதையும் மகளால் சகிக்க முடியவில்லை.

வீட்டை விட்டு வெளியேறி விடலாம் என்றால், அதற்கு ரஞ்சிதம் சம்மதிக்கவில்லை.

ஒரு செல்வராஜாவுக்குப் பயந்து வெளியே போனால் நூறு செல்வராஜாக்களிடம் மாட்டிக் கொள்ள நேரும் என்று

நிச்சயமாகச் சொன்னாள். அனுபவமோ, என்னவோ விவரம் கேட்க மனம் வராததோடு மீறும் தைரியமும் இல்லாது போயிற்று.

செத்து விடலாம் என்றாலோ, அதற்குரிய துணிவு வரவில்லை. அப்புறம் தனிமையில் தாய் தவிப்பாளே என்ற எண்ணமும் தடுத்தது.

மகளைப் பார்த்துப் பார்த்துத் தாயார் கண்ணீர் விடவும்தான் பவித்ரா வெளியே நடக்கத் தொடங்கியது. கால் ஓயுமட்டும் நடந்துவிட்டு வந்து விழுந்தால் கண்ணீர் விடக் கூடத் தெம்பின்றித் தூக்கம் வந்துவிடும். எதிர்காலத்தைப் பற்றி நினைக்கக் கூட, உடம்பில் சக்தியிராது.

அந்த செல்வராஜா வழியில் வந்து நிற்பானோ என்ற பயம் முதலில் இருந்தது. ஆனால் அவன் தந்தை அவனைக் கண்டித்துப் பொறுமை போதித்திருப்பதாகக் கேள்விப்பட்டபின், அந்தப் பயம் இல்லாது நடக்க முடிந்தது.

'கிணற்றுத் தண்ணீர் எங்கே போய் விடும்? கொஞ்சம் மனதை அடக்கவும் பயில்' என்ற தந்தையின் வார்த்தைக்குப் பணிந்திருக்கும் பரசுராமன் அவன். இங்கே போலப் பெற்றவரை எதிர்த்துப் பேசுகிற திமிர் அவனுக்கு இல்லை என்று மகளுக்கு ஒரு குட்டு வைத்து நாகேந்திரன் சொன்ன விவரம் அது.

ஆனால் உண்மையில் நடந்தது வேறு.

நடேசன் மகனைக் கண்டித்தார் என்பது உண்மையே. ஆனால் என்ன சொல்லிக் கண்டித்தார் என்பதில்தான் வேறுபாடு.

"தம்பி, அந்தக் காலத் திகம்பர சாமியார் கதையிலிருந்து இந்த மாதிரிப் பெண்களுக்காகவே பல வழிகள் எழுதி வைத்துக் கொடுத்திருக்கிறார்கள். ஆற்றில் கிணற்றில் விழுவது. தூக்கில் தொங்குவது என்று இப்போது பிளக்கில் கை வைப்பதும் தூக்க மாத்திரை விழுங்குவதும். அந்தப் பெண் பவித்ரா, அந்த மாதிரி எதுவும் பண்ணிக் கொள்ளாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

அவள் தகப்பன் திருடி, எடுத்து வந்து வைத்துக் கொண்டிருக்கிறானே அந்த ஃபார்முலா, ஒரு பொன் முட்டையிடும் வாத்து. கோடிக்கணக்கில் பணம் கொட்டும். இப்போதெல்லாம் நிதி நிறுவனம் நடத்துவது அவ்வளவு லாபகரமான தொழிலில்லை. அதனால் முடிந்த அளவு இந்தப் பணத்தை எடுத்து மற்றதில் போட்டுவிட்டு இதை மூடிவிட வேண்டும். அப்புறம் அதைப் பிடித்துக் கொண்டு நாகேந்திரனை விரட்டிவிட வேண்டும்" என்று மகனுக்குத் தன் திட்டத்தைத் தெளிவுப் படுத்திக் கொண்டு போனவரை பிள்ளை இடைமறித்தான்.

"லாபத்தில் ஐம்பது சதவீதம் தருவதாக எழுதிக் கொடுத்திருக்கிறீர்களே அப்பா."

"எழுத்தில்தானே இருக்கிறது? நிர்வாகம் நம் கையில். அப்போதும் லாபமோ, நஷ்டமோ நாம் எழுதிக் கொடுப்பது தானே? அதற்கு மேல் கணக்குக்காக என்று மூன்று கோடிக்குக் கடன் பத்திரத்தில் கையெழுத்து வாங்கி விடுவேன். 'சம்பந்தி' அல்லவா? சந்தேகப்படாமல் போட்டு விடுவான். ஒரு வட்டி என்றாலும் நசுங்கிச் செத்து விடுவான்.இதில் கொசுறுதான் உனக்கு அந்தப் பெண். முழுசும் அழகாகத் திட்டம் போட்டு விட்டேன். கையைக் காலைச் சும்மா வைத்துக் கொண்டிராமல் இடையில் ஏதேனும் கெடுத்தாய் என்றால் மவனே பிள்ளை யென்று பாராமல் பின்னிக் கட்டிவிடுவேன். ஜாக்கிரதை" என்று தான் மகனை எச்சரித்து வைத்திருந்தார் நடேசன்.

இது தெரியாமல் 'பரசுராமன் அது இதென்று' நாகேந்திரன் பிதற்ற தந்தை சொன்ன கிணற்றுத் தண்ணீரில் நெஞ்சு கலங்கி நின்றாள் மகள். ஆனால் கலக்குவது அது மட்டும்தானா? பத்தோடு பதினொன்றாய் இதுவும் ஒன்று என்றுதானே தேறி கால் வலிக்க நடந்தாள். அடித்துப் போட்ட கட்டையாக இரவில் சில மணி நேரம் தன்னை மறந்து தூங்கவேனும் முடிந்ததே. அதுவே பெரிய சுகம்.

ஆனால் மகள் திரும்பி வந்து சேரும்வரை தாய்க்குத் தவிப்புதான். எந்த வினாடியில் உயிரை வெறுத்து, லாரி பஸ்சுக்குள் பாய்ந்து விடுவாளோ என்ற அச்சம் போலும். அந்த மாதிரி எண்ணங்கள் சின்னவளுக்குச் சிலமுறை தோன்றியதும் உண்டு ஆனால், கடைசி நேரத்தில் தயக்கம் வந்து விடும்.

அப்படியே பவித்ரா நாட்களைக் கடத்திக் கொண்டிருந்த போது தான் அவள் கடத்தப்பட்டது.

பல்வேறு நிகழ்வுகள் பேச்சுகளிடையே அதுவரை தாயை மறந்திருந்தவள், நினைவு வந்ததும் கலங்கிப் போனாள்.

மாலை மயங்கி இருள் பரவத் தொடங்கி விட்டதே.

பாவம். அன்னை இப்போது என்ன நிலையில் இருக்கிறாளோ?

"ஐயோ.இவ்வளவு நேரம் நான் அம்மாவை மறந்து போனேனே. என் அம்மா என்னைத் தேடுவார்களே. சும்மா நடக்கும்போதே நான் திரும்பி வீட்டுக்கு வந்து சேரும்வரை. உள்ளூரப் பதைப்புத்தான் அவர்களுக்கு. இவ்வளவு நேரம் காணாமல் எப்படித் தவித்துப் போனார்களோ? ப்ளீஸ் மிஸ்டர்...."

"சும்மா. மிஸ்டர் என்றே சொல்லு எங்கள் பெயர் உனக்கு அனாவசியம்."

"மெய்தான். அது என்னவாக இருந்தாலும் எனக்கு ஒன்றுதான். ஆனால் எனக்கு சொல்ல வேண்டுமே. என்ன ஆனேனோ என்று பயந்து நடுங்கி அம்மா என்ன ஆனார்களோ தெரியவில்லையே."

"குசலம் விசாரிக்க வேண்டுமாக்கும்" என்றான் நித்யபூரணன் ஏளனமாக "எல்லாம் நாகேந்.... உன் தந்தை சொல்லியிருப்பார். கடத்தப்பட்டதாக..."

"சொல்ல மாட்டார். சொல்லமாட்டார். அதை அவரே நம்பவில்லை என்றீர்களே அதை ஒரு பொருட்டாகக் கருதி அப்பா. அம்மாவிடம் சொல்லியிருக்கவே மாட்டார். சொன்னாலும் அவர் நினைக்கிற விதமாகத்தான் சொல்லி 'உன் மகள் ஆட்டத்துக்கு நீயும் உடந்தையா?' என்று அம்மாவுக்கு திட்டுதான் விழுந்திருக்கும். பாவம் அம்மா. அப்படி எந்தவிதத் திட்டமும் கிடையாது என்று அவர்களுக்குத் தெரியும் அல்லவா? மெய்யாகவே கடத்தப்பட்டு மகளுக்கு என்னென்ன ஆயிற்றோ, என்று எண்ணிப் பதறிப் போய் நடுங்கிக் கொண்டு இருப்பார்கள். எனக்கு ஒன்றும் இல்லை பயப்பட வேண்டாம் என்று ஒரு வார்த்தை சொன்னால் போதும்."

"சொல்லிவிட்டால் உன் அம்மா நிம்மதியாக இருப்பார்கள். எதையும் ஒத்துக் கொள்ளாமல் உன் தகப்பனார், அவரைப் பொறுத்தவரை நிம்மதியாக உட்கார்ந்து திருடிச் சம்பாதித்த ஃபார்முலாவின் சங்கேதத்தை உடைக்க முயற்சி செய்து கொண்டு இருப்பார். நாங்கள் மட்டும் எங்கள் பொருளையும் பறி கொடுத்துவிட்டு திரும்பப்பெரும் காரியம் எதுவும் நடக்காமல் உன்னையும் பாதுகாத்துக் கொண்டு திணறித் திண்டாட வேண்டும். நல்ல ஐடியாதான். ஆனால் அப்படி எதுவும் நடக்காது ஏனென்றால் நாங்கள் அந்த அளவுக்கு முட்டாள்கள் அல்ல" என்று திட்டவட்டமாகத் தெரிவித்தான். நித்யபூரணன்.

"பாருங்கள் உங்களுக்கும் தாயார் இருக்கிறார்கள்தானே? பெற்ற மனம் என்ன பாடு படும் என்று கொஞ்சம் கூடவா பரிதாபம் இல்லை? அவ்வளவு கல் நெஞ்சமா? ப்ளீஸ்..." என்று கெஞ்சிக் கேட்டாள் அவள்.

தலையசைத்து "உனக்குப் புரியவில்லையா? நீ கடத்தப் பட்டதையே உன் தந்தை நம்பவில்லை. இந்த நிலையில் நீ நன்றாயிருப்பதாக வேறு, உன் தாயாரிடம் தெரிவித்தால் அவ்வளவுதான். என் திட்டம் அடியோடு வீணாகி விடும். முடியாது" என்றான் அவன்.

"ஐயோ ப்ளீஸ் அம்மாவின் உலகமே நான்தான். கவலையும் பயமுமாக ரொம்பவும் தவித்துப் போவார்கள்."

சற்றும் இளகாமல் "தவிக்கட்டும். தவித்தால்தான் நாகேந்திரனுக்குச் சாவி கொடுப்பார்கள். ஆசை மனைவியின் சாவியில் உன் அப்பா கதறிக் கொண்டு வரட்டும்" என்றுரைத்தான் பூரணன்.

"கடவுளே. நீங்கள் நினைக்கிற மாதிரியெல்லாம் ஒன்றும் கிடையாது. அம்மாவுக்காக அப்பா எதையும் விட்டுக் கொடுக்க மாட்டார். ஆனால் அம்மா சொன்னால் புரிந்து கொள்வார்கள். முதலிலேயே எச்சரித்து விட்டால் அப்பாவிடம் சொல்ல மாட்டார்கள்."

"ஓகோ, ரொம்பவும் புரிந்து கொள்கிற ரகம் போலிருக்கிறது. ஆனால் அப்படிப்பட்ட அம்மாவோடு வசித்துக்கொண்டுதான் 'சாகத்தான் ஆசை' என்றாயில்லையா? பொய்யா? நீ முன்பு சொன்ன அந்தக் கதையையே எந்த அளவுக்கு நம்புவது என்று இப்போது தெரியவில்லையே."

சோர்ந்து போய் அமர்ந்தாள் பவித்ரா. நிராசையுடன் நோக்கி, "இப்போது நான் என்ன செய்ய வேண்டும் என்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

சற்று நேரமாகவே பெரியவனின் முகத்திலும் யோசனையின் அறிகுறிதான்.

என்ன செய்வது என்று யோசித்து விட்டவன் போல, உடனே பதில் சொன்னான். "இப்போதைக்கு யாரும் எதுவும் செய்ய வேண்டாம். இரவு நெருங்கி விட்டது. பேசாமல் படுத்துத் தூங்கிவிட்டு நாளைக் காலையில்..."

"ஐயையோ இரவு முழுவதுமா...? என் அம்மா தாங்கிக் கொள்ளவே மாட்டார்கள். அதற்குள் அவர்களுக்குப் பைத்தியமே பிடித்துவிடும்" என்று பதறினாள் பெண்.

"பிடிக்கட்டும்" என்றான் நித்யபூரணன் இரக்கமற்று. அப்படி உன் தாயார் பாயையும், பாயோடு சேர்த்து உன் அப்பாவையும் பிராண்டுகிற வேகத்தில் அவருக்கு ஒரு வழியாக ஞானோதயம் ஆகட்டும். அப்புறமாவது நான் சொல்வதைக் கொஞ்சம் காது கொடுத்துக் கேட்பார் அல்லவா?" என்று அவன் காரணம் கூறிய போது அவளால் ஒன்றுமே பேச முடியாது போயிற்று.

என்ன பேசுவது? 'கொக்குக்கு ஒன்றே மதி' என்பது போல அவளுடைய தகப்பனார் மட்டும் மகளை ஓர் அயோக்கியனிடம் ஒப்படைப்பதால் வரக்கூடிய செல்வத்தை மட்டுமே நினைத்துக் கொண்டிராமல் மற்ற விஷயங்களையும் யோசித்திருந்தால் இந்த மாதிரி நேரத்தில்கூட இவள் இப்படி வாயடைத்து நிற்க வேண்டியிருக்குமா?

அவருக்கு மகளின் நல்வாழ்வைப் பற்றிய எண்ணம் காணாமல் போய், எத்தனையோ நாட்கள் ஆயின. அதனால் அதை விட்டு விடலாம்.

ஆனால் அந்த ஃபார்முலா? உடையவன் தன் பொருளை விடுவானா? அதை மீண்டும் கைப்பற்ற ஏதேனும் முயற்சி செய்ய மாட்டானா, என்றேனும் யோசிக்க வேண்டாமா? வாய் திறந்து 'ஃபார்முலா' என்று அவன் கேட்ட பிறகும் அந்த எண்ணம் வரவில்லையே. மகளைப் பலியிட்டு வருகிற பணமும் அதனால் பெறக்கூடிய சுகமும் மட்டும்தான் அவரது மனம் முழுவதுமாய் இருப்பதெல்லாம்.

'அப்பாவுக்கு உன்னிடம் பிரியம் உண்டு கண்ணு. கடவுள் அருளால் அவராகவே மனம் மாறினாலும் மாறலாம்' என்று ரஞ்சிதம் மகள் மனதில் வளர்க்க முயன்ற நப்பாசை, ரொம்பவும் லேசாகத் துளிர்விட முயன்று கொண்டிருந்த அதுவும் கூட இப்போது அடியோடு மடிந்து போயிற்று.

ஆனால் பாவம் அவளுடைய தாய் அவளுக்கு மட்டும் எப்போதும் துன்பம்தானா? இவனும் இரக்கமற்றுப் பேசுகிறானே.

மீண்டும் கேட்டுப் பார்க்கலாம் என்று எண்ணி, அவள் நிமிரும் போதே அவன் சொன்னான். "இதோபார் இந்தப் பக்கத்து அறையை உனக்காக ஒதுக்கியிருக்கிறோம். உள்ளேயே ஒரு புறமாய் குளியல் அறையும் இருக்கிறது. ஆனால் அங்கிருந்து வெளியே எங்கேயும் போக முடியாது; போனாலும், நல்லபடியாக மெயின் ரோடு போய்ச் சேர முடியாது என்பதை முன்பே சொல்லியிருக்கிறேன். இதோ. இதில் இரவு உணவுக்குத் தேவையானதை எடுத்துக் கொண்டு போய் உள்ளே போய்த் தாளிட்டுக் கொள். விரும்பிய நேரம் சாப்பிட்டுவிட்டுப் படுகுட்நைட்."

அத்தோடு விஷயம் முடிந்தது என்பது போலத் தம்பியின் பக்கம் திரும்பி, அவர்களது தொழில் சம்பந்தமாக எதையோ பேசத் தொடங்கி விட்டான்.

ஆத்திரத்துடன் அவனை முறைத்தாள் பவித்ரா.

பவித்ராவின் முறைப்பை நித்யபூரணன் சற்றும் சட்டை செய்யவில்லை.

அவ்வப்போது பரத், அவளைத் திரும்பிப் பார்த்தபோதும், மற்றவன் தொழில் பேச்சைத் தீவிரமாகப் பேசவும், அவனும் அதில் ஈடுபட்டு அவளை மறந்தே போனான். சற்றுநேரம் பொறுத்துப் பார்த்துவிட்டு "பாருங்கள் மிஸ்டர் பரத்துடைய அண்ணன்" என்று அவனை அழைத்துப்பேசத் தொடங்கினாள் பவித்ரா.

"பூரணன். நித்யபூரணன். பரத்தின் பெயர் தெரியும்போது என் பெயர் தெரிவதில் தனியாகப் பிரச்சனை எதுவும் இல்லை. பெயர், பேச்சுவார்த்தை எல்லாம் அவசியம் இல்லாதபடி விஷயம் சீக்கிரமாக முடிந்து விடும் என்று எதிர்பார்த்தேன். ஆனால் நாகே... உன் அப்பாதான், 'கொக்குக்கு ஒன்றே மதி' என்று வேறு எதையும் நினைத்து பார்க்கக்கூட மறுக்கிறாரே" என்றான் பூரணன்.

சற்று முன் தந்தையைப் பற்றி இதே வார்த்தைகளை எண்ணியது நினைவு வர, பவித்ரா உள்ளூரத் திடுக்கிட்டாள்.

கூடவே 'பூரணன்' என்ற பெயரும் அவளைத் திகைக்க வைத்தது எனலாம். அவனது பல்வேறு உத்திகளால் தன் வியாபாரம் கெடுவதாகக் கூறி தந்தை அடிக்கடி ஆத்திரப்பட்ட அந்தப் 'பூரண'னா இவன்? தொழிலில் திருப்பி அடிக்க இயலாமல், 'தேங்காய்ப் பூரணம், கொழுக்கட்டைக்குள் வைத்து அப்படியே கடித்துத் தின்ன வேண்டும்' என்றெல்லாம் கூட நக்கலாக நாகேந்திரன் சொல்வதுண்டு. தொழிலில் தந்தையைத் திணறடிக்கும் ஒருவர் அவரது சமகால எதிரியாக இருப்பார் என்றே பவித்ரா எண்ணியிருந்தாள். ஆனால் அவன் இவ்வளவு இளைஞனாக இருக்கிறானே.

ஆனால் இப்போது விஷயம் அவனது தோற்றமல்ல. அவனது இன்னோர் அதிரடி நடவடிக்கையின் விளைவு.

திகைப்பையும், திடுக்கிடலையும் சமாளித்துக் கொண்டு "அம்மா ரொம்பவும்..." என்று மீண்டும் தொடங்கியவளை இடைமறித்தான் அவன்.

"இல்லை. அந்த விஷயம் பேசி முடித்தாயிற்று. இப்போது சாப்பாட்டை எடுத்துக் கொண்டு உள்ளே போ" என்று உத்தர விட்டான் அவன்.

"எனக்குச் சாப்பாடு வேண்டாம்" என்றாள் அவள் ஆத்திரத்துடன்.

"உன் விருப்பம். உனக்குத்தான் பட்டினி கிடந்து பழக்கம் போல இருக்கிறது. இன்னொரு வேளை பட்டினியில் என்ன ஆகிவிடும்? ஆனால் எதற்கும் அறைக்குள் கொஞ்சம் உணவை எடுத்து வைத்துக் கொள்வது நல்லது. சினிமாக்களில் வருவது போல நள்ளிரவில் பசித்தால், இங்கே வந்து எடுத்து உண்ண முடியாது. ஏனெனில், உன் அறைக்கதவு வெளியிலும் பூட்டியிருக்கும். காரணம் சொல்லாமலே புரியும் என்று நினைக்கிறேன்." என்று சற்றும் அசையாமல் சொன்னான் பூரணன்.

தலையைத் திருப்பிக் கொண்டு அறைக்குள் சென்றவளைப் பின் தொடர்ந்து சென்றான் நித்யபூரணன்.

அவள் திடுக்கிட்டு விழிக்கவும் இரண்டு பிஸ்கட் பாக்கெட்டுகளை அங்கிருந்த சிறு மேஜை மீது வைத்தான். "பசித்தால் சாப்பிடு. நாங்கள் யாரையும் பட்டினி போட்டுக் கொல்வதற்காகக் கடத்தி வரவில்லை" என்றான்.

ஏனோ கண்ணைக் கரித்தது அவளுக்கு.

ஆனால் அவளை ஏறெடுத்தும் பாராமல் வெளியேறி, அந்த அறையின் கதவின் வெளிப்புறத்தாளை மாட்டிவிட்டுத் தம்பியிடம் திரும்பினான். நித்யபூரணன். "இந்தப் பெண்ணை இன்னும் எத்தனை நாட்கள் பராமரித்தாக வேண்டுமோ தெரியவில்லையே, பரத். அவள் தகப்பனுக்கு அவளால் வரக்கூடிய பணம் மட்டும்தானே மனதில் படுகிறது. அதற்கு இடையூறு வந்து விடாமல் பார்க்கிறானே தவிர, வேறு நினைப்பே வரவில்லையே?" என்றான் அலுப்பும், வெறுப்புமாக

"ஆனால் அவளைப் பார்த்தால் பாவமாக இருக்கிற தண்ணா" என்றான் தம்பி.

"ரொம்பவே பாவம்தான். இப்படியொரு நிலைமை எந்தப் பெண்ணுக்கும் வரக்கூடாது."

"பின்னே ஏன் அண்ணா அப்படிப் பார்த்தாய்?" என்று தன் சந்தேகத்தைக் கேட்டான் தம்பி.

சற்று தயங்கிவிட்டு, "பவித்ராவுக்கு உதவி செய்வது பற்றி நீ பேசத் தொடங்கினாயே அப்போது பார்த்ததுதானே?" என்று கேட்டவன் மீண்டும் ஒரு வினாடி பேசாதிருந்தான். பிறகு, "அந்தப் பெண்ணுக்கு நாம் எப்படிம்மா உதவ முடியும்? அவள் குடும்ப விவகாரம். பெற்றவர், மகளுக்கு ஓர் ஏற்பாடு செய்கிறார். நாம் யார் அதில் தலையிட?" என்று கேள்வியாகப் பதில் சொன்னான்.

ஆனால் அதை ஒத்துக் கொள்ள மறுத்தான் சின்னவன். "அதற்காக மனிதத் தன்மையை விட்டுவிட முடியுமா, அண்ணா? உரிமை இல்லைதான் ஆனால் நமக்கு ஒரு தேவை என்றதும் கடத்தி வந்தோமே, அதுவும் உரிமை மீறல்தானே? செய்யவில்லையா?! துன்பத்திலிருக்கும் ஒரு பெண். எப்படி அழுதாள் பாவம். அவளுக்கு உதவுவது கடமையில்லையா?"

மறுபடியும் ஒரு கணம் தயங்கிவிட்டுத்தான், பூரணன் பதில் சொன்னான். "நீ 'விதுர நீதி' படிக்க வேண்டும், பரத். அதில் விதுரர் திருதிராஷ்டிரனுக்கு ஒரு நீதி சொல்லுவார். ஒரு குடும்பம் நன்றாக இருப்பதற்காக குடும்பத்தில் ஒருவரைப் பலி கொடுக்கலாமாம்..."

"இங்கே எந்தக் குடும்பத்துக்காகப் பவித்ராவைப் பலி கொடுப்பது? அவளுடைய தகுதியற்ற தகப்பனின் பேராசைக்காகவா?" என்று ஏளனமாகக் கேட்டான் பரதன்.

"முழுசும் கேட்டுவிட்டுப் பேசு." என்று 'விதுர நீதி' யைத் தொடர்ந்தான் அவன் அண்ணன். "ஒரு கிராமத்துக்காக ஒரு குடும்பத்தைப் பலி கொடுக்கலாம். ஒரு நாட்டுக்காக ஒரு கிராமத்தையே பலி கொடுக்கலாம். அது போல இந்த அஸ்தினாபுரத்துக்காக உன் மகன் துரியோதனனை விட்டுவிடு'

என்று விதுரர் சொல்வதாக வருகிறது. இப்போது பவித்ராவுக்கு நாம் செய்யக் கூடிய உதவி என்ன? அவளுடைய தந்தை நாகேந்திரனிடம் அவளை அனுப்பாமல், அவளும் அவளுடைய தாயாரும் நல்லபடியாக வாழ, ஒரு வழி காட்டுவது. அப்படித்தானே?"

"ஆமண்ணா. அதை நாம் செய்யலாம் இல்லையா?"

"செய்துவிடலாம். அது ஒன்றும் நம்மால் முடியாத காரியம் அல்ல. ஆனால், அப்படிச் செய்தோமானால், நம் புதிய ஃபார்முலாவை நாம் திரும்பப் பெறுவதற்கான ஒரே வாய்ப்பும் அடைபட்டுப் போகும். வெறும் தயாரிப்புக் குறிப்புதானே என்று அதை நாம் அலட்சியமாக நினைக்க முடியாது. எதிர் காலத்தில் நம் தொழில், அதை நம்பி வாழும் நம் குடும்பங்கள், தொழிற்சாலையிலும், நம் வீடுகளிலும் பணிபுரியும் எத்தனையோ பேருடைய நல்வாழ்வு, எல்லாமே நாசமாகிப் போகும். நமக்கு எந்த விதமான சொந்த பந்தமும் இல்லாத ஒருத்திக்காக இந்தத் தியாகம் செய்வதா? அதைவிட அவளைத் தியாகம் செய்து விடுவதுதானே சரியாகும்?"

பெருமிதமும் பெருமதிப்புமாக அண்ணனைப் பார்த்தான் பரத். "இந்த மாதிரி நான் நினைத்துப் பார்க்கவே இல்லை அண்ணா. நீ சொல்வதுதான் சரி. பவித்ராவிடம் பரிதாபப்படலாம். ஆனால், அதற்கு மேல் நாம் எதுவும் செய்வதற்கில்லைதான். ஆனால் இந்த முடிவை எடுக்க நேர்ந்தது உனக்கும் மனதுக்குக் கஷ்டமாகத்தான் இருந்திருக்கும். இல்லையாண்ணா? நானே கவனித்தேனே. உன் பேச்சுகூட அவ்வப்போது தடுமாறிற்றே" என்றான் சின்னவன்.

"அதற்கென்ன செய்யமுடியும்?" என்றான் பெரியவன் சப்பிட்ட குரலில். கூடவே உரக்க யோசித்தவன் போல. "எல்லாமே அந்தப் பெண் பவித்ரா சொன்னதுதானே? எந்த

அளவு உண்மை என்று நமக்கு என்ன தெரியும்?" என்று முணுமுணுத்தான்.

இரவு எப்படியோ கழிந்தது.

படுக்கக் கூட இல்லாமல் பவித்ரா வெகு நேரம் அறையினுள் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டே இருந்ததை ஆண்கள் இருவருமே அறிவார்கள். விளக்கை அணைத்து விட்டிருந்தாலும் அவளது அரவம் கேட்டுக் கொண்டேதான் இருந்தது.

ஒரே ஒருமுறை கதவைத் தட்டி, "அம்மா ரொம்பப் பயப்படுவார்கள். ப்ளீஸ்." என்று கெஞ்சிப் பார்த்தாள்.

ஆனால் "உன் தாயார் எவ்வளவு பயப்படுகிறார்களோ, அவ்வளவுக்கு நல்லது" என்று நித்யபூரணன் இரக்கமற்றுக் கூறிவிடவும், அதற்கு மேல் அவள் கெஞ்சவில்லை.

படுப்பதும் எழுவதுமாக இரவு பூராவும் அவள் உறங்கவுமில்லை.

அண்ணன் தம்பிக்கும் கூட அரைகுறை உறக்கம்தான். அவ்வப்போது வந்துபோன இடம்தான் என்றாலும் எடுத்திருந்த பணி அடியோடு பழக்கமற்றது ஆயிற்றே.

அறிமுகமற்ற ஒரு பெண்ணின் பொறுப்பு வேறு. ஏடாகூடமாக அவள் ஏதேனும் செய்து வைத்து விட்டால் என்ன ஆகும்?

அந்தப் பயத்திலேயே ஆண்கள் இருவரும் சரியாகத் தூங்கவில்லை.

பொழுது விடிந்தபோது மூவருக்குமே ஆறுதல்தான்.

குளியல் அறையிலிருந்த புதிய பிரஷ் கொண்டு பல்லைத் துலக்கிக் கொண்டு பவித்ரா வெளியே வந்ததும், "இதோ காபியைக் குடி. காலைக் காபியோடு இரண்டு 'ஸ்லைஸ்' ரொட்டி

சாப்பிடுவது என் பழக்கம். நீயும் சாப்பிடுகிறாயா? அதை முடித்துவிட்டு உன் தந்தைக்குப் போன் பண்ணலாம்" என்றான் நித்யபூரணன்.

என்னவோ அவன் வீட்டுக்கு வந்த விருந்தாளியை போல உபசரிக்கிறானே. கோழி பிடிக்கிற மாதிரி கொண்டு வந்துவிட்டு.

"எனக்கு முதலில் என் அம்மாவுடன் பேச வேண்டும்" என்றுவிட்டு காபியை வாங்காமலே சோபாவில் உட்கார்ந்தாள் பவித்ரா. "அம்மாவிடம் பேசிய பிறகுதான் நான் எதையேனும் உண்பது அருந்துவது எல்லாம்" என்றாள் அழுத்தமான குரலில்.

"ஓ... உண்ணாவிரதப் போராட்டமா? எதற்காக அவசியமற்று? உன் அப்பாவிடம் பேசினால் அம்மாவுக்கு தானாக விஷயம் தெரிந்துவிட்டுப் போகிறது."

"உங்கள் விஷயம் தெரியலாம். அத்தோடு மிரட்டிக் காரியம் சாதிக்க முயற்சிப்பதால், என்னைப் பற்றிக் கவலை ஏற்படுத்தும் விதமாகவும் அது இருக்கக்கூடும். ஆனால் உண்மையில் எனக்கு எந்த விதமான ஆபத்தும் இல்லை என்பது தெரியாது. அதனால் நான் அம்மாவிடம்தான் பேச வேண்டும்" என்றாள் அவள் பிடிவாதமாக.

"அது ஏன் கூடாது என்று உனக்கு நான் நேற்றே விளக்கிச் சொல்லி விட்டேன். தயவு பண்ணிப் பொறுமையைச் சோதிக்காதே, பவித்ரா. அப்புறம்..."

அச்சமற்று அவனை நிமிர்ந்து நோக்கினாள் பவித்ரா. "அப்புறம் என்ன ஆகி விடுமாம்?" என்று அலட்சியமாகக் கேட்டாள் அவள்.

"ஆபத்து இல்லை, ஆபத்து இல்லை என்று சொல்லிக் கொண்டு இருக்கிறாயே அது தவறான கருத்தாகி விடக்கூடும்" என்று பூரணன் கூறியதை அவள் பெரிதாக எடுத்துக்

கொள்ளவில்லை. இவர்கள் குற்றத்துக்குப் புதியவர்கள் என்று தெரிந்து கொண்டிருந்தமையால் அதை வெறும் வெற்று மிரட்டலாகக் கருதி அலட்சியமாகத் தலையைத் திருப்பினாள்.

அவள் தன்னைச் சீண்டி விட்டாற்போல உணர்ந்து டெலிபோன் கருவியை எடுத்து வந்து எண்களை அழுத்தினான் அவன். நாகேந்திரன கிடைத்ததும், "உங்கள் பெண்ணின் விடுதலை பற்றி என்ன முடிவு செய்தீர்கள்?" என்று வினவினான்.

அவர் பழைய பாணியிலேயே பேசத் தொடங்கவும், அவரிடமும் பொறுமையிழந்து, "கீறல் விழுந்த கிராமஃபோன் ரிக்கார்டு மாதிரி உங்களுக்கு வேறு ஒன்றுமே தெரியாதா? இரவில்கூட அவள் வீடு வரவில்லையே. அதைக் கூடவா யோசிக்க மாட்டீர்கள்? என்ன தகப்பன்?" என்று எரிந்து விழுந்தவன், பவித்ராவிடம் ரிசீவரை நீட்டி "இந்தா நீ பேசு" என்றான்.

மறுப்பாய் அவள் தலையைத் திருப்பவும், அந்தச் செய்கையாலேயே அதிக ஆத்திரமுற்றான் அவன். அவளைப் பற்றி இழுத்து ரிசீவரை அவள் கையில் திணித்து "சொல்வித் தொலை. நீ என்னிடம் எப்படி மாட்டிக் கொண்டிருக்கிறாய் என்பதை உன் அப்பனிடம் சொல்லு. சொல்லுடீ" என்றவன் சட்டென அவளை அறையக் கையை ஓங்கினான்.

பவித்ரா மிரண்டு விழித்தாள்.

நித்யபூரணனின் ஓங்கிய கரம் அதே வேகத்தில் அவள் மீது பாய்ந்திருந்தால் அவள் தாங்கியிருப்பாளோ என்னவோ?

ஆனால் அவன் என்ன நினைத்தானோ அவள் அதிர்ந்து நோக்கும் போதே, அவன் கை இறங்காமல் அந்தரத்திலேயே நின்று விட்டது.

"சை" என்று கையை இறுக மூடித் திறந்தவன் டெலிபோன் கருவியை அவள் கையிலிருந்து பிடுங்கி அதன் தாங்கியில் வேகத்துடன் அறைந்து வைத்தான்.

கலக்கத்துடன் பார்த்தவளிடம்."போம்மா. போய், உன் பட்டினிப் போராட்டத்தை சந்தோஷமாக நடத்து. ஆனால் அதற்குப் பயந்து வளைந்து கொடுப்பேன் என்று மட்டும் எதிர்பார்க்காதே. பட்டினியில் சத்துக் கெட்டு, நீ வழிக்கு வருகிறாயா அல்லது அதற்குள் தகப்பனுக்குத்தான் புத்தி வருகிறதா என்று பார்ப்போம். போ போய் உன் வயிற்றைக் காயப்போடு" என்று எரிச்சலோடு கூறினான்.

"செத்தாலும் நான் ஒரு போதும்..."

"ஆமாம். கடைசியில் அதுதான் நடக்கப் போகிறது. சாவது. போய்ப் பட்டினி கிட அது உனக்குப் பழக்கம் தானே? ஏற்கனவே நன்றாகப் பட்டினி கிடந்து எலும்புக்கூடாய் இருக்கிறாய். இனிச் சீக்கிரமாகச் செத்தும் போய் விடுவாய். அப்புறம், உன் உயிரற்ற உடலைப் பார்த்து உன் தாயார் ஆனந்தப் படட்டும்" என்று எகத்தாளம் செய்தான் நித்யபூரணன்.

திகைத்து நோக்கியவள், மறு பேச்சின்றி டீபாயை அணுகி அதிலிருந்த ரொட்டியைப் பிய்த்து வாயில் திணித்துக் கொண்டாள். ஆனால் விழுங்க முற்பட்ட போது வறண்டு காய்ந்திருந்த தொண்டையில் ரொட்டி சிக்கி, விக்கியது.

பார்த்துக் கொண்டேயிருந்த நித்யபூரணன், சட்டென அருகில் சென்று தண்ணீரை எடுத்துக் கொடுத்து குடிக்க வைத்து அவள் முதுகைத் தடவி விட்டான்.

விக்கல் நிற்க, காரணம் அறியாமல் அவள் கண்களில் கண்ணீர் பெருகியது.

சில வினாடி பார்த்துக் கொண்டு நின்றவன் உள்ளே சென்று ஒரு சின்ன டவலை எடுத்து வந்து அவளிடம் கொடுத்தான்."முகத்தைத் துடைத்துக் கொள்" என்றான்.

அவன் சொன்னபடி செய்துவிட்டு அசையாமல் சிலையாய் உட்கார்ந்திருந்தாள் அவள்.

புருவம் சுருக்கி எதையோ யோசித்தவன் அவள் முன்னே ஒரு சோபாவில் அமர்ந்து கொண்டு "சற்று பேசலாமா?" என்று தொடங்கினான் பூரணன்."இப்போது நீ உன் தந்தையுடன் பேச மறுப்பதன் காரணம், திருமண விஷயமாய் அவர் உன்னை அதட்டிப் பணிய வைக்க முயற்சிப்பார் என்பதற்காகத்தானே?" என்று கேட்டான்.

அவனை ஏறிட்டுப் பார்த்தவள் இமைகளைத் தாழ்த்திக் கொண்டு "ஆ... ஆமாம்" என்றாள்.

"ம்ம்ம்...இன்னும் ஏதோ இருப்பது போலத் தோன்றுகிறதே." என்றான் அவன்.

உதட்டைக் கடித்துக் கொண்டு அவள் பேசாதிருக்கவும் "பரவாயில்லை சொல்லிவிடு. உன்னைத் தொட்டுத் தூக்கி ஒரு முழு நாள் கூட முடியவில்லை என்றாலும் எத்தனையோ

ஆண்டுகள் ஆனது போலவே தோன்றுகிறது. உன்னை மையமாக வைத்தே முழுத் திட்டத்தையும் தீட்டியதால் இருக்கலாம். சற்றுமுன் கையை ஒங்கியதற்கு மன்னித்துக் கொள். பெண்களிடம் கை நீட்டுவது என் வழக்கம் அல்ல." என்றவன், அவளது கண்கள் பளிச்சிடவும், புரிந்து கொண்டு, "பெண்களைக் கடத்துவதும் எனக்குப் பழக்கமானது அல்ல" என்று சேர்த்துரைத்துப் புன்னகை செய்தான்.

அவளும் புரிந்தாற்போல முறுவலிக்க இருவர் முகங்களும் சற்று நேரம் மலர்ந்திருந்தன.

சற்று வியந்து நோக்கிவிட்டு தலையை உலுக்கிக் கொண்டு அவனே தொடர்ந்தான்."இந்த மாதிரி நேரத்தில் கூட இலகுவாகக் கேலி வருகிறது. நீ, நாகேந்திரன் மகள் என்றால் நம்பவே முடியவில்லை. ம்...சரி அதிருக்கட்டும் இப்போதைய விஷயத்துக்கு வருவோம். இப்போது எங்களுக்கு அந்த ஃபார்முலா கட்டாயம் வேண்டும் பவித்ரா. இரண்டு ஆண்டுகளின் கடும் உழைப்பு. லட்சக்கணக்கில் பணச் செலவும் செய்து நாங்கள் கண்டுபிடித்தது. இவ்வளவு சுளுவாக உன் தந்தை அதைத் தட்டிக் கொண்டுபோக விட்டு விட்டு, நான் எப்படிச் சும்மா இருக்க முடியும்? அதனால்தான் இப்படியெல்லாம் செய்யும்படி ஆயிற்று. இப்போது எங்களுக்குக் கிடைத்திருக்கும் ஒரே துருப்புச் சீட்டு நீதான். அதனால் எங்கள் தயாரிப்புக் குறிப்பு திரும்பக் கிடைக்கும் வரை உன்னை நாங்கள் திருப்பி அனுப்ப முடியாது. அதனால்தான் உன் ஒத்துழைப்பைக் கேட்கிறேன்.நீ கொஞ்சம் ஒத்துழைத்தால் எங்கள் ஃபார்முலாவும் சீக்கிரம் கிடைக்கும் நீயும் சீக்கிரமாக உன் சொந்த வீட்டுக்குத் திரும்பிப் போகலாம் " என்று சொல்லி முடித்தான்.

விழிகள் அகல கண் சிமிட்டாமல் அவனையே பார்த்தாள் அவள்.

"அவ்வப்போது என்ன பார்வை இது?" என்று அவன் கேட்டபோது அவள் திருப்பிக் கேட்டாள். "நான் சீக்கிரமாக எங்கள் வீட்டுக்குப் போக வேண்டும் என்று உங்களிடம் எப்போதாவது கேட்டேனா?"

திகைத்துப் போனான் நித்யபூரணன் "பவித்ரா நீ..."

"யோசியுங்கள். அந்த வீட்டில் எனக்குக் காத்திருக்கும் விதி என்ன? மூன்று குழந்தைகளும், அவர்களைப் பெற்ற மனைவியையும் உடைய ஒரு... ஓர் ஒழுக்கமற்றவனுக்கு ஆசைநாயகி ஆவது. என்னதான் திருமணம் அது இதென்று என் அப்பா கௌரவமாகப் பெயர் கொடுத்துப் பேசிக் கொண்டாலும் மதிப்போ மரியாதையோ, அதில் அணுவளவு கூடக் கிடையாது. மதிப்பு, மரியாதை இல்லாவிட்டலும் ஒழுக்கம், நியாயம் என்பதும் கிடையாது. இதை என் மனம் ஒப்புமா? இப்படி ஒரு நரகத்துக்குச் செல்ல நான் ஆசைப்படுவேனா? அன்றி அவசரம்தான் கொள்வேனா? ஒரு கொடிய விதியைத் தள்ளிப் போடஒரு வாய்ப்புக் கிடைக்கும்போது நானே அதைக் கெடுப்பேனா? நீங்கள் சொல்லுங்கள்." என்று தன் விளக்கத்தை முடித்தாள் பவித்ரா.

சின்ன வயதிலிருந்து அவன் அறிந்த வரையில் முதல் தடவையாக நித்யபூரணன் பதில் சொல்ல முடியாமல் திகைத்து நின்றான்.

சற்று பொறுத்து, "ஒன்றை நீ யோசிக்கவில்லை பவித்ரா. என் ஃபார்முலாவைத் தந்து விட்டார் என்றால் அதன் பிறகு அவரால் இந்த மாதிரி சென்ட் தயாரிப்பது முடியாத காரியம். தயாரிப்புக் குறிப்புகள் இல்லாதபடி 'உங்களுக்காக' நடேசன், மூன்று கோடி ரூபாயை உன் தந்தையிடம் கொண்டு போய்க் கொட்டுவாரா? அப்புறம் இந்தப் பெயரளவுத் திருமணமும் நின்றுவிடும்தானே? எந்த வித ஆதாயமும் இல்லாமல் உன் தந்தை உன்னை அந்த

மாதிரித் தள்ள மாட்டாரே. அதை எண்ணிப் பார்" என்றான் நித்யபூரணன்.

சந்தோஷப்படுவதற்குப் பதிலாக பவித்ராவின் முகம் வாடிப் போயிற்று. "நீங்கள் உங்கள் விஷயம் மட்டும்தானே பார்க்கிறீர்கள்?" என்றாள் வருத்தத்துடன்.

விதுர நீதியெல்லாம் விளக்கி பவித்ராவைப் பலி கொடுப்பதைத் தம்பியிடம் நியாயப்படுத்தியவனால் இப்போது அப்படிப்பேச முடியவில்லை. "அப்படியில்லை பவித்ரா. தனக்கு லாபம் வராமல் நடேசனோ, நாகேந்திரனோ எதையும் செய்ய மாட்டார்கள்," என்று வேறு மாதிரி விளக்கம் கொடுக்க முயன்றான்.

"அப்படியென்று நிச்சயமாக உங்களால் சொல்ல முடியுமா? ஒரே மகனின் ஆசைக்காகத்தான் இவ்வளவும் செய்வதாக நடேசன் சொன்னாராம். புது சென்ட் தயாரிக்க முடியாததால் மட்டும் அந்த ஆசை போய் விடுமா? அல்லது தகாத அந்த ஆசை நிறைவேறுவதற்கான முயற்சிகள் தொடராது நின்று விடுமா? அப்படி நம்ப நான் தயாரில்லை. அத்தோடு இன்னும் ஒன்றை நீங்கள் மறந்து விட்டுப் பேசுகிறீர்கள். உங்கள் தயாரிப்புக் குறிப்புகளை அப்பா ஒரு ஜெராக்ஸ் எடுத்து வைத்துவிட்டு, உங்களுடையதைத் திருப்பிக் கொடுத்தால் என்ன செய்வீர்கள்?" என்று கேட்டாள் பவித்ரா.

"அதன் சங்கேதங்கள் யாருக்கும் லேசில் புரியாது. அதை மற்றவர்கள் கண்டுபிடிப்பது ஆயிரத்தில் ஒரு வாய்ப்புத்தான்."

"எடிசன் கூட தொள்ளாயிரத்துத் தொண்ணூற்று ஒன்பது முறை தோற்று ஆயிரமாவது தடவைதான், மின்சார பல்பைக் கண்டுபிடித்ததாகப் படித்திருக்கிறேன்" என்றாள் அவன் குறிப்பாக.

"உண்மைதான். அதனால்தான் அந்த ஃபார்முலாவை விரைவில் அடைந்துவிடத் துடிக்கிறேன்."

"இன்னும் நீங்கள் எனக்குப் பதில் சொல்லவில்லையே. அதை ஜெராக்ஸ் எடுத்து வைத்துக் கொள்ளலாம் அல்லவா? அப்புறம் அப்பா அதைப் பயன்படுத்தினால்?"

"பயன் இராது. இந்த ரகசியக் குறிப்பு என்னால் தயாரிக்கப்பட்டது. ஓர் எழுத்து மேலேயே திருத்தி எழுதுவது அழுத்தி எழுதுவது போன்றவற்றில்கூட, வேறு சில அர்த்தங்கள் இருக்கின்றன. ஜெராக்ஸில் அது அவ்வளவுதெளிவாக வராது. நகல் எடுத்தால் உன் தந்தை அதை வைத்துக் கொண்டு ஊறுகாய்தான் போட வேண்டும்."

"என் அப்பாவுக்கு ரத்த அழுத்தம் இருக்கிறது. எந்த ஊறுகாயும் அவருக்கு ஒத்துக்கொள்ளாது" என்று மிடுக்காகப் பேச முயன்ற பவித்ராவுக்குச் சிரிப்பு வந்தது.

கூடச் சேர்ந்து சிரிக்கத் தொடங்கிய பூரணன் சட்டென முகம் மாற, எங்கோ பார்த்தான்.

காரணம் புரிந்து அவள் முகமும் வாடிப் போயிற்று.

சிறு அமைதியின் பின், எழுந்து சென்று ஜக்கிலிருந்து தனக்கு ஒரு கப்பில் காபியை ஊற்றிக் கொண்டு வந்து அமர்ந்தாள் அவள்.

நீடித்த மௌனம் உறுத்த எதையாவது பேச நினைத்தவளுக்கு எதுவும் தோன்ற மறுத்தது.

அவனது தொழிலைப் பற்றி பேசுவது இன்றைய நிலையில் அநாகரீகம்.

அன்றைய தட்ப, வெப்பநிலை பற்றிப் பேசுவது அசட்டுத் தனமாக இருக்கும்.

அவனுடைய குடும்பத்தைப் பற்றி விசாரிப்பது தப்பாகத் தோன்றக்கூடும்.

மூளையை கசக்கி யோசித்த பிறகே வெகு எளிதான ஒன்று மனதில் பட்டது. முதலிலேயே கேட்டிருக்க வேண்டும். இவ்வளவு நேரம் கேட்கத் தோன்றாததே அதிசயம்தான்.

"உங்கள் தம்பி பரத் எங்கே? ஆளையே காணோமே. இன்னமுமா தூங்குகிறார்?" என்று விசாரித்தாள்.

தூங்க வேண்டியவன்தான். இரவில் சரியாகவே உறங்கவில்லை. ஆனால் நீ இரவில் சாப்பிடாதது அவன் மனதைத் தாக்கி விட்டது. நீ ரசித்து உண்ணக் கூடியதாய் நாக்குக்கு ருசியாக எதையாவது வாங்கி வரப் போவதாகக்கூறிக் காரை எடுத்துக் கொண்டு போயிருக்கிறான். அவனுக்கு இளகிய மனம்" என்றான் நித்யபூரணன்.

"உங்களைப் போல அல்ல என்கிறீர்களாக்கும்." என்று தலை சரித்துக் கேட்டாள் அவள்.

"கிட்டத்தட்ட அப்படித்தான். தொழிலை கொண்டு செலுத்துகிறவர் ஒரேடியாக உருகி வழிய முடியாது. திட்டமிடுவதிலும் சரி. அதைச் செயலாற்றுவதிலும் சரி. இளக்கம் காட்டினால் வேலை உருப்படியாக நடக்காது. தாத்தா என்னிடம் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறார். அதை ஒழுங்காக நிறைவேற்ற வேண்டுமானால் கண்டிப்பாகத்தான் நடந்தாக வேண்டும். பாவம் பார்த்துக் கொண்டிருக்க முடியாது."

இவன் என்ன சொல்கிறான்?

எனக்கும் உன்னிடம் பரிதாபம்தான். ஆனால் அதற்காக என் திட்டத்தை மாற்றிக் கொள்ள முடியாது என்று சொல்லாமல் சொல்லுகிறானா?

அப்படித்தான்.

பவித்ராவுக்கு வருத்தமாகத்தான் இருந்தது.

ஆனால் அவளுக்காக அவன் தன் எல்லாவற்றையும் விட்டுக் கொடுக்க வேண்டும் என்று எந்த உரிமையில் அவள் எதிர்பார்க்க முடியும்?

அப்படி எதிர்பார்ப்பதற்கு அவள் என்ன அவனுடைய மனைவியா? அல்லது மனைவியாகப் போகிறவளா?

முதலில் அவனுக்கு மனைவி இருக்கிறாளா?

சட்டென மூச்சடைத்தது. அவளுக்கு.

சற்று நேரம் பவித்ராவுக்கு ஒரே திகைப்பாக இருந்தது.

அவளுக்கு எதற்காக மூச்சடைக்க வேண்டும்?

இந்த நித்யபூரணன் யாரோ ஒருவன். நேற்று இந்நேரம் அவன் யார் என்று கூட அவளுக்குத் தெரியாது. இவனுக்கு மனைவி இருந்தாலும், இல்லாவிட்டாலும் அவளுக்கு என்ன வந்தது? அதற்காக மூச்சுவிட சிரமப்படுவானேன்?

அதற்குமுன் மனைவியா, மனைவியாகப் போகிறவளா என்று யோசித்தாளே அதனால் கொஞ்சம் திணறியிருப்பாளோ?

அப்படியிருந்தால் அதுவும் கூட அசட்டுத்தனமே!

மனைவி அல்லது மனைவியாகப் போகிறவளுக்கு உரிமை உண்டு. தனக்குக் கிடையாது என்று நியாயமாய் நினைத்தாள். அவ்வளவுதானே?

நாட்டு நடப்பைக் கொண்டு எழுந்த இயல்பான எண்ணம்.

இதற்கெல்லாம் மூச்சு முட்டிக் கொண்டு நின்றால் அப்புறம் அவளால் சாதாரணமாக மூச்சு விடுவதே முடியாமல் போகலாம்.

ஆனாலும் நித்யபூரணனுக்குத் திருமணம் ஆகிவிட்டதா என்று தெரிந்து கொண்டால் நன்றாக இருக்கும்.

யோசியாமல் "உங்களுக்கு-" என்று தொடங்கிவிட்ட பவித்ரா சட்டென வாயடைத்துப் போனாள். 'உனக்குக் கல்யாணம் ஆகி விட்டதா' என்று ஓர் இளைஞனிடம் முகத்துக்கு நேரே எப்படிக் கேட்பது? கேட்கிறவளைப் பற்றி என்ன நினைப்பான்?

அவள் மேலே கேட்பாள் என்று சற்று நேரம் பொறுத்துப் பார்த்துவிட்டு "எனக்கு?" என்று எடுத்துக் கொடுத்தான் அவன்.

முகத்தில் சூடேற சொல்வதறியாமல் சற்றுத் திகைத்து விட்டு, "உங்களுக்குப் பூரணன் என்று இந்தப் பெயர் யார் வைத்தார்கள்? வ.வ... வந்து கொஞ்சம் வித்தியாசமாக இல்லை? பூரணி என்று கேட்டிருக்கிறேனே தவிர..." என்று எப்படியோ எதையோ சொல்லி வைத்தாள் பவித்ரா.

ஆனால் அவனுக்கு இந்தக் கேள்வி பழக்கப்பட்டதுதான் போலும். சாதாரணமாகவே விளக்கம் சொன்னான். "தாத்தா பெயர் நித்தியானந்தம். முதல் பேரனான எனக்கு அவர் பெயர் வைப்பதாக ஐதீகம். என் அம்மா சங்கீதம் பயின்றவர்கள். 'கருணாலய நிதியே' என்று வேதநாயகம் பிள்ளையின் பாட்டு ஒன்று. அதில் 'நித்ய பூரணா, நிலைய மஞ்சிதா...' என்று வருமாம். அந்த வரி அம்மாவுக்கு மிகவும் பிடித்தம். தாத்தா பெயரும் சேர்த்து வருகிறது என்று என்னை நித்யபூரணனாக்கி விட்டார்கள். தாத்தா முன்னிலையில் அவர் பெயர் சொல்லிக் கூப்பிடக்கூடாது என்று 'பூரணன்' ஆனேன். பிடிக்காதவர்கள் 'தேங்காய்ப் பூரணம், கொழுக்கட்டைப் பூரணம்' என்று கேலி பேசுவதும் உண்டு" என்று விளக்கினான். "உன் அப்பா கூட அப்படித்தான் என்னைக் குறிப்பிடுவதாகக் கேள்வி" என்று சிரித்தான்.

அவள் உதட்டைக் கடித்து பேசாது நிற்கவும், "ஆனால் இந்தக் கேலிகளுக்காக நான் வருத்தமோ, கோபமோ படுவதில்லை. மாறாக இந்த மாதிரியாவது என்னை மட்டம் தட்டிப் பார்க்கத் தூண்டும் அளவுக்கு என் உயர்வு அவர்களைப்

பாதித்திருக்கிறது என்று மகிழ்ச்சிதான்" என்று அவன் மேலும் கூறவும், உண்மைதானே என்று அவளுக்குத் தோன்றியது.

வயிற்றெரிச்சலில்தானே அவளுடைய தந்தை பூரணனை அப்படி அழைத்ததே.

எப்படியோ, பேச்சைத் திசை மாற்றி விட்டோம் என்று அவள் நிம்மதியுறும் போதே கண்ணில் சிறு கேலியுடன் "ஆனால் நீ முதலில் கேட்க எண்ணியது, இதில்லை போலிருக்கிறதே" என்று வினவி அவளைத் திணறடித்தான் நித்யபூரணன்.

சட்டென அவளது முகம் சிவப்பதை வியப்பும், ஆர்வமும் கூடவே ரசனையுமாகக் கவனித்தவனின் முகம் சட்டென மாறியது. வாயிற்புறம் நோக்கி "பரத்தை இன்னமும் காணோமே" என்று உரக்க முணுமுணுத்தபடி அங்கே சென்று எட்டிப் பார்த்தான்.

நல்லவேளையாகக் கார் வரும் சத்தம் கேட்டு விரைவிலேயே பரத்தும் வந்துவிட, உணவு அவள் உண்ணுகிறாள் என்று பரத் சந்தோஷப்பட அப்படியே பேச்சும் திசை மாறிப் போயிற்று.

காலை உணவு முடிந்ததும் மீண்டும் ஓர் அமைதி நிலவியது.

அலுவலகத்திலிருந்து வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்த மகேஷுக்கு போன் செய்து இங்கும் அங்கும் உள்ள நிலவரம் பரிமாறிக் கொண்டார்கள்.

பிறகு பவித்ராவைக் குறிப்பாகப் பார்த்துவிட்டு நித்யபூரணன், நாகேந்திரனின் எண்களை அழுத்தினான்.

கொஞ்சம் சுதி இறங்கியிருந்த போதும் அப்போதும் நாகேந்திரன் பூரணனை முழுவதுமாக நம்பவில்லை. "அந்தக் கழுதையைப் பேசச் சொல்லு. நீ சொல்லுவது மெய்யா, பொய்யா என்று அப்போது பார்க்கலாம்" என்றார்.

ரிசீவரின் வாயை மூடிக்கொண்டு "நீ பேசினால்தான் நம்புவாராம்" என்றான் பூரணன்.

தலையசைத்து, "இல்லை. திட்டுவார். அம்மாவிடம் என்றால் பேசுகிறேன்" என்றவள் அவன் முகத்தைப் பார்த்துவிட்டு, "சுகமாக இருப்பதாகச் சொல்லவில்லை. அம்மாவின் குரலைக் கேட்டால் போதும்" என்றாள் பவித்ரா. குரல் தழுதழுக்க.

பூரணன் டெலிபோன் பேச்சைத் தொடர்ந்தான். "தொழிலைப் போலத்தான் வாழ்க்கையிலும் இருப்பீர்கள் போல. உங்கள் மகள் உங்களிடம் பேச மாட்டாளாம். உங்கள் மனைவி... எந்த மனைவி என்று கேட்க வேண்டாம். பவித்ரா, அவளுடைய தாயாரோடுதான் பேசுவாளாம். ரிசீவரை அவர்களிடம் கொடுங்கள்" என்றான்.

"ஏய், இந்தாடீ அந்தக் கழுதை உன்கிட்டேதான் பேசுமாம். பிடி. அவளிடம் பேசி, நாலு பேருக்குத் தெரியுமுன்னால் ஒழுங்காய் வீடு திரும்பச் சொல்லு. இந்தா" என்ற நாகேந்திரனின் குரல் இங்கே எல்லோருக்குமே கேட்டது.

ரிசீவரை வாங்கி . "என்னம்மா இது?" என்று கண்ணீர்க் குரலில் ரஞ்சிதம் கேட்கும்போதே "அம்மா... அம்மா..." என்று பவித்ரா அழுதுவிட்டாள்.

"என்னடாம்மா? அங்கே... அங்கே உன்னை அடித்து ஏதும்..." என்று பதறினாள் தாயார்.

தாயின் கேள்விக்குப் பதில் சொல்லாமல் "அம்மா நான் சொல்வதைக் கவனமாகக் கேளுங்கள். அப்பாவிடம் ஏதோ ஃபார்முலா இருக்கிறதாம். அதை அதாவது அதன் அசலைக் கொடுத்தால்தான் இவர்கள் என்னை விடுவார்களாம். அது கிடைக்காமல் விட மாட்டார்கள். கொடுத்து விடும்படி அப்பாவிடம் சொல்லுங்கள். உடம்பைப் பார்த்துக் கொள்ளுங்கள் அம்மா" என்றதோடு, பவித்ரா போன் கருவியை நித்யபூரணனிடம் நீட்டினாள்.

அதைக் காதில் வைத்தபோது "ஏய், மகள் நாடகம் ஆடுகிறாளடி நடேசனுக்காகப் பார்க்கிறேன். இல்லாவிட்டால் அவளைக் கொன்று கூறுபோட..." என்று நாகேந்திரன் கத்திக் கொண்டிருப்பது அவன் காதில் விழுந்தது.

ரிசீவரைத் தாங்கியில் வைத்துவிட்டு நித்யபூரணன் பவித்ராவுக்கு நன்றி சொன்னான். "தேவைப்பட்ட அளவு மட்டுமே பேசினாய். நன்றி" என்றான்.

விழிநீரில் கண்கள் பளபளக்க, "என் அம்மாவிடம் பேச விட்டதற்காக நான்தான் உங்களுக்கு நன்றி சொல்ல வேண்டும். என்னைப் பொறுத்தவரை இது அபாயகரமானதுதான். ஆனால், நீங்கள் சொன்னதை நம்பி சொந்த ஆதாயம் இல்லாமல் அந்த நடேசனோ அப்பாவோ எதையும் செய்ய மாட்டார்கள் என்றீர்களே, அதை நம்பித்தான் அந்த ஃபார்முலாவைக் கேட்டேன். ஆனால் எங்கே எப்படித் தருவது என்று நீங்கள் அப்பாவிடம் ஒன்றுமே சொல்லவில்லையே" என்று வினவினாள் நாகேந்திரனுடைய புதல்வி.

பரத்தும் கேள்வியாய் நோக்க, பூரணன் தோளைக் குலுக்கினான். "மிஸ்டர் நாகேந்திரனுக்குக் கொஞ்சம் கனமான மண்டையோடு. அதைத் துளைத்துக் கொண்டு விஷயம் உள்ளே செல்லச் சற்றுத் தாமதம் ஆகும். அதற்கு அவகாசம் கொடுத்து அப்புறமாகச் சொல்லுவோம்" என்றான் இலகுவாக.

முகம் கன்ற, "அப்பா என்னையும் நம்பவில்லை. அதுதானே? நம்ப மாட்டார் என்றுதானே நானும் முதலில் இருந்தே சொன்னேன்." என்றாள் பவித்ரா, கசந்த குரலில்.

"ரொம்பவும் சரியாகவே சொல்லியிருக்கிறீர்கள், பவித்ரா." என்றான்.

அண்ணனிடம் திரும்பி "இப்போது என்னண்ணா செய்வது?" என்று வினவினான்.

"அதுதான் சொன்னேனே. இன்னும் கொஞ்சம் பொறுத்திருந்து பார்ப்போம்" என்றான் அண்ணன்காரன்.

"பொறுத்திருப்பதா? கடவுளே, இன்னும் எத்தனை நாள் வரட்டு வரட்டென்று இப்படி வாங்கித் தின்பது? நான் என்னமோ, மகளைக் காணோம் என்றதும், நாகேந்திரன் நடுநடுங்கி, நம் ஃபார்முலவை உடனே தந்து விடுவார், ஒரே நாளில் விஷயம் முடிந்து விடும் என்று நினைத்தேனே. இப்போது பார்த்தால்... ஐயோ, கடவுளே, அம்மா, பாட்டி சமையலுக்காக நாக்கு ஏங்குகிறதண்ணா" என்று பரத் பெருமூச்சு விட்டான்.

சட்டெனப் பவித்ராவைப் பார்த்துவிட்டு, "பட்டினி அம்மையாருக்குப் புரியாத மொழி பேசுகிறாயேப்பா" என்றான் நித்யபூரணன். "சாப்பாட்டுக்காக, மனிதர்கள் ஏங்குவார்களா என்ன? சேச்சே. என்ன பைத்தியக்காரத்தனம்?" என்றான் கிண்டலாக.

"என்னவோ. நான் ஆசைக்காகப் பட்டினி கிடந்தது போலப் பேசுகிறீர்களே. என் அம்மாவின் சமையலும்தான் எவ்வளவு நன்றாக இருக்கும் தெரியுமா? கை மணத்திலேயே நாவில் நீர் ஊறும் தெரியுமா? அப்படியும் பட்டினி கிடந்தேன் என்றால் எவ்வளவு உறுதியாய் எதிர்த்திருக்கிறேன் என்று புரிந்து கொள்ளுங்கள்" என்றாள் அவள் பதிலுக்கு.

"ஒத்துக்கொள்ள வேண்டியதுதான்" என்றான் பரதன். "இரண்டு வேளை அந்த ரொட்டியும் பிஸ்கட்டுமாகச் சாப்பிடுவதற்குள் எனக்கு வாழ்க்கையே வெறுத்து விட்டது. பட்டினியே கிடப்பது என்றால் நீங்கள் ரொம்பவுமே பாவம்தான், பவித்ரா."

"என் அம்மா, ஒரு மீன் புட்டு செய்வார்கள்..." என்று பவித்ரா சிலது சொல்ல பரதன் தன் பங்குக்குத் தாயார் பாட்டி சமையல் என்று புலம்ப, சின்னவர்கள் இருவருமாக, அது பற்றியே தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

பாஷா
வாடகை நூல் நிலையம்
63, [Old 25] மீனாட்சி...

பூரணன் சற்று நேரம் யோசனையில் ஆழ்ந்திருந்தான்.

பிறகு தம்பியை அழைத்து, "இன்னும் எத்தனை நாட்கள் இப்படி இங்கே கிடக்க நேருமோ தெரியவில்லை பரத். இன்னும் சில முக்கியமான வேலைகளைக் கவனிக்கும்படி மகேஷிடம் சொல்லி, சில கணக்குகளும் பார்த்துவிட்டு வர வேண்டும். நான் போய் அதையெல்லாம் முடித்துவிட்டு வருகிறேன்" என்று தம்பிக்கு ஆசை காட்டினான்.

"ஏன்? வேலையை டெலிபோனில் சொல்ல முடியாதா?" என்று கேட்டுவிட்டு நாக்கைக் கடித்துக் கொண்டாள் பவித்ரா.

"செய்யலாம். ஆனால் டெலிபோனில் காரமுறுக்கு வராதே" என்று வேடிக்கை போல இயம்பிவிட்டு வேறு என்னென்ன வேண்டும் என்று லிஸ்ட் தயாரிக்க என்று தம்பியைத் தனியே அழைத்துச் சென்று பேசினான் நித்யபூரணன். "நீ மாலை வரை இங்கே இவளைக் கவனித்துக் கொண்டு தனியாக இருக்க வேண்டும். பரத் அவள் இலகுவாகப் பழகுகிறாள் என்று அசட்டையாக இருந்து விடாதே."

"பவித்ராவிடம் சந்தேகப்படுகிறாயா அண்ணா? அவளை நீ நம்பவில்லையா? அவள் முகத்தைப் பார் அண்ணா. கள்ளமே இல்லாத..."

"பால்வடியும் முகம் என்கிறாயா? பிறர் மனதில், ரத்தத்தை வடிய வைக்காமல் இருந்தால் சரி."

"அண்ணா..."

சற்று தயங்கிவிட்டு, "அவளை என்று தனியாகச் சொல்ல வில்லை பரத். பொதுவாக நம் வீட்டுப் பிரச்சனையே மற்றவர்களை நம்பியதால் வந்ததுதானே? அதனால் எப்போதுமே கவனத்துடன் இருந்து கொள்வது நல்லதுதானே? இவள் எதிரியின் மகள் என்பதால் இரட்டிப்புக் கவனம் தேவை என்றேன். அவ்வளவுதான்" என்றான் பெரியவன்.

"பவித்ரா, அவளுடைய அப்பாவை எதிர்க்கிறவள். எதிரிக்கு, எதிரி நண்பன்தானே?"

"இருக்கலாம். ஆனால் 'நீர் அடித்து நீர் விலகாது' என்றும் சொல்லி வைத்திருக்கிறார்களே. ரத்த பாசம். மற்ற எல்லாவற்றையும்விட வலுவானது. இப்போது உனக்கும் அவள் அப்பாவுக்கும் ஆபத்து என்றால் இவள் யாரைக் காப்பாற்ற ஓடுவாள், சொல்லு?"

பரத் வாயடைத்து நிற்கவும், "பெற்ற தந்தை எனும்போது எதிர்ப்பு தோன்றக் கூடுமே தவிர. அவரே எதிரியாகிவிட முடியாது பரத். அத்தோடு பேசும் விதத்தாலோ, குரலாலோ, பிறரை உருக வைக்கும் கலை இவளுக்குக் கைவந்ததாக தோன்றுகிறது. அதனால் எச்சரிக்கையுடனேயே இரு. கார் உன்னிடமே இருக்கட்டும். என்னை மெயின்ரோடு சந்திப்பில் விட்டுவிட்டுத் திரும்பி விடு" என்றான் பூரணன்.

அதன்படியே, பவித்ராவை வீட்டினுள் வைத்துப் பூட்டிவிட்டு இருவருமாகக் காரில் சென்றனர். அவளைத் தனியே வீட்டினுள் வைத்துப் பூட்டும்போது பரத் பவித்ராவிடம் மன்னிப்புக் கேட்காத குறை. ஆனால், புரிந்து கொண்டவள் போல, அவள் பேசாதிருக்கவும் அவனுக்கு இன்னமும் மனம் உருகிப் போயிற்று. ஆயினும், பெரியவன் எதையும் காட்டிக் கொள்ளாததால் அவனும் எதையும் கண்டு கொள்ளாதவன் போலச் சும்மா இருக்கும்படி ஆயிற்று.

நான்கு ரோடு சந்திப்பில் இறங்கியதும், "அவளிடம் எப்போதும் ஒரு கண்வைத்திரு. கூடவே எப்போதும் கவனமாக இரு. மாலையில் எப்போது திரும்பி வருவேன் என்று துல்லியமாகச் சொல்வதற்கில்லை. எனவே நீ காரோடு இங்கே வந்து காத்திருப்பது நல்லதல்ல. அதனால் ஒரு 'பைக்' கை எடுத்துக் கொண்டு நானே வந்து விடுகிறேன். பை" என்று விடை

பெற்றுக் கொண்டு சற்றுத் தொலைவில் இருந்த பஸ் நிறுத்தத்தை நோக்கி நடந்தான் மூத்தவன்.

அவன் திரும்பி வந்து சேருமுன் இங்கே எப்படிப்பட்ட களேபரம் நடக்கப் போகிறது என்று அப்போது அவனுக்குத் தெரியாது.

இயன்றவரை விரைவாக வேலையை முடித்துக் கொண்டு நித்தியபூரணன் திரும்பி வந்தபோது, வீட்டுக் கதவு வெறுமனே சாத்தி வைக்கப்பட்டிருந்தது.

அழைத்துப் பார்த்துவிட்டு, கதவைத் தள்ளித் திறந்து கொண்டு உள்ளே வந்தால் அப்போதுதான் குளித்தவள் போலத் தலையைத் துவட்டிக் கொண்டு பவித்ராதான் வந்து நின்றாளே தவிர, பரத் இருக்குமிடமே தெரியவில்லை.

அவனை அழைக்க, "ப..." என்று பூரணன் வாயைத் திறக்கவும் "உஷ்" என்று சத்தமிடாது இருக்கும்படி, பவித்ரா அவனுக்கு எச்சரிக்கை செய்தாள். "அசந்து தூங்குகிறார் பாவம்." என்றாள் மெல்லிய குரலில்.

"வாட்?" என்று கோபமாகப் படுக்கையறைப் பக்கம் திரும்பியவனின் பார்வை உடனே மாறியது. "பரத்துக்கு என்ன?" என்று கவலையுடன் கேட்டான்.

மெச்சுதலாக அவனைப் பார்த்தாள் பவித்ரா. "பரவாயில்லையே . தூங்குகிறார் என்றதும் பாய்ந்து சென்று அவரை அடிக்கப் போவீர்கள் என்று நினைத்தேன். ஆனால் விவரம் கேட்கிறீர்களே" என்றாள் ஆச்சரியத்துடன்.

படுக்கையறைக் கதவை லேசாகத் திறந்து, பரத் அயர்ந்து உறங்குவதைப் பார்த்து விட்டுத் திரும்பிக் கதவைச் சாத்தி விட்டுப் பூரணன் அவளிடம் பேசினான். "கவனம் என்று நான் சொன்ன பிறகும், பொறுப்பற்றவனாகப் பரத் உறங்கமாட்டான். ஆனால் அவனுக்கு ஏதும் ஆபத்து என்றால், நீ இவ்வளவு இலகுவாகப் பேசமாட்டாய். சொல்லு அவனுக்கு என்ன ஆயிற்று?"

சாப்பிட்டுவிட்டுச் சும்மா வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடப்பது பரத். பவித்ரா இருவருக்குமே சிரமமாக இருந்தது. கூப்பிடு தூரத்தில் கடல் இருந்தும் கூட, அண்ணன் சொல்லை மீறி அங்கெல்லாம் செல்ல முடியாது என்று விட்டான் பரத். வெளியே எங்கேயும் போக முடியாது. வேண்டுமானால் வீட்டை அடுத்துக் கொஞ்ச தூரம் நடந்துவிட்டு வரலாம் என்று அவளை வெளியே அழைத்துச் சென்றான். வீட்டை மையமாக வைத்துக் கொண்டு சுற்றி வந்தார்கள்.

வீட்டின் முன் புறத்திலும், பக்கவாட்டிலும் சுத்தமாக இருந்த போதும், வீட்டின் பின்புறம் குப்பை செத்தையெல்லாம் நிறையவே கிடந்தது. வழியை அடைத்துக் கொண்டு கிடந்த செத்தையைச் சற்று அகற்றிவிட அவன் முயன்றபோது கையில் எதுவோ கடித்தோ கொட்டியோ விட்டது.

தேள் மாதிரி சற்றுப் பெரியதாக எதுவோ ஓடவும், அதன் மீது கல்லை எறிந்து அடித்தவனுக்கு அதற்கு மேல் ஒன்றும் முடியவில்லை.

தாங்க முடியாத வலியில் வியர்த்து விறு விறுத்துப் போனான்.

விஷம் ஏறுவதைத் தடுப்பதற்காகக் கைக்குட்டையால், மணிக்கட்டில் இறுகக் கட்டி விட்டு அவனைத் தாங்கலாக வீட்டுக்கு அழைத்து வந்தாள் பவித்ரா. அதற்குள் அவன் லேசாக மயக்கம் வந்த மாதிரித் தள்ளாடத் தொடங்கி விட்டான்.

டெலிபோன் இருந்த அலமாரியின் பூட்டை உடைத்து போனில் எந்த டாக்டரையாவது வரச் சொல்லலாமா என்று ஒரு கணம் யோசித்தாள். ஆனால் இந்த வீட்டுக்கு எப்படி வரச் சொல்வது? வீட்டு விலாசமோ, வரும் வழியோ எதுவுமே பவித்ராவுக்குத் தெரியாதே.

ஒரு முடிவுக்கு வந்தவளாக பரதின் பாக்கெட்டிலிருந்து கார் சாவியை எடுத்துக் காரைத் திறந்தாள். சிரமப்பட்டு ஒருவாறு பரத்தைத் காரில் ஏற்றினாள். பழைய கார்த் தடத்தைக் கவனித்துக் கொண்டே காரை ஓட்டி, மெயின் ரோட்டை அடைந்தாள்.

அப்புறம் வேகமாகச் சென்று ஒரு நர்சிங் ஹோமைக் கண்டுபிடித்து, அதில் பரத்தைச் சேர்த்து சிகிச்சை அளித்து மீண்டும் வீட்டுக்கு கூட்டி வந்து படுக்க வைத்த பிறகு, பவித்ரா குளிக்கப் போனாள். அவள் குளித்துவிட்டு வரும்போதுதான் நித்யபூரணன் திரும்பி வந்து சேர்ந்தது.

அதன்பின் சற்றுநேரம் அங்கே நிசப்தம் நிலவியது.

பவித்ரா, தன் போக்கில் தலையைக் கோதி க்ளிப் மாட்டினாள்.

அவன் ஒருதரம் எழுந்து சென்று தம்பியைப் பார்த்துவிட்டு வந்தான். பிறகு பின்புறம் சென்று வந்தான்.

"வீட்டை ஒட்டிய பகுதியை இன்னும் சுத்தமாக வைக்கச் சொல்ல வேண்டும். பரத்தைக் கொட்டியது தேள் மாதிரிப் பெரியது என்றாயில்லை? செந்தேள், கருந்தேள் மாதிரி கடுமையான விஷம் இல்லாததாக ஏதோ வகை போல. எப்படியோ பிழைத்தானே. சமயத்தில் உதவி செய்ததற்கு நன்றி." என்றான் அவளிடம்.

"டாக்டருக்குக் கொடுக்க, டிரிப்ஸ் ஏற்ற என்று ஆயிரம் ரூபாய்க்கு மேல் ஆகிவிட்டது. பரத்திடம் கொஞ்சம் குறைந்தது.

நானும் பணம் ஏதும் எடுத்துக் கொண்டு இங்கே வரவில்லையா? என் கையில் கிடந்த ஒரு வளையலைக் கழற்றிக் கொடுத்து விட்டு வந்தேன். இரண்டு பவுன். அப்புறமாக மீட்டுத் தந்து விடுங்கள்" என்றாள் ரொம்பவும் சாதாரணமான குரலில் அவள்.

கிண்டல். என்னவோ தினம் தினம் அவர்களுக்காக அவள் நகையைக் கழற்றிக் கொடுப்பது போல. கடத்தி வந்ததற்கு வேறு ஒரு குத்தல். பணம் எடுத்து வர வில்லையாமே?

சட்டெனக் கைச் சங்கிலியைக் கழற்றி அவளிடம் கொடுத்தான் பூரணன். அவனது இருபத்தியோராம் பிறந்த நாளின்போது அவன் தாத்தா போட்டது. ஐந்து பவுன்.

"உன் வளையலை மீட்டுத் தந்த பிறகு வாங்கிக் கொள்கிறேன்" என்றான். அவளைப் போன்ற சாதாரணமான குரலை வரவழைக்க அவன் சற்று பாடுபட வேண்டியிருந்தது.

"ம்ம்ம்... தங்கம்தானா?" என்று சீண்டியபடி சங்கிலியைத் தன் கையில் அணிந்து கொண்டாள் அவள். ஆனால் கையைத் தொங்கப் போட்டதும், அவளது மெல்லிய கரத்திலிருந்து அது தானாக நழுவி விழுந்தது.

"ஹூம்" என்று அவள் பெரிதாகப் பெருமூச்சு விடவும், தன்னை மீறிச் சிரித்தான் அவன்.

விழுந்ததை எடுத்து தானே அணிந்து கொண்டு "அப்புறமாய் உன்னதையே மீட்டுத் தந்து விடுகிறேன். போய் விடுமோ என்று பயம் வேண்டாம்" என்றான் புன்னகையுடனேயே.

"அந்த மாதிரிப் பயமெல்லாம், எனக்குக் கிடையாதப்பா. ஒருவேளை உங்களுக்கு இருக்கலாம்."

மறுபடியும் குத்தல்.

அவளை நேராகப் பார்த்து, "ஆக உனக்குக் கார் ஓட்டத் தெரியும்" என்றான்.

"தெரியும். அப்பா நன்றாக இருந்த காலத்தில் கற்றுக் கொடுத்தது. சமயத்தில் உதவியது."

"இன்னும் கொஞ்சம் உதவிகரமாக இங்கிருந்து தப்பிச் செல்லவும் அதை நீ பயன்படுத்தியிருக்கலாமே. பரத்தை டாக்டரிடம் விட்டுவிட்டோ, அல்லது அவனுக்கு ஆபத்து இல்லை என்று அறிந்ததும் போயிருக்கலாம்."

"என்னிடம் கவனமாக இருக்கும்படி, நீங்கள் பரத்திடம் சொன்னதை நினைக்கும்போது அப்படிச் செய்திருக்க வேண்டும்தான்."

லேசாக முகம் கன்ற "ஓட்டுக் கேட்டாயா?" என்றான் அவன்.

"இல்லை ஓரளவு உங்கள் உதட்டசைவைக் கவனித்தது. அப்புறம் பரத் நடந்து கொண்ட முறை அதை உறுதிப் படுத்தியது" என்றாள் அவள் எடுப்பாக.

"ஏன் போகவில்லை?"

"இன்னமும் நீங்கள் என்னை முழுமையாக நம்பவில்லை. அப்படித்தானே? நீங்கள் சொன்ன மாதிரி உங்கள் குறிப்பு கிடைத்துவிட்ட பிறகு என்றாலாவது ஏதோ ஒரு நம்பிக்கை யோடு போகலாம். இப்போது இங்கிருந்து தப்பி நான் எங்கே போவது? என்ன செய்வது? அந்த நரகத் தீயில் விழுவதற்காகவா அங்கே ஓடுவது? அதுபற்றி நான் சொன்னது பொய் என்றா எண்ணினீர்கள்? ஏன்? என்னைப் பற்றி மோசமாகவே எண்ணுகிறீர்கள்?"

"மோசமாக இல்ல. நான் அறிந்த பவித்ராவுடன் நீ ஒத்துப் போகாததால் ஒரு சந்தேகம். அதனால்தான் பரத்திடம் கவனமாக இருக்கச் சொன்னேன். அவ்வளவுதான்."

"நீங்கள் அறிந்த பவித்ராவா? நாம் அறிமுகம் ஆனவர்களா? இல்லையே. எனக்கு உங்களைப் பார்த்த நினைவே இல்லையே.

ஆனால் என்னை உங்களுக்குத் தெரியும் என்றால்.. எப்படி? எப்படித் தெரியும்? யாராவது தப்பாக ஏதாவது சொன்னார்களா? அப்படி யார் என்ன சொல்லியிருக்க முடியும்?"

இந்த முகத்தையும் பேச்சையும் கேட்டுவிட்டு இன்னொருவர் பேச்சை யாரால் நம்ப முடியும்? ஆனால் நித்யபூரணனுக்கு நேரடி அனுபவம் ஆயிற்றே.

"இன்னொருவர் சொல்லித் தெரிய வேண்டுமா? உன் திமிரான பேச்சை நானே அனுபவித்திருக்கிறேனே" என்றான் அவன்.

திகைத்து நோக்கி " எப்போது உங்களிடம் நான் எப்போது திமிராகப் பேசினேன்? எனக்கு நினைவே இல்லையே" என்று வியப்புடன் வினவினாள் பவித்ரா. "எப்போது? சொல்லுங்கள்.

"தாராளமாகச் சொல்லுகிறேன்" என்று நாகேந்திரனைக் கூப்பிடச் சொன்னபோது முகத்தில் அடித்தாற்போலப் பேசி அவள் டெலிபோன் பேச்சைத் துண்டித்த தருணங்களை நினைவுபடுத்தினான் அவன்.

அவள் முகத்தில் திரை விழுந்தது. பேச்சும் நின்று போனது.

இதையே எதிர்பார்த்தவன் போலப் பூரணன் தோளைக் குலுக்கவும் ஒரு முடிவுக்கு வந்தவள் போல அவள் நிமிர்ந்தாள்.

முந்தைய தினம் தாய்க்குக் கேவலம். தந்தையின் கௌரவம் என்று எண்ணியது தப்பென்று இப்போது தோன்றியது. "பாருங்கள் பூரணன், சும்மா ஒரு டெலிபோன் கால். இருந்தால் இருக்கிறார் அல்லது இல்லை என்று ஒரு வார்த்தை. இதை ஒருத்தி திமிரோடு சொல்லுவாளா என்று எப்போதேனும் யோசித்தீர்களா?" என்று அவனிடமே கேட்டாள்.

"சொன்னாயே" என்றான் அவன் சுருக்கமாக அதே சமயம் அழுத்தமாக.

"என் தகப்பனாரைப் பற்றி.. அவர் எப்படிப்பட்டவர் என்று உங்களுக்கு... உங்களுக்கு.." என்று இப்போதும் தயங்கினாள் அவள்.

"தெரியும்" என்றான் அவன் அப்போதும் சுருக்கமாகவே.

"அவர் சில சமயம் வீட்டுக்கே கூட்டி வருவார். அல்லது அதிக ஆட்டம் போட்டுவிட்டு வந்து 'ஆ' வென்று வாயைப் பிளந்து கொண்டு தூங்குவார். இரண்டில் எந்த நேரத்திலும் அவரிடம் போய் அவரைக் கூப்பிட முடியாது. அசிங்கமாகிப் போகும். மிகவும் அருவறுப்பாக இருக்கும். இந்த நிலையை முகம் கூடத் தெரியாமல் டெலிபோனின் இன்னொரு முனையில் இருந்து பேசும் ஒருவரிடம் அதாவது உங்களிடம் எப்படி விளக்குவது? எங்களுக்கும் அலமானம்தானே? இப்படி பட்'டென்று வைத்தால் இந்த மாதிரி இன்னொரு தடவை வீட்டு எண்ணில் அப்பாவைக் கூப்பிடாமல் இருக்கத் தோன்றாதா என்று ஒரு நப்பாசைதான்."

கன்றியிருந்த முகமும் இறங்கிவிட்ட குரலும் அவனை இளக்கின போலும்.

"ம்ம்ம் நேற்று கூட இந்த மானம் கௌரவம் எல்லாம் விறைப்பாகத் தலையைத் தூக்கி வைத்துக் கொண்டிருந்ததாக ஞாபகம். இன்று எல்லாம் எளிதாகிவிட்டதே" என்று இலகுவாகப் பேசினான் பூரணன். தொடர்ந்து "ஏன் பவித்ரா?" என்று மென் குரலில் கேட்டான் அவன்.

திகைத்து மருண்டு விழித்தவளின் கன்னங்களில் ரோஜாப் பூக்கள் பூத்தன.

அந்தப் பட்டான கன்னங்களைத் தொட்டுப் பார்ப்பன போல அவளது கன்னத்தை நெருங்கிய அவனது விரல்கள் அவளைத் தொடுமுன்பே நின்று போயின.

ஆவலும் கேள்வியுமாக நோக்கியவளின் பார்வையைப் பூரணன் தவிர்த்தான். "உன் தந்தையை அழைத்துப் பேச வேண்டும். இப்போது அவர் வீட்டில் இருப்பாரா?" என்ற அவனது கேள்வியிலேயே அவனது பதிலும் அவளுக்குத் தெரிந்து போயிற்று.

நித்யபூரணனைப் பொறுத்த வரையில் அவனது குறிக்கோள் அவனது ஃபார்முலாவை மீண்டும் அடைவது மட்டுமே. அதற்குத் தடங்கலாக எதையும், அவனது சொந்த விருப்பு வெறுப்புகளைக் கூட அவன் வரவிட மாட்டான்.

இந்த ஒரு நாளில் அந்த மாதிரியான தீவிரமான விருப்பு வெறுப்பு எதுவும் அவனுக்கு வராமல் இருந்திருக்கலாம் என்று எண்ணும்போதே பவித்ராவின் மனம் தவித்துப் போயிற்று.

அவளுக்கு வரவில்லையா? சீதைக்கும் ராமனுக்கும் ஒரு பார்வையே போதுமானதாக இருந்ததே.

மற்றபடி அவளுடைய தாயிடம் ஃபாமுலா பற்றி அவள் பேசியிருப்பாளா?

அவளுக்கும் விடிவு வரலாம் என்ற அவன் சொல்வில் நம்பிக்கை வைத்துக்கூட அவள் சொல்லியிருக்கலாம். ஆனால் விடிவுக்குரிய வாய்ப்பு மிகவும் குறைவு என்பது அவளுக்குத் தெரியாதா?

அது பூரணனுக்கு மிகவும் தேவை. கூடவே அது அவனது உடமை. எனவே இந்தத் தயாரிப்புக் குறிப்பு அவனுக்குக் கிடைத்துவிட வேண்டும் என்று அவள் எண்ணியதும் ஒரு காரணம் அல்லவா?

பின்னர் தன்னைப் பூரணன் ஒரேயடியாகக் கைவிட்டுவிட மாட்டான் என்ற சிறு நம்பிக்கையும் அவளுள் 'முணுக் முணுக்' என்று மிகச் சின்னதாக என்றாலும் சுடர்விட்டுக் கொண்டு இருந்ததும் கூட இன்னுமொரு காரணம் அல்லவா?

ஆனால் அவனுக்குப் பணம் பண்ணுவதுதானே பெரிதாக இருக்கும்போல!

பேசாமல் காரை எடுத்துக் கொண்டு போயிருக்க வேண்டும். இவர்கள் எக்கேடு கெட்டால் அவளுக்கு என்ன வந்தது?

அப்படி அவள் சென்றிருந்தால் பரத்தின் உயிருக்குக்கூட ஆபத்து நேர்ந்திருக்கலாம்.

இதையெல்லாம் நினைத்துப் பாராமல் 'கடமையின் திருவுரு' அவள் தந்தைக்கு போன் பண்ணுவது பற்றிப் பேசுகிறாராக்கும்.

பேசட்டும், பேசட்டும்.

அவள் தந்தையும் ஏமாளியல்ல. அடுத்தவன் உழைப்பைத் திருடி எடுக்கிற அளவு குயுக்தி உடையவர். ஃபார்முலாவின் சங்கேதத்தை உடைப்பதற்கு முன்பாக அப்படி ஒன்றும் இலகுவாக ஃபார்முலாவைத் திருப்பிக் கொடுத்துவிட மாட்டார். சங்கேதத்தை உடைக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டபடியே இவர்களிடமும் பேசி நாளைக் கடத்துவார். அப்படியே அவளை விடுவிக்கவும் முயற்சி செய்வார்.

இதெல்லாம் யோசியாமல் பூரணனும் அவன் தம்பியும் தந்தையிடம் மாட்டிக் கொள்ளக் கூடாதே என்று பவித்ரா இப்போது கவலைப்பட்டாள்.

அப்படி அவர்கள் மாட்டிக் கொண்டால், அப்படி மாட்டிக் கொள்ளும்போது அவள் நிலைமையும் மிகவும் பரிதாபமாகி

விடும். ஒருவேளை அந்த செல்வராஜாவிடம் இருந்து தப்பும் ஒரே வாய்ப்பாகக் கருதித்தான் பூரணனிடம் இவ்வளவு மனம் சாய்ந்துவிட்டதோ என்று பவித்ராவுக்குத் தன்மீதே கூடச் சந்தேகம் உண்டாயிற்று.

மூன்று நாட்கள் ஓர் இளைஞனையும் யுவதியையும் அருகருகே இருக்க வைத்தால் ஒருவருக்கொருவர் ரதி மன்மதனாகத் தோன்றத் தொடங்கி விடுவார்கள் என்று எதிலோ படித்த நினைவு அவளுக்கு வந்தது. அப்படித்தான் அவளுக்கும் நித்யபூரணனைப் பிடித்துப் போயிற்றோ?

அப்படிப் பார்த்தால் பரத்துடன்தான் அவள் அதிக நேரம் கழித்திருக்கிறாள். ஆனால் அவனிடம் அப்படி எந்த உணர்வும் அவளுக்கு வரவில்லையே? நல்லவன் நண்பனாகப் பழகலாம் என்பதுதானே?

பின்னே..

ஆனால் இதையெல்லாம் அதிக நேரம் யோசித்துக் கொண்டிருக்க வாய்ப்பின்றி பரத் கண் விழித்தான். ட்ரிப்ஸ் ஏறியதாலோ என்னவோ நல்லபடியாகவே எழுந்தான்.

அண்ணனைக் கண்டதும் "அண்ணா அந்தச் சொக்கனை நன்றாகத் திட்ட வேண்டும். வீட்டின் முன்பக்கம் பக்கவாட்டில் எல்லாம் பார்வையில் படும் என்று சுத்தமாக வைத்துவிட்டு பின்பக்கம் தொடவே இல்லை. பூச்சி பொட்டுகள் எல்லாம் அடையும்படி குப்பை கூளமாக விட்டிருக்கிறான். தாத்தாவிடம் சொல்லி இந்த ஆண்டு போனசை நிறுத்த வேண்டும்" என்றான் ஆத்திரத்தோடு.

"சரி செய்யலாம். அப்புறம் உனக்கு என்ன தண்டனை கொடுப்பது."

"அண்ணா."

"ஆமாமடா. எனக்கு எவ்வளவு கோபம் தெரியுமா? குப்பை கூளமாகக் கிடந்தால் அதைக் கையால்தான் விலக்குவதா? ஒரு குச்சியை எடுத்துத் தள்ளிவிடக் கூடாதா? இதுவே உயிரைக் குடிக்கக் கூடிய அளவுக்கு விஷமுள்ள ஏதாவது தீண்டியிருந்தால் சித்திக்கு நான் என்ன பதில் சொல்ல முடியும்? எவ்வளவு முக்கியமான வேலையில் ஈடுபட்டிருக்கிறோம்? நம்மைக் காப்பதும் அதன் வெற்றிக்கு அவசியம் அல்லவா? இப்போதுகூட ஏதோ பவித்ரா நல்லவளாக இருக்கப் போய் நீ உயிர் தப்பினாய். இன்னொருத்தியாக இருந்தால் உன்னை அப்படியே போட்டு விட்டுக் காரை எடுத்துக் கொண்டு பறந்திருப்பாள். அப்புறம் உன் கதி என்ன ஆகியிருக்கும்? நாம் எடுத்துக்கொண்ட காரியம் என்னாவது? முதலில் உன்னைக் காப்பாற்றிய பவித்ராவுக்கு நன்றி சொல்லு. சொக்கனைத் தண்டிப்பது பற்றிப் பிறகு பார்ப்போம்" என்றான் பூரணன் சற்று கடுமையான குரலில்.

வென்னீரில் பால் பவுடர், இன்ஸ்டன்ட் காஃபி, சர்க்கரை கலந்து மூன்று கப் காஃபியை எடுத்து வந்த பவித்ராவின் காதில், பூரணனின் பேச்சு நன்றாகவே விழ அவள் மனம் பூரித்தது.

அவளை நல்லவள் என்று நித்யபூரணன் கூறிவிட்டானே, அதுவும் சற்று முன்தான் 'திமிர் பிடித்தவள்' என்று கூறியவன், அவளது விளக்கத்தை முழுமையாக ஏற்றுக் கொண்டிருக்கிறான் என்றுதானே அர்த்தம்.

முகம் மலர அவளைப் பார்த்து பரத் நன்றியுரைக்க "நான் உங்களை ஒரு நண்பராகத்தான் நினைக்கிறேன் பரத்" என்று புன்னகை செய்தாள் அவள்.

தொண்டையைச் செறுமிக் கொண்டு "நான் உங்களை கடத்தி வந்திருப்பவன் பவித்ரா" என்றான் அவன்.

"வலுவான காரணம் இருக்கும்போது அதைக் குற்றமாகக் கருத முடியாதே. போகட்டும். இப்போது காஃபி ஆறுமுன் குடியுங்கள். சமையலில் நான் கொஞ்சம் மோசம். கூடோடு குடித்தால் காஃபியில் உள்ள குறை தெரியாது" என்று அவள் கூற சிரித்தபடியே மூவருமாகக் காஃபியைக் குடித்து முடித்தனர்.

"காஃபி மிகவும் பிரமாதம் பவித்ரா. என் அம்மா போடுவது போலவே இருக்கிறது" என்று பாராட்டினான் பரத்.

"இந்தச் சித்தி வட இந்தியாவில் பிறந்து வளர்ந்தவர்கள். அதனால் உ அளவுக்குச் சித்தியின் காஃபி நன்றாய் இராது. அதைத்தான் பரத் சொன்னான்" என்று சிரியாமல் தெரிவித்தான் பூரணன்.

"அண்ணா."

"ஏண்டா? சித்திதான் இங்கே இல்லையே. அதனால்தான் தைரியமாகச் சொன்னேன். நீயும் பயப்படாதே" என்று பெரியவன் அதையே தொடர, எல்லோருக்குமே சிரிப்பு வந்தது.

"சீ போண்ணா. பவித்ராவின் காஃபி ஒன்றும் மோசமாக இல்லை."

"சித்தியின் காஃபி மோசம் என்று ஒத்துக்கொள்கிறாய். அப்புறம் அதேபோல என்று எப்படி..."

"ஐயோ. விடண்ணா. சும்மா ஓர் உயர்வான உதாரணத்துக்காக அப்படிச் சொன்னேன். ஏன் நீதான் சொல்லேன் இந்தக் காஃபி எப்படி இருந்தது என்று" என்று அண்ணனை மாட்டிவிட்டான் பரதன்.

அவளும் ஆவலோடு பூரணனைப் பார்க்க அவன் சற்று யோசிப்பது போலப் பாவனை செய்தான். பிறகு "ம்ம்ம்.. இதை நன்றாக இருக்கிறது என்றால் முகஸ்துதி செய்வதாக ஆகிவிடும்..." என்று இழுத்தான்.

"அண்ணா" என்று அண்ணன் பேச்சைப் பரத் நிறுத்த முயன்றான்.

காட்டிக் கொள்ளாதிருக்க முயன்றும் பவித்ராவின் முகம் லேசாக வாடியது.

அவசரமாக ஏதோ சொல்ல வாயெடுத்த தம்பியைக் கையமர்த்தி அடக்கிவிட்டு "நீ வேறு மோசம் அது இது என்றாயா பவித்ரா? பயந்து கொண்டே குடித்ததில் சுவையைக் கவனிக்கவில்லை. எதற்கும் இன்னொரு கப் காஃபி போட்டுக் கொடுத்தாயானால் குடித்து பார்த்துவிட்டு அபிப்பிராயம் கூறுகிறேன்" என்றான் பூரணன்.

இன்னொரு கப்பா?

ஒரு கணம் திகைத்த அமைதியின் பின் அங்கே அவுட்டுச் சிரிப்பு வெடித்தது.

"சரியான ஆள் அண்ணா நீ. எதையாவது சொல்லிப் பவித்ராவை வருத்தப்படுத்தி விடுவாயோ என்று பயந்தே போனேன் தெரியுமா?" என்று கூறி மேலும் சிரித்தான் தம்பி.

"ஆமாம்டா. மனிதர்களிடம் எப்படிப் பேசிப் பழகுவது என்று எனக்குக் கொஞ்சம் கற்றுக் கொடுடா தம்பி. அப்புறமாவது சரியானபடி பேசிப் பழகுகிறேனா பார்ப்போம்" என்று பூரணன் சோகமாகச் சொல்ல மீண்டும் சிரிப்பு அலை மோதியது.

சற்று நேரம் இப்படிப் பேசிக் கொண்டிருந்தபின் பூரணன் டெலிபோனை எடுத்து வந்தான்.

இந்த முறை நாகேந்திரன் முன்போல ஒரேடியாக நம்பிக்கையற்றுப் பேசவில்லை. அதே சமயம் பூரணனை ஒரேயடியாக நம்பிவிட்டதாகவும் காட்டிக் கொள்ளவில்லை.

"நீ சொல்லுகிறாய் அவள் கடத்தப்பட்டதாக. அவள் வேண்டும் என்றே எனக்கு ஆட்டம் காட்டுவதாக எனக்குத்

தோன்றுகிறது. அத்தோடு நீ என்ன ஃபார்முலாவைப் பற்றிப் பேசுகிறாய் என்றே எனக்குப் புரியவில்லை. அவள் அப்படி ஏதேனும் உளறினாளா?" என்று நிதானமாகக் கேட்டார். "அப்படி அவள் என்னதான் தம்பி சொன்னாள்?"

இந்த டெலிபோன் நம்பரைக் கண்டு பிடிக்க அவர் முயற்சிப்பது புரிந்து கைக்கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டே பூரணன் வேகமாகப் பேசினான். ஓரிரு நாட்களில் பவித்ரா அணிந்திருந்த உடைகள் அவருக்கு வந்து சேரும். அதற்கும் புத்தி வரவில்லை என்றால் பவித்ரா என்று ஒரு மகள் இருப்பதையே அவர் மறந்துவிட நேரலாம். போலீசுக்குப் போனாலும் அப்படித்தான்.

தொடர்ந்து ஒரு நிமிஷம் பேசினால் டெலிபோன் எக்ஃசேஞ்ச் மூலம் தொடர்பு கொள்ளுகிற எண்ணைக் கண்டுபிடித்துவிட முடியும் என்பதால் வேகமாகப் பேசி முக்கால் நிமிஷத்திலேயே போனை வைத்துவிட்டான் பூரணன்.

"என்னவோ பேச்சை நீட்ட முயன்றது போலவே நாட்களையும் கடத்த முயற்சிப்பது போலத் தோன்றுகிறது. ஃபார்முலாவைத் திருப்பித்தர அவருக்கு மனம் வராது என்று எதிர்பார்த்ததுதான். ஆனால்.. பவித்ரா அவருக்கு அவசியம் தானே? இந்தப் போலித் திருமணத்தை வைத்தல்லவா அவருக்கு மூன்று கோடிப் பணம் கிடைக்கும்? ரொம்பவும் புத்திசாலித் தனமாகச் செய்வதாக எண்ணிக் கொண்டு ரகசியமாக ஃபார்முலாவை ஜெராக்ஸ் எடுத்து வைத்துக் கொண்டு அசலைத் தந்து விடுவார் என்று எண்ணினேன்" என்றான் தம்பியிடம்.

"அதுதானே அண்ணா எனக்கும் புரியவில்லை. அவர் ஏன் அப்படிச் செய்யவில்லை?"

சற்று யோசித்துவிட்டு "இப்போதே அவர் அந்த ஃபார்முலாவின் ஜெராக்சை வைத்துக் கொண்டுதான்

முயற்சித்துக் கொண்டிருக்கிறார் என்று நினைக்கிறேன் பரத். எப்படியும் அதை அவர் ஜெராக்ஸ் எடுப்பார் என்பதும் நாம் எதிர்பார்த்திருக்கும் விஷயம் என்றும் நினைத்திருப்பார். அப்படியிருக்க அசலை எதற்காகக் கேட்கிறோம் என்று யோசிக்கத் தொடங்கியிருப்பாரோ? அல்லது நம் ஃபாக்டரியில் உளவு பார்த்து புது முறைப்படி நாம் இன்னும் தயாரிக்கத் தொடங்கவில்லை என்று கண்டுபிடித்திருக்கக் கூடும். நாம் புதுக் குறிப்பின் நகலே இல்லாமல் திணறிக்கொண்டு அந்தக் குறிப்பைக் கேட்பதாகவும் நினைத்திருக்கலாம். ஃபார்முலாவைக் கொடுக்காமலே சமாளித்துவிட்டால் போட்டியே இராதல்லவா? அதற்கும் முயற்சிக்கலாம்..." ஒரு முடிவுக்கும் வர முடியாமல் இழுத்தான் அவன்.

மேலும் சற்று நேரம் யோசித்துவிட்டு அவன் கொண்டுவந்த வாரப்பத்திரிகை ஒன்றை படித்துக் கொண்டிருந்த பவித்ராவைக் கூப்பிட்டு அபிப்பிராயம் கேட்டான்.

பூரணன் அவளிடம் அபிப்பிராயம் கேட்கிறானே. அப்படியானால் அவன் அவளை நம்புகிறான் என்றுதானே அர்த்தம். அவளை நல்லவளாக மட்டும் ஏற்கவில்லை. ஒரு முக்கியமான விஷயத்தில் மிகமிக முக்கியமான விஷயத்தில் கருத்துக் கேட்கிற அளவுக்கு நம்பவும் செய்கிறான்.

உள்ளம் துள்ளியது அவளுக்கு.

விழி மலர நோக்கிவிட்ட அவள் சொன்னாள். "அப்படி முடிந்தவரை நாளைக் கடத்தத்தான் முயற்சி செய்வார்.

உங்களிடம் நம்பாதது போலப் பேசி நாளைக் கடத்தியபடியே ரகசியமாக என்னைத் தேடிக் கண்டு பிடித்துவிடத் திட்டமிட்டிருப்பார் என்று எனக்குத் தோன்றுகிறது."

"ரொம்ப கரெக்ட்" என்றான் பூரணன். "அதுதான் நாகேந்- உன் தந்தையின் திட்டமாக இருக்க வேண்டும். அப்படியானால் இங்கிருந்து உடனேயே கிளம்பியாக வேண்டும்..."

"இந்த மாதிரி ஒரு மறைவிடத்துக்கு எங்கேண்ணா போவது? அதிலும் நம் வீட்டினருக்குக் கூடத் தெரியக் கூடாது என்றாயே. ஆனால் இதுவரை வந்து விடுவார்கள் என்றா நினைக்கிறாய்?" என்று சந்தேகமாய்க் கேட்டான் பரதன்.

"இங்கேதான் முதலில் வருவார்கள். இது நம் ஓய்வு இல்லம்.தன்னந் தனியே சவுக்குத் தோப்புக்குள் இருக்கிறது. யார் என்றாலும் முதலில் இங்கேதானே தேடுவார்கள்? அத்தோடு இன்னும் இரண்டு நாளில் நம் சவுக்குத் தோப்புகளில் சுள்ளி ஒடிக்க ஆட்கள் வருவார்கள். அந்தச் சமயம் பவித்ரா இங்கிருப்பதை அவர்கள் பார்ப்பதும் நல்லதில்லைதானே?"

"பின்னே?"

"நான் வேண்டுமானால் அவர்கள் வந்து போகுமட்டும் ஓர் அறைக்குள் சத்தமின்றி ஒளிந்து கொள்ளட்டுமா? ஆனால் இந்த ஆட்களிடம் ஒளியலாம். அப்பா தேடி வந்தால் சாத்தியப் படாது" என்றாள் பவித்ரா.

"உன் யோசனைக்கு நன்றி. ஆனால் அதுவும் பயன்படாது. இப்போது நாம் கிளம்ப வேண்டியதுதான். பரத் உனக்கு உடம்பு எப்படி இருக்கிறது?"

"உடம்பு எப்படி என்றால் பயமாயிருக்கிறதே" என்று கண் சிமிட்டி "உன்னுடன் போரிடும் அளவுக்குப் பலமாக இல்லைப்பா. ஆனால் மற்றபடி ஒன்றும் இல்லை" என்றான் பரத்.

சிறு முறுவலுடன் "அப்படியானால் பைக்கை ஓட்டிக் கொண்டு நீ வீட்டுக்குப் போ."நான் பவித்ராவைக் கூட்டிப் போய் நம் கமலி அக்கா வீட்டில் விட்டுவிட்டு வருகிறேன். கொஞ்ச நாள் அவள் அங்கே இருக்கட்டும்."

அந்தக் கமலியின் பெயரைக் கேட்டதுமே பரத்தின் முகம் மலர்ந்தது." ஏண்ணா நாம் கமலிக்காவை அப்போதே நினைக்காமல் இருந்துவிட்டோம்? முதலிலேயே அங்கேயே போயிருக்கலாமே".

"நான் யோசித்தேன். ஆனால் முடிந்தவரை இந்தக் கடத்தல் விவகாரம் தெரிந்தவர்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கட்டும் என்று நினைத்தேன். இப்போது வேறு வழியில்லை" என்றவன் அவர்கள் பேச்சைக் கவனித்துக் கொண்டிருந்த பவித்ராவிடம் திரும்பினான்.

"கமலிக்கா எங்களுக்கெல்லாம் மூத்த சகோதரி போல. அவளுடைய தாத்தாவும் எங்கள் தாத்தாவும் சேர்ந்துதான் எங்கள் 'பரிமள'த்தைத் தொடங்கினார்கள். ஒரு விபத்தில் கமலிக்காவுடைய அம்மாவும், அப்பாவும் இறந்து போனார்கள். அந்தத் தாத்தாவுக்குத் தொழிலில் ஆர்வம் போய்விட்டது. அவரது பங்கைப் பணமாக வாங்கிக் கொண்டு தஞ்சைப் பக்கம் போய்விட்டார் .அவரது சொந்த ஊர்ப் பக்கம் இந்தப் பணத்தைக் கொண்டு மேலும் நிறைய நிலம் வாங்கி விவசாயம் செய்யத் தொடங்கிவிட்டார். அக்கா இங்கே ஹாஸ்டலில் தங்கிப் படித்தாள். ஹாஸ்டல் என்று பெயரே தவிரப் பாதி நாட்கள் நம் வீட்டில்தான் இருப்பாள். அப்புறம் பார்த்தால் பக்கத்துப் பண்ணைக்காரர் மகன் மீது காதல். இரண்டு பேருமாகப் படிப்பதற்காக இங்கே சென்னைக்கு வந்து போனபோது ரயிலிலேயே சந்தித்து காதல் வளர்ந்திருக்கிறது. பெரியவர்கள் சம்மதத்துடன் கல்யாணமும் செய்து கொண்டு அங்கேயே போய்விட்டாள். பெரிய தாத்தாவின் நிலங்களும் சேர்ந்து பெரிய

பண்ணையாகிவிட கமலிக்கா அதைவிட்டு வெளியே வருவதே இல்லை. பண்ணையாரம்மா. அடிக்கடி சந்திக்க வழியில்லை என்றாலும் எங்கள் எல்லோருக்கும் பிரியமான சினேகிதி. ரத்த உறவு என்று இல்லாவிட்டலும் மூத்த சகோதரி போலப் பாசம் உண்டு" என்று கமலியைப் பற்றி விளக்கம் கொடுத்தான்.

"அங்கே போனால் எங்களுக்காக கடம்புப் பால், எள்ளுருண்டை, அப்போதே பிடித்து வைத்த மீன் குழம்பு, மாம்பழம் போட்ட பதனீர் என்று பல ஸ்பெஷல் அயிட்டங்கள் உண்டு. அவைகளுக்காகவே ஆண்டுக்கு ஒரு தடவையாவது நான் போய் வருவேன்" என்றான் பரத்.

"சாப்பாட்டுராமன்" என்று சிரித்துவிட்டு மீண்டும் பவித்ராவிடம் திரும்பினான் நித்யபூரணன். "அந்நியர் வீடு என்ற எண்ணமே உனக்கு வராது. பவித்ரா. உன் தந்தைக்கும் உன்னை அங்கே வந்து தேடத் தோன்றாது. அதனால் சில நாட்கள் நீ... என்ன சொல்லுகிறாய்?" என்று கேட்டான்.

சம்மதமாய்த் தலையாட்டிவிட்டு மலர்ந்த விழிகளால் அவனை நோக்கி முறுவலித்தாள் பவித்ரா.

"என்ன?" என்று கேட்டவனிடம் "அதில்லை. உங்களால் கடத்தப்பட்டு வந்தவள் நான். என்ன செய்து விடுவீர்களோ என்று பயந்து உங்கள் உத்தரவுக்குப் பயந்து பணிய வேண்டியவள். நீங்கள் என்னிடம் கருத்துக் கேட்பதும்...." என்று சொல்லிக் கொண்டிருந்தவளை இடைமறித்து, "நீ எங்களுக்கு உதவுவதும் சாதகமாக ஐடியாக் கொடுப்பதும் விசித்திரமாக இருக்கிறது. அதுதானே?" என்றான் பூரணன்.

"விசித்திரமா? ஒரே உல்டா. அப்படியே தலைகீழ்," என்று சிரித்தான் பரத்.

"இருவருக்குமே தேவைகள். ஆனால் ஒன்றை வெட்டி ஒன்று என்றில்லாமல் ஒன்றினால் ஒன்று என்று

இணைந்திருப்பதால் நேர்ந்தது. ஆனால் இன்னும் எதுவுமே நிறைவேறவில்லை என்பது நினைவிருக்கட்டும். இப்போது கிளம்புவதைப் பார்ப்போம். பவித்ராவுடைய தந்தை, எந்த நேரமும் இந்த இடத்தைக் கண்டுபிடித்து இங்கே வந்து விடலாம்."

மூவரும் வேலையில் இறங்கினர்.

அரைமணி நேரத்துக்குள்ளாக மூன்று பேர் வந்து தங்கியிருந்த அடையாளமே இல்லாமல் வீடு பழைய மாதிரியே ஆயிற்று.

எஸ்டிடி பில்லில் தெரிந்து விடும். அதைவிட, ஏதாவது பொதுத் தொலைபேசியில் சொல்வது மேல் என்று விட்டான். அதுபோலவே பரத்தை வீட்டுக்கு அனுப்பிவிட்டு செல்லும் வழியில் கமலியுடன் தொடர்பு கொண்டு விருந்துடன் வருவது பற்றித் தெரிவித்தான்.

போன் பேசித் திரும்பியவன் லேசாகச் சீட்டி அடித்தபடியே காரை ஓட்டியதை ஆச்சரியத்துடன் பார்த்தாள் பவித்ரா.

அவனைச் சந்தித்த இந்த இரண்டு நாட்களில் இப்படிக் கட்டவிழ்ந்த கன்று போன்ற உற்சாகத்துடன் அவனை அவள் ஒரு தரம் கூடப் பார்த்தது இல்லை. கேலி கிண்டல் செய்த போதும் ஒரு கட்டுப்பாட்டுடன் பொறுப்புள்ள தலைவனாகத்தான் தோன்றினான்.

அந்தக் கமலியிடம் இவனுக்கு மிகவும் பிரியம் போலும்.

அவளிடம் தன்னைப் பற்றி என்ன சொல்லியிருப்பான்?

அதிகம் சொல்லவில்லை என்றான் அவன். ஒரு பெண் விருந்தாளியை அழைத்து வருகிறேன் என்றதும் அவளுக்கு ஒரே உற்சாகம். "அதிகக் கற்பனை பண்ணாதே. பவித்ராவின் வீட்டில் ஒரு பிரச்சனை. அவள் வீட்டார் கண்ணில் படாமல் சில

நாட்கள் இருக்க வேண்டும். அதற்காகத்தான் கூட்டி வருகிறேன் என்று சொன்னேன். மற்றது போனில் சொல்ல முடியாதில்லையா? நேரில் சொல்கிறேன் என்றிருக்கிறேன். போனதும் துளைத்து விடுவாள்" என்றான் அவன்.

"அவர்களுக்குப் பிள்ளைகள்?"

"மூன்று. பன்னிரெண்டு,பத்து, எட்டு வயது. எல்லோரும் ஏற்காட்டில் படிக்கிறார்கள். அவர்கள் விடுமுறையில் வரும் நேரம் பார்க்க வேண்டும். ஒரே ஆட்டம்தான்" என்றான் பெருமையாக.

"அக்கா கணவர்?"

"விசுவம். விவசாயத்தில் பிஜி பண்ணியிருக்கிறார். படிப்பை நிலத்தில் பயன்படுத்துகிறவர். அதிக விளைச்சலுக்காக அடிக்கடி பரிசு வாங்குகிறவர்."

"நம் நாட்டுக்குத் தேவையான குடும்பம் என்று சொல்லுங்கள்..." என்றவள் திடுமென நிமிர்ந்து அமர்ந்தாள்.

"என்ன?"

"இந்தக் கார். இதை வைத்துக் கண்டுபிடித்துவிட மாட்டார்களா?" என்றாள் கவலையுடன்.

அலட்டிக் கொள்ளாமல் அவன் பதில் சொன்னான். "மாட்டார்கள். அப்படி ஒரு வாய்ப்பு இருக்கக்கூடாது என்பதற்காகவே வெளிநாடு சென்றிருக்கும் ஒரு நண்பனின் காரை எடுத்து வந்தேன். எங்களோடு இதைச் சம்பந்தப்படுத்திப் பார்க்கவே தோன்றாது."

நிம்மதியோடு இருக்கையில் சாய்ந்தாள் அவள். பெருமையுடனும் தான். ஒரு வேலை செய்யுமுன், எவ்வளவு கவனம் செலுத்துகிறான். இவன் வென்றாக வேண்டாமா?

தஞ்சாவூரை அடையு முன்பாகவே கமலி குடும்பத்தின் பண்ணை இருந்த அருள்வாசல் வந்து விட்டது.

அங்கே கமலியைப் பார்த்ததுமே, பவித்ராவுக்குப் பிடித்துப் போய்விட்டது.

வழியிலேயே, உணவை முடித்துக் கொண்டு வருவதாக நித்யபூரணன் சொல்லியிருந்தான். எனவே அவர்களுக்காக சூடான பாலும், வெட்டித்துண்டமிட்ட மாம்பழமும் காத்திருந்தன.

மாம்பழத்தைக் கொடுத்துவிட்டு, பாலைப் பிளாஸ்க்கிலிருந்து ஊற்றியபடியே, "உங்களுக்குப் பயணக் களைப்பு. உன்னைப் பொறுத்தவரையில் இது புதிய இடம் கிராமத்துச் சந்தடி வேறு புதிதாக இருக்கும். எல்லாமாக உறக்கம் சரியாக வராது. இப்படி மாம்பழம் சாப்பிட்டுவிட்டு சூடாகப் பாலைக் குடித்துவிட்டுப் படுத்தால், தூக்க மாத்திரை போட்ட மாதிரி அசந்து தூங்குவாய் அதனால்தான்" என்ற விளக்கத்துடன் பெரிய தம்ளர் நிறையப் பாலை அவளிடம் கமலி கொடுக்கவும், பவித்ராவுக்கு நெக்குருகிவிட்டது.

இவ்வளவு யோசிக்கிறாளே. பெற்றவளையே பார்த்த உணர்வு உண்டாயிற்று.

"தாங்க்ஸ் அக்கா" என்றவளின் குரல் தழதழக்கவும் அவளது குனிந்த தலைக்கு மேலாகத் தம்பியைப் பார்த்துக் கண்ணால் கேள்வி கேட்டாள் கமலி.

'அப்புறம்' என்று அவனும் கண்ணாலேயே பதில் சொல்ல, அவள் சின்னவளின் கையைப் பற்றி "நீ. இங்கே நிறைய நாட்கள் தங்கி விட்டுத்தான் போக வேண்டும்,பவித்ரா. காலையில்சுற்றிக் காட்டுகிறேன். பார் வாய்க்கால் வயல் சுத்தமான காற்று... எல்லாம் உன்னை அப்படியே கவர்ந்து, இழுத்துக் கொள்ளும். விடவே விடாது. என்னைப் போல" என்று கூறிப் பற்றியிருந்த கையை அன்பாக அழுத்தி விட்டாள்.

மற்றது பின்னே ஒதுங்க, பவித்ராவும் முறுவலித்தாள்.

அவரவருக்குக் கொடுக்கப்பட்ட அறைக்குள் செல்லுமுன், பவித்ரா சற்று தயங்கி நின்றாள்.

கவனியாதது போலக் கமலி சென்றுவிட, தானும் நின்று என்னவென்று கேட்டான், நித்யபூரணன்.

"அம்மா எப்படி இருக்கிறார்களோ என்று கவலையாக இருக்கிறது, நித்யா" என்றாள் அவள். அதே யோசனையில் ஆழ்ந்து.

திகைப்பை அவள் கவனிக்கும் முன் மாற்றிக் கொண்டு, "சென்னைக்குப் போனதும் உடனே விசாரித்துத் தகவல் தருகிறேன்" என்றான் அவன்.

அவள் மெல்லத் தலையாட்டிவிட்டு, அறையின் உள்ளே செல்லத் திரும்பினாள்.

"பவித்ரா" என்றழைத்து அவளை நிறுத்தினான் அவன்.

"என்ன?" என்று அவனைப் பார்த்தாள் அவள்.

அவளது நெற்றிக் கூந்தலை, மெல்ல ஒதுக்கிவிட்டான் அவன். ஒற்றை விரலால் அவள் முகத்தை லேசாகத் தூக்கி, "மனதாலும் உடலாலும்ரொம்பவே களைத்துப் போயிருக்கிறாய். அக்கா சொன்ன மாதிரி, போய்ப் படுத்து, நன்றாகத்தூங்கு குட்நைட்" என்று சொல்லிவிட்டுப் போனான் அவன்.

அறையினுள் சென்று ஆடை மாற்றிக் கொண்டு படுத்தவள், மெய்யாகவே அயர்ந்து உறங்கிப் போனாள்.

அறையினுள் அவள் சென்ற பின்னும் சற்று நேரம் அங்கேயேநின்றுவிட்டுப் போனவனைக் கேலிப் பார்வையுடன் எதிர்கொண்டாள் கமலி.

நல்ல தூக்கத்தின் பின், மறுநாள் காலையில் விழித்தெழுந்த போது பவித்ரா மிகவும் உற்சாகமாக உணர்ந்தாள்.

கிராமத்து வீடு என்றாலும், குளியலறை வசதியுடன் அறை இருக்கவே விரைந்து குளித்து விட்டே வெளியே தலை நீட்டினாள் அவள்.

தம்பியின் தலையைத் தட்டி, "என்னமோ சொன்னாயே பார், பவித்ரா குளித்துவிட்டே வந்து விட்டாள். என்னம்மா, நீ முதலில் பலகாரம் சாப்பிடுகிறாயா? அல்லது காபி குடித்துவிட்டு இவனோடு கொஞ்ச நேரம் நடந்து சுற்றிப் பார்த்துவிட்டுச் சாப்பிடுகிறாயா? பலகாரம் காபி எல்லாமே தயார்" என்றாள் கமலி.

காபியை வாங்கி அருந்தியபடியே, "என்னைப் பற்றி என்ன சொன்னார், அக்கா?" என்று பவித்ரா விசாரிக்க, "என்னை வம்பில் மாட்டி விட்டு விட்டாயே" என்று பயப்படுவது போலப் பூரணன் நடிக்க, "இரு..இரு... பவித்ரவிடம் பூராவும் வத்தி வைத்து விடுகிறேன். அப்புறம் அவள் உன் இரண்டு காதுகளையும் திருகி விடுவாள்" என்று கமலி மிரட்ட, கொஞ்ச நேரம் தமாஷாக இருந்தது.

பிறகு, 'பவித்ரா ரொம்பவும் களைத்துப் போயிருக்கிறாள், அதனால் அயர்ந்து தூங்கிக் கொண்டிருப்பாள்' என்று மட்டும்தான் நித்யபூரணன் சொன்னான் என்று தெரிய, இன்னமும் சிரிப்பு வந்தது.

அப்புறமாக விருந்தாளிகள் இருவரும் உலாவப் போனார்கள். வயல்களை ஒட்டி, சிறு ஓடையாக ஓடிக் கொண்டிருந்த வாய்க்காலின் ஓரமாகவே நடந்து போனார்கள்.

சிலுசிலுவென்று ஓடிய நீரையும், அதில் குறுக்கும் நெடுக்குமாகப் பாய்ந்த மீன்களையும் **பார்த்து** ரசித்தபடியே, "உங்கள் அத்தானை நான் பார்க்கவே **இல்லையே**" என்று கேட்டாள் பவித்ரா.

"இது அறுவடைக் காலம் அல்லவா? காலை ஆறு மணிக்கெல்லாம் அத்தான் வயலுக்குப் போய் விடுவார். உன்னை மனமார வரவேற்பதாகச் சொல்லச் சொன்னாராம்."

"சொன்னாராம் என்றால் நீங்களும், அவரைப் பார்க்க வில்லையா?"

"ஊகும்... எங்கேம்மா? நானும் தூக்க மாத்திரை போட்ட மாதிரிதான் அசந்து தூங்கி விட்டேன். நீ, விழித்து வருவதற்குக் கொஞ்சம் முன்னேதான் நானும் எழுந்து வந்தேன். நீ குளித்த நேரத்தில் நான் காபி குடித்து முடித்தேன். அவ்வளவுதான், கிட்டத்தட்ட, இருவருமே ஒரே நேரத்தில்தான் விழித்திருப் போம் என்று நினைக்கிறேன்."

"இருவருக்குமே ஒரே தூக்க மாத்திரைதானே?" என்று பவித்ரா சிரிக்க, அவனும் கலந்து கொண்டான்.

சுற்றிலும் கையைக் காட்டினான் பூரணன். "இதெல்லாம் கமலி குடும்பத்தைச் சேர்ந்ததுதான். எனவே காலை மாலை எப்போது வேண்டுமானாலும், இங்கே நீ பயமற்று நடக்கலாம். கரை உயரமாகத் தெரிகிறது பார். அந்தப்பக்கம், பெரிய கால்வாய் ஓடுகிறது. அங்கே இன்னும் அழகான காட்சிகள் நிறைய உண்டு. அதெல்லாம் இன்று மாலையில் கமலி உனக்குக் காட்டுவாள். இப்போது திரும்புவோமா? நான் குளித்துச் சாப்பிட்டுவிட்டுச் சென்னைக்குக் கிளம்ப வேண்டும்."

குண்டு போட்ட மாதிரி அதிர்ந்து போனாள் பவித்ரா.

"என்னது? இன்றைக்கா? இப்போதேயா? பிறகு நான் எப்படி..." என்று கலங்கியவள், உடனே சமாளித்து "உடனே போக வேண்டுமா, பூரணன்? இரண்டு நாள் தங்கிவிட்டுப் போகக் கூடாதா?" என்று குரலைச் சமனப்படுத்திக்கொண்டு கேட்டாள்.

அடக்க முயன்ற பெரிய மூச்சுக்களையும், உயராத பார்வையையும் கவனித்து விட்டு மென் குரலில் அவன் பதில் சொன்னான். "போய்த்தான் ஆகவேண்டும் இல்லையாம்மா? அங்கே பார்க்க வேண்டிய வேலைகளும் நிறைய இருக்கின்றனவே. இதுவரை உன் தந்தை இந்தப் பிரச்சனையில் என்னை இணைத்துப் பார்த்தது போலத் தோன்றவில்லை. அன்று கூடத் 'தம்பி' என்று பொதுவாக அழைத்துத்தான் பேசினார்..."

"அதெப்படி? ஃபார்முலா பற்றிப் பேசிய பிறகு உங்களிடம் தானே சந்தேகம் வரும்."

"அப்படிச் சொல்ல முடியாது. உன் அப்பாவுக்கும், அந்த ஃபார்முலாவுக்கும் என்ன தொடர்பு? அவர் திருடிச் செல்ல வில்லையா? அவரைப் போல மற்றவர்களும் முயற்சிக்கலாமே. அவர் உன் மேல் சந்தேகம் போலத்தான் காட்டிக் கொண்டார். ஆனால் அவரது முயற்சி நாளைக் கடத்துவதுதான். அது தாண்டி, உன் மேல் சந்தேகம் வந்தது என்றுவை. அங்கே நானும் இல்லாவிட்டால் அது உறுதிப்பட்டு விடும். போலீசிடம் போனார் என்றால் தாத்தா வரை போய், பெரிய தகராறு ஆகிவிடும். அத்தோடு நான் அங்கே இருந்தால் எத்தனையோ விஷயங்களை நேரடியாகக் கவனித்து, உடனடியாகச் செயல்பட முடியும். அதனால் போய்விட்டு, முடிந்தவரை விரைவாகத் திரும்பி வருகிறேன்" என்றான் அவன்.

மறுத்துப் பேச முடியாமல் தலையாட்டினாள் அவள்.

நித்யபூரணன் கிளம்பிச் சென்ற பிறகு அங்கே இருக்க முடியாமல் மிகவும் கஷ்டப்படப் போகிறோம் என்று பவித்ரா மிகவும் நிச்சயமாக நினைத்தாள்.பெற்றவளிடமும் தொடர்பு இல்லாத நிலை வேறு. அவனையும் பார்க்க முடியாமல் துக்கத்தை விழுங்கிக் கொண்டேதானே நடமாட நேரும்?

ஆனால், கமலியின் பேச்சும் பழக்கமும், துக்கப்பட அவளுக்கு வாய்ப்பே தரவில்லை.

காலையில் எழுந்தால் காபியைக் கொடுத்து ஒரு வேலைக்காரச் சிறுமியோடு, வாக்கிங் அனுப்பி விடுவாள். நடை முடிந்து திரும்பி வந்தால், ஒரு பெரிய தம்ளரில் நல்ல பதமான பதனீர் காத்திருக்கும். நுங்கு, அல்லது மாம்பழம் பிசைந்து கலந்த பதனீர். அதைக் குடித்து விட்டுக் குளிக்கப் போனால், குளித்து விட்டு வந்ததும் இட்லி. தோசையோடு பரத் சொன்ன கடம்புப் பால் இட்லியும் காத்திருக்கும்.

காலை உணவின்போது, கமலியும் சேர்ந்து சாப்பிடுவாள்.

சாப்பிடும்போது அவள் செய்யும் விருந்துபசாரத்தில் பவித்ராவின் வழக்கத்திற்கு இருமடங்கு உணவு வழுக்கிக் கொண்டு அவள் வயிற்றுக்குள் போய் விடும்.

"இப்படிச் சாப்பிட்டால் குண்டாகி விடுவேன் அக்கா" என்று மறுக்க முயற்சிப்பாள் அவள்.

"நீ குண்டாகிற மாதிரித் தெரிந்தால் நானே அளவைக் குறைத்து விடுவேன்" என்பாள் கமலி. "நீ இருக்கும் மெலிவுக்கு இன்னும் இரு மடங்கு உண்ணலாம்" என்று இலையில் வைத்தும் விடுவாள்.

"மீண்டும் பார்க்கிற போது உன் மெலிவு மாறியிருக்க வேண்டும் என்று நித்யன் என்னிடம் சொல்லி இருக்கிறானாக்கும்" என்று சொல்லி அவள் எடுத்து வைக்கும்போது பவித்ராவுக்கே மறுக்கத் தோன்றாது.

இதில் தொடங்கி பூரணனைப் பற்றிய பேச்சு தொடரும்.

அவனுடைய குடும்பம், தனக்கு அவர்களோடு உள்ள ஒட்டுறவு பற்றிச் சொல்லுவாள்.

தொடர்ந்து நித்யபூரணன் பற்றி.

சிறு வயதில் இருந்தே அவன் எவ்வளவு கெட்டிக்காரன். சிரிக்கச் சிரிக்கப் பேசிக் கொண்டே பொறுப்பாக வேலைகளைக் கவனிப்பது படிப்பில் துடிப்பாக இருந்தது. விளையாட்டில் பரிசு வாங்கியது.

பொதுவாக யாராவது ஒருவரைப்பற்றியே பேசிக் கொண்டிருந்தால், பவித்ராவுக்குப் பிடிக்காது. 'என்ன, பாராயணமா? ராமாயணமா?'என்று கிண்டல் செய்வாள்.

ஆனால் இப்போது நித்யனைப் பற்றி எவ்வளவு சொன்னாலும் அதைக் கேட்பதற்கு அவளுக்கு அலுக்க வில்லை. ஒன்று, கமலி அவனைப் பற்றிக் கூறுவதை ஆவலாகக் கேட்டுக் கொண்டிருப்பாள். கமலி ஏதாவது வேலையாகப் போய், தனியே இருக்கும் நேரத்தில் பெரியவள் சொன்னதையெல்லாம் கற்பனையில் நடத்திப் பார்ப்பாள். இருவிதத்திலுமே, பொழுது சுவாரசியமாகக் கழிந்தது.

இதற்கு மேல் கமலியிடம் இருந்த போட்டோ ஆல்பங்கள் வேறு.

போனசாக அவ்வப்போது நித்யபூரணனும் டெலிபோனில் பேசினான். ரஞ்சிதத்தைப் பற்றி உண்மையைச் சொன்னான்.

எப்போதும் கண்ணீர்தானாம்.

ஆனால் ஒருவிதமாய், இப்போதைக்கு மகளுக்கு ஆபத்து ஒன்றும் இல்லை என்று அவளுக்குப் புரிய வைத்திருக்கிறானாம். ஒருமுறை கடத்தல்காரனாகவே ரஞ்சிதத்திடம் பேசினானாம்.

'நாகேந்திரன் ஃபார்முலாவைத் தந்துவிட்டால் அன்று கண்ட மேனிக்குப் பழுதில்லாமல் மகள் திரும்பி வருவாள் என்றால் என்ன அர்த்தம்? இப்போதைக்கு அவள் ஆரோக்கியமாக இருக்கிறாள் என்றுதானே? சொல்லப்போனால், உங்கள் வீட்டில் போலப் பட்டினி கிடக்க முடியாமல் இப்போது நல்லபடியாகச் சாப்பிட்டு முன்னைவிட ஆரோக்கியமாக இருக்கிறாள். நீங்கள் உங்கள் கணவருக்குப் புத்தி சொல்லி அந்த ஃபார்முலாவைத் திருப்பிக் கொடுக்க ஏற்பாடு செய்தால் அந்த அளவு சீக்கிரமாகவே மகளைத் திரும்பப் பார்க்கலாம்' என்று சொல்லியிருக்கிறானாம்.

ரஞ்சிதமும் புரிந்து கொண்ட மாதிரி 'இப்படியே என் மகளை நல்லபடியாகப் பார்த்துக் கொள்ளுங்கள் தம்பி,' என்று கேட்டுக் கொண்டாளாம்.

மகளைப் பாராதது தவிர, அவள் என்ன கஷ்டப்படுகிறாளோ என்று இல்லாத பல பொல்லாத கற்பனைகள் செய்து தாயார் வேதனைப்பட மாட்டாள் என்கிற நிம்மதி பவித்ராவுக்கு ஏற்பட, அவளும் அவனுக்கு நன்றி கூறினாள்.

"இதற்கெல்லாம் நன்றியா? நான் இங்கே இன்னொரு வேலை செய்து கொண்டிருக்கிறேன். அது நிறைவேறட்டும். அப்புறம், என்ன நடக்கப் போகிறது பார்" என்று மூடு மந்திரமாகப் பேசினான் பூரணன்.

என்னவென்று புரியாவிட்டாலும் அதற்கு மேல் அவனும் அதைத் தெளிவு படுத்தாவிட்டாலும் அவன் குரலில் இருந்த உற்சாகம் அவளையும் தொற்றிக் கொள்ள பவித்ரா மகிழ்ச்சியுடனேயே வளைய வந்தாள்.

எல்லாம் ஒரு சில நாட்கள் மட்டுமே.

அதன் பிறகு அவளாகவே பெரும் துன்பத்தைத் தேடிச் செல்லும்படி ஆயிற்று.

அதன் தொடக்கம் நித்யபூரணனின் நிகழ்கால இடுக்கண் பற்றிக் கமலி கூறிய விளக்கம்தான்.

ஒருநாள், பூரணனின் புதிய கண்டுபிடிப்பைப் பற்றி கமலி பேசினாள்.

"எப்போதுமே நித்யன் ரொம்பத் துறுதுறுப்பாக இருப்பான், பவி..." என்று தொடங்கியவளை இடைமறித்து "எல்லோரும் அவரைப் பூரணன் என்கிறார்கள். நீங்கள் மட்டும் நித்யன் என்று அழைக்கிறீர்களே" என்றாள் பவித்ரா.

அவளுக்கு உள்ளூர நித்யபூரணனை நித்யாவாகத்தான் நினைக்கத் தோன்றும்.

"எல்லோரும் தாத்தாவின் பெயரைச் சொல்லி அழைப்பது மரியாதைக் குறைவு என்று பூரணன். தம்பி என்றெல்லாம் கூப்பிடுவார்கள். நான்தான் 'உங்களை நித்யா என்று அழைக்க மாட்டோம் என்று தெரியாதா? பெரியவர் என்பதால் தாத்தா அப்பா, மாமா என்று அவரவர் உறவுமுறை சொல்லித்தானே, அழைப்பது? நித்யா என்றால் அவனைத்தான் என்று தெரியாதா? அப்படித்தான் அழைப்பேன்' என்று சொல்லி விட்டேன். எனக்கு அந்த வீட்டில் முதல் பேத்திக்குரிய சலுகை உண்டா, 'சரிம்மா செய் 'என்று தாத்தாவே சொல்லிவிட்டார். தாத்தாவிடம் எல்லோரும் கொஞ்சம் பயந்து நிற்பார்கள். ஆனால் நியாயத்தை எடுத்துச் சொன்னால் அவர் கௌரவம் பாராமல் ஒத்துக் கொள்ளுவார்" என்றாள் கமலி.

ஏதேதோ எண்ணிச் சிறகடிக்கத் தொடங்கிய மனதை அடக்கியபடி, "அப்புறம் சொல்லுங்கள் அக்கா. உங்கள் அருமைத் தம்பி ரொம்பத் துறுதுறுப்பு..." என்று எடுத்துக் கொடுத்தாள், பவித்ரா.

"முன்னேற்றம் என்பது மற்றவர்கள் மனதிலும் இல்லாமல் இல்லை. இருப்பதை வைத்துக் கொண்டு அதில் சிறுசிறு

மாற்றங்களைச் செய்து கொண்டு அதிலேயே லாபம் பார்த்துக் கொண்டு இருந்தார்கள். நித்யாதான் பெரிதாகக் கண்டுபிடிக்க ஏற்பாடு செய்தான். ஒரு குடும்பம் இப்போது மூன்றாகி விட்டது. இனி ஏழு எட்டு ஆகும். தொழிலும் அந்த அளவுக்கு வளர்ந்தால்தான் குறையின்றி வாழ முடியும் என்று செய்தான். தேவைப்பட்டதைக் கண்டுபிடித்தும் விட்டான். அவன் கஷ்டப்பட்டுக் கண்டெடுத்த புதையல் அது. அதைப் போய்க் கவனக் குறைவாகத் தொலைத்து விட்டார்கள். திருடிப் போக விட்டு விட்டார்கள்" என்றாள் ஆத்திரத்துடன்.

திருடியவர் தன் தந்தை என்ற நினைவில் பவித்ராவின் முகம் கன்றியது.

இந்தக் கமலிக்கு எல்லாம் தெரிந்திருக்கிறதே. இதைக் கூடச் சொல்லியிருப்பானா?

ஆனால் கமலி தொடர்ந்து பேசிய பேச்சு அப்படிக் காட்டவில்லை. மாறாக நித்யபூரணனின் இன்றையப் பிரச்சனையை ஆராய்ந்து வருந்தியது.

"திருடிப் போன ஆள், இவனது குறியீடுகளையும் கண்டுபிடித்து அந்த முறையில் சென்ட் தயாரிக்கத் தொடங்கி விட்டால், அப்புறம் இவர்களுக்குத் தொழிலே நொடித்துப் போய்விடுமாம். வேறு தொழிலுக்குப் போகலாமா என்று கூடத் தம்பி யோசிக்கிறான், பவித்ரா. ஆனால் அது எவ்வளவு கஷ்டம்" என்று பெருமூச்சு விட்டாள் கமலி.

தொழிலே நொடித்துப் போகுமா?

மூன்று தலைமுறைகளைக் கட்டிக் காத்த தொழில் அழிவதா என்று எண்ணும்போதே நெஞ்சு துடித்தது அவளுக்கு.

அதனால்தான் அவன் இந்த அளவு முயன்றானா? மற்றபடி அவனைப் போன்ற உத்தமன் பெண்ணைக் கடத்துவது, பணயம் கேட்பது போன்ற குற்றங்கள் எல்லாம் செய்வானா?

இப்படியெல்லாம் செய்தும் அவளுடைய தந்தை அந்த ஃபார்முலாவைத் திருப்பிக் கொடுப்பதாகக் காணோமே. இனி என்ன ஆகும்?

ஒருவேளை அவளுடைய நித்யன், வேறு தொழில் தொடங்குவதுதான் நல்லதோ? எந்தத் தொழிலையும் அவனைப் போன்ற திறமைசாலியால் வெற்றிகரமாக நடத்த முடியும்தானே?

ஆனால் அப்படி அவன் விட்டுவிட்டால் அப்புறம் அவள் கதி என்ன ஆகும்?

பலவாறு எண்ணிப் பவித்ரா கலங்கும்போதே, புதிய தொழில் தொடங்குவதில் உள்ள சிரமங்கள் குறித்து கமலி விவரித்தாள்.

"தாத்தாவுடையது பெரிய குடும்பம், பவித்ரா. அவருக்கே மூன்று பையன்கள். அவர்களுடைய மனைவியர், மூவருக்குமாகச் சேர்ந்து எட்டு பிள்ளைகள். ஒன்றிரண்டு பேர் தவிர, எல்லோருமே பதினெட்டு வயதைத் தாண்டியவர்கள். சட்டப்படி உரிமை உள்ள பெரியவர்கள். இவர்கள் எல்லோரும் இதற்கு ஒப்புவது கடினம். அத்தோடு ஒன்றை விரிவாக்குவது என்பது வேறு. அதன் பழைய பெயரே பாதி காப்பாற்றும். ஆனால் முழுவதுமாகப் புதிதாகத் தொடங்கும்போது அது போன்ற தடங்கல்கள் எதுவும் இராது. சறுக்கல்களும் நேரக் கூடும். அத்தோடு எந்தத் தொழிலையுமே தொடங்கியதும் லாபம் வராது. போட்ட பணத்தை உடனே எடுக்க இயலாது. செலவும் அதிகம் ஆகும். அங்கே எல்லோருமே நன்றாகச் செலவழித்துப் பழகியவர்கள். கொஞ்சம் இறுக்கிப் பிடிக்க எல்லோரும் அவனைக் குற்றம் சாட்டுவார்கள். எல்லாம் நினைக்கவே எனக்கு மிகவும் கவலையாக இருக்கிறதும்மா" என்று வருத்தத்துடன் கூறினாள்.

சற்று யோசித்து, "ஆனால் அவருடைய தம்பிகள் இருவரும் எப்போதும் அவர் பக்கம் அக்கா" என்றாள் பவித்ரா.

"பரத்தும் மகேஷும்தானே? இருவருமே ஒவ்வொரு சித்தப்பா பிள்ளைகள். பெற்றோர் மாறும்போது எப்படி ஆவார்கள் என்று சொல்ல முடியாதே. இல்லாவிட்டாலும் இந்த இருவர் தவிர மீதி பதினோரு பேர் இருக்கிறார்களே. தாத்தா, பாட்டி சேர்த்தால் பதிமூன்று பேர்" என்றவள் மீண்டும் பெருமூச்சு விட்டாள்.

ஐயோ எல்லாம் அவளுடைய தந்தையின் பேராசையால் விளைந்தது அல்லவா? அடுத்தவர் வீடு புகுந்து திருடுகிற அளவு பேராசை. அவருக்கு மகளாகப் பிறந்த பாவத்துக்கு பவித்ரா என்ன பிராயச்சித்தம் செய்ய முடியும்?

உள்ளூரத் துடித்துக் கொண்டிருந்த பவித்ராவுக்குப் பிராயச்சித்தம் செய்ய ஓர் அருமையான வாய்ப்புக் கிடைத்தது.

பத்து நாட்கள், இப்படியே கடந்து போயின.

இடையில் ஒருநாள் அருள் வாசலுக்கு வந்து போவதாகச் சொன்ன நித்யபூரணன். கடைசி நேரத்தில் அந்தப் பயணத்தை ரத்து செய்தான்.

அதுவரை 'பரிமளம்' குடும்பம் கிரிமினல் வேலைகளில் இறங்க மாட்டார்கள் என்று எண்ணி அடுத்த நிலையில் இருந்த இரு வாசனைப் பொருள் தயாரிப்பாளர்களை உளவு பார்த்துக் கொண்டிருந்த நாகேந்திரன், மகளைக் கடத்தியது அவர்கள் அல்ல என்பதை ஒருவாறு உணர்ந்து கொண்டார்.

இனி மீதம் இருப்பது பரிமளம் நிறுவனம்தான். ரொம்பவும் பெருங்குடியினர்.

அவர்களா இப்படி... என்று பலமுறை யோசித்த நாகேந்திரன் கடைசியாக இவர்களாகத்தான் இருக்கவேண்டும் என்ற முடிவுக்கு வந்தார்.

அந்தக் குடும்பத்துப் பெரியவர்களிடம் உள்ள அளவு நம்பிக்கை அவருக்கு அங்குள்ள இளைஞர்களிடம் இல்லை. முக்கியமாக நித்யபூரணனிடம். அவன் பிடிவாதக்காரன். துணிச்சல்காரனும் கூட. எப்படியேனும் சாதிக்கிறவன்.

பெரும் செலவு செய்து மூன்று இளைஞர்களையுமே உளவு பார்த்தார்.

மூன்று கோடியை எண்ணிப் பார்க்கும்போது இந்தத் தொகை ஒன்றும் இல்லையே. ஆனால் உருப்படியாக எதையும் அவரது ஆட்களால் கண்டுபிடிக்க முடியவில்லை.

குரலை மாற்றிப் பேசிய கடத்தல்காரனிடம் எப்படியெப் படியோ நாளைக் கடத்தியபடி, தயாரிப்புக் குறிப்பின் சங்கேதத்தை உடைக்க இரவுபகலாக மும்முரமாக முயன்றார். மகளைத் தேடும் வேலையிலும் அப்படித்தான்.

மூன்று கோடிக்கு இரண்டும் அவசியம் ஆயிற்றே.

ஆனால், எதிலும் பலனைக் காணாமல் சோர்ந்தார் அவர்.

எதிர்பார்த்து எச்சரிக்கையோடு இருந்ததால் பின்னோடு ஆள் தொடருவதைப் பூரணன், உடனே கண்டுகொண்டான். எனவே வெளியூர் போகாமல் சென்னையிலேயே இருந்து விட்டான்.

டெலிபோன் பேச்சைக் கூடக் கவனத்துடன் நடத்தினான்.

அதனாலேயே கமலி வீட்டுடனும் அவனால் அதிகம் தொடர்பு கொள்ள முடியவில்லை. ஒரே ஒருதரம் பவித்ராவிடம் சுகம் விசாரித்ததோடு சரி. இந்த மாதிரி உளவு அறிய முடியாத படிதான் நாகேந்திரனுடனும் பேச வேண்டியிருந்ததால்

பவித்ராவுடன் பேசுவதைத்தான் அவன் குறைத்துவிட கிட்டத் தட்ட விட்டு விடவே வேண்டியிருந்தது.

ஆனால், இரண்டு வார்த்தை பேசக்கூட முடியாமல் நித்யபூரணன் என்ன நிலையில் இருக்கிறானோ என்று தவித்துப் போனாள் பவித்ரா.

இங்கிருந்து தொடர்பு கொள்ள வேண்டாம் என்று அவன் எச்சரித்திருந்ததால் அவளாகக் கூப்பிட்டுப் பேசவும் முடியாது போக, தவிப்பு மேலும் அதிகரித்தது.

இந்த நிலையில் அருள் வாசலில் ஒரு பெரிய திருவிழா வந்தது.

கமலி வீட்டுப் பண்ணை இருந்த கிராமத்தின் பெயர் அருள் வாசல். அருள்வாசலைத் தாண்டி, நாலு கிலோமீட்டர் உள்ளே சென்றால் அம்மன் அருள் செயல்புரம் இருந்தது.

அருள் செயல்புரத்து அம்மன் மிகவும் சக்தி வாய்ந்த தெய்வம். ஒவ்வொரு பௌர்ணமியிலும் அம்மனுக்குச் சிறப்புப் பூஜை நடக்கும். இரவு பன்னிரெண்டு மணிக்குத் தொடங்கி விடி வெள்ளி முளைக்கும் வரையும் நடக்கும். இந்த பூஜையில் பக்தியுடன் பங்கேற்பவர்களுக்கு அம்மன் வேண்டும் வரம் கொடுப்பாள் என்பது அங்கு பரவலான நம்பிக்கை.

தம்பியின் நல்வாழ்வுக்காகக் கமலி வேண்டிக் கொண்டிருந்தாள்.

அந்த அம்மனிடம் பூரணனுக்காக வேண்டிக்கொள்ள, பவித்ராவுக்கும் ஆசையாகத்தான் இருந்தது. பூஜையைப் பற்றி கமலியிடம் துருவித் துருவிக் கேட்டாள். ஆனால் வெளியே எங்கும் போக வேண்டாம் என்று நித்யபூரணன் சொல்லியிருந்ததை எண்ணித் தயங்கினாள்.

ஆனால் "பெரும்பாலும் இந்தப் பகுதி மக்கள்தான் இந்தக் கோயிலுக்கு அதிகம் வருகிறார்கள். வெளியார் நடமாட்டம் இராது. ஆனால் கட்டாயம் வா, அம்மனிடம் வேண்டிக் கொள். உன் வீட்டுப் பிரச்சனை கூட இதனால் தீர்ந்து விடும்" என்று கூறி, பவித்ராவையும் பூஜைக்குக் கமலி அழைத்தாள்.

அவளது சொந்த வாழ்வு முக்கியம்தான். ஆனால் நித்யபூரணனின் பிரச்சனை தீருவது இன்றியமையாத் தேவையாகப் பவித்ராவுக்குத் தோன்றியது. அவளைப் பெற்றவரால் உண்டான துன்பம் அல்லவா? அதுதான் முதலில் தீர்ந்தாக வேண்டும்.

அவன் துன்பம் நல்லபடியாகத் தீர்ந்தால் ஒரு வேளை...

இருக்கட்டும். அது பற்றி. இப்போது நினைக்கவே கூடாது. ஏதாவது ஒரு விஷயம்தான் வேண்டிக் கொள்ளலாம் என்று கமலி சொல்லியிருக்கிறாள். இப்போது அவளுடைய நித்யன் தான் முக்கியம். நிலை இறங்கி அவன் தலை குனிந்து நிற்கக் கூடாது. இப்போது பிரியமும், மதிப்புமாக அவனைப் பார்க்கும் அவனுடைய உறவினர் எப்போதும் அவனை அப்படியே நடத்தவேண்டும். செல்வமும் செல்வாக்கும் உடைய அவனது நிலை சமூகத்தில் மேலும் உயர வேண்டும். மற்ற எதுவும் முக்கியம் அல்ல.

கண் கலங்க, பவித்ரா வேண்டிக் கொண்டாள்.

கமலியோடு பவித்ராவும், வெறும் பாலும் பழமும் சாப்பிட்டு முறைப்படி விரதம் இருந்தாள்.

கோவிலுக்குச் செல்லும் வழியில் பெரும்பாலும் ஆள் நடமாட்டமே இல்லாதிருந்தபோதும், கோயிலை நெருங்குகையில் கமலி வீட்டுக்கார் ஊர்ந்துதான் செல்ல வேண்டியிருந்தது. அந்த அளவுக்குக் கூட்டம் நிறையவே வந்திருந்தது.

அம்மனுக்கு பல்வேறு அபிஷேகங்கள் செய்து அலங்காரம் செய்தார்கள்.

வேறு பல சாங்கியங்களும் செய்தார்கள்.

அதன் பின் விளக்கு பூஜை நடந்தது.

ஒவ்வொரு பெண்ணும் தனித்தனியே ஐந்து முக விளக்குக்குச் சந்தன, குங்குமப் பொட்டுகள் இட்டு, பாதத்தில் பூ வைத்து, விளக்கை ஏற்றிக் குங்குமத்தால் அர்ச்சனை செய்தார்கள். அர்ச்சனைக்குரிய நாமாவளியைக் கோவிலைச் சேர்ந்த ஒருவர் மைக்கில் சொல்ல எல்லாப் பெண்களும் அதைத் திருப்பிச் சொன்னார்கள்.

அர்ச்சனை செய்த குங்குமத்தை எடுத்துக் கொண்டு எல்லோரும் விளக்குகளைக் கோவிலுக்குள் வைத்துவிட்டு அம்மனுக்குப் பொது அர்ச்சனையையும் செய்து முடித்தபோது கீழ் வானில் இருள் கலையத் தொடங்கியிருந்தது.

கோவிலைச் சுற்றிவிட்டு வரலாம் என்று கிளம்பியபோது அந்த வட்டாரத்தில் செல்வாக்குள்ள ஒரு பெண்மணி கமலியைப் பார்த்ததும் நின்று பேசத் தொடங்கினாள்.

பவித்ராவைப் பற்றிய அனாவசியக் கேள்விகளைத் தவிர்க்க விரும்பி "நீ பிரகாரம் சுற்றத் தொடங்கும்மா. நான் வந்து சேர்ந்து கொள்ளுகிறேன்" என்று சின்னவளை அனுப்பிவிட்டு "என்ன திடீரென்று இந்தப் பூஜைக்கு வந்தீர்கள்? ஏதேனும் வேண்டுதலா?" என்று கமலி அந்தப் பெண்ணோடு பேசத் தொடங்கினாள்.

மூன்று சுற்று மெள்ளவே சுற்றிய போதும் கமலி வந்து சேரவில்லை.

மெல்ல அருகே சென்றபோது அறுவடை, கூலி என்று காதில் விழவே அவர்கள் வாழ்க்கைப்பாடு பற்றிப் பேசுவது உணர்ந்து பவித்ரா விலகிப் போனாள்.

சரி மூன்று சுற்றுதான் சுற்ற வேண்டும் என்று இல்லையே. அக்கா வந்துசேரும்வரை கோயிலை மெல்லச் சுற்றிக் கொண்டே இருக்கலாமே. கோயிலை வலம் வருவது புண்ணியம்தானே!

ஆனால் முறைப்படி செய்ய வேண்டியது முடிந்துவிட்டது என்பதாலோ என்னவோ பவித்ராவின் கவனம் சற்று சிதறியது.

ஒரு புறமாகக் கரகாட்டம் நடந்து கொண்டு இருந்தது.

ஆடிக்கொண்டிருந்தவர்களை நின்று பார்த்துக் கொண்டிருந்தவர்களும் பவித்ராவின் பார்வையில் விழுந்தனர். ஆடிக் கொண்டிருந்த அழகிய பெண்ணின் அங்க அசைவுகளைச் சிவந்த விழிகளால் விழுங்கிக் கொண்டிருந்த ஒருவனைப் பார்த்ததும் பவித்ரா அதிர்ந்து நின்றாள்.

ஏனெனில் அவன் செல்வராஜா.

சற்று நேரம் அது எத்தனை வினாடிகளோ அன்றி எத்தனை நிமிஷங்களோ அவளுக்குத் தெரியாது. ஆனால் அந்த நேரத்தில் அவளது மூளை மரத்துப் போனது போல என்ன செய்வது என்று அவளுக்கு ஒன்றும் புரியவில்லை.

பிரகாரம் சுற்றும் வழியில் அவள் நிற்கவே யாரோ அவளை இடித்துவிட்டுத் "தள்ளும்மா வழியில் நிற்காதே" என்று சொன்ன பிறகே அவளுக்குக் கொஞ்சம் சுரணை வந்தது. மூளையும் வேலை செய்யத் தொடங்கியது.

இப்போது என்ன செய்வது?

இதுவரை செல்வராஜா அவளைப் பார்க்கவில்லை. அவன் பார்வைக்குத்தான் வேறு விருந்து இருந்ததே!

ஆனால் கடைசிவரை அதாவது கோயிலில் இருந்து கமலியும் அவளும் கிளம்பும்வரை அவன் பார்வையிலிருந்து தப்புவது சாத்தியமா?

அவன் கண்ணுக்கு மறைந்து கொண்டாலும் அவனுடைய ஆட்கள் எத்தனை பேர் வந்திருக்கிறார்களோ? அவர்கள் யாரென்றே தெரியாத போது அவர்கள் அத்தனை பேர் பார்வையிலிருந்தும் எப்படித் தப்புவது?

தப்ப முயன்று மாட்டிக் கொண்டால் எவ்வளவு ரசாபாசமாகி விடும்?

கமலி வேறு கோவிலுக்குத்தானே என்று டிரைவரைத் தவிர வேறு யாரையும் அழைத்து வரவில்லை.

ஒரு வேளை.. நித்யபூரணனின் பிரச்சனையைத் தீர்த்து வைக்க அம்மன் அவளுக்குக் காட்டும் வழி இதுதானோ?

அவளும் அம்மனிடம் அதை மட்டும்தானே வேண்டினாள்? அவள் வேண்டியதை அம்மன் தந்துவிட்டாளோ? அதாவது வேண்டியது நிறைவேறுவதற்கான வழியை.

அவளுடைய தந்தையின் பூட்டப்பட்ட தனி அறை அவளுக்கு நினைவு வந்தது.

செல்வராஜாவிடம் சிக்கிக் கொண்டால் என்ன செய்ய வேண்டும் என்பது உடனே தெரிந்தது.

ஆனால்.... இல்லை. அவளுக்கு யோசிக்க வேண்டும். யோசிக்க அவகாசம் வேண்டும். அவனிடம்.. அவன் அவளை..

சற்றுத் தள்ளி கோவில் வாசலிலிருந்து கையில் குளிர்பான பாட்டிலோடு வந்த ஒருவன் தன்னைக் கூர்ந்து பார்ப்பதைப் பவித்ரா கவனித்தாள்.

இல்லை. இன்னும் கொஞ்சம் திட்டமிட வேண்டும். அதற்குள் அகப்பட்டுக் கொள்ளக்கூடாது.

கோவிலைச் சுற்றிக் கொண்டிருந்த கூட்டத்தினுள்ளே ஒளிந்து சென்று கோயிலின் பின் பக்கத்துக்குப் போனாள்.

அறிமுகமான முகம் ஒன்று இடையில் கண்ணில் பட்டது. கமலியின் பண்ணையில் ஒரு தரம் பார்த்தது. அவளிடம் "தெரிந்தவர்களோடு போவதாகக் கமலிக்காவிடம் தயவு பண்ணிச் சொல்லிவிடுகிறீர்களா?" என்று கெஞ்சலாகக் கேட்டுக் கொண்டாள்.

"பார்த்தால் கட்டாயம் சொல்லுகிறேன்" என்று நடந்தபடியே அவள் சொல்லிச் செல்ல அங்கிருந்த மரத்தின் பின்னே பவித்ரா மறைந்து நின்றாள்.

அங்குமிங்கும் அலசி ஆராய்ந்த வண்ணம் செல்வராஜாவும் கூட இருவரும் வேகமாக வருவதைக் கண்டாள் "எல்லாரும் ஒரே பக்கம் போகாதீர்களடா மாறி மாறி இந்தப் பக்கமும் அந்தப் பக்கமுமாகப் போய் அவளைக் கண்டு பிடிங்களடா" என்று செல்வராஜா அவர்களை விரட்ட அவர்கள் அவ்வாறே ஓடினர்.

ஆக இதுதான் விதி.

உள்ளே சோர்ந்தபோதும் ஒரு பிடிவாதத்துடன் பவித்ரா காத்திருந்தாள்.

செல்வராஜா அருகில் வந்ததும் மறைவை விட்டு வெளியே வந்து "ஹல்லோ செல்வா" என்று அவனை அழைத்தாள்.

விழிகள் ஆந்தையாய் விரிய அவளை விழுங்குகிறவன் போலப் பார்த்தான் அவன்.

செல்வராஜாவுக்கு யோசிக்க இடம் கொடாமல் அவன் அருகே சென்று சற்றுத் தணிந்த குரலில் "செல்வா.. செல்வா என்று உங்களை நான் அழைக்கலாமில்லையா?" என்று திடுமென எழுந்த சந்தேகத்துடன் அவள் கேட்க அவனும் தலையாட்டினான்.

"அப்பாடா" என்று மூச்சு விட்டவள் "செல்வா நீங்கள் எனக்கு ஒரு உதவி செய்ய முடியுமா? என்னைச் சென்னைக்கு

அழைத்துச் செல்ல முடியுமா?" என்று சிறு கவலையுடன் கேட்டாள்.

செல்வராஜாவுக்கு இன்னமும் ஒன்றும் நன்றாகப் புரியவில்லை. ஆனால் நடேசனுடைய மகன் அவரளவு புத்திசாலி இல்லை என்றாலும் முட்டாளும் அல்ல. எனவே "என்னோடெல்லாம் நீ வருவாயா?" என்று கேட்டான்.

பெரிய விழிகளால் அவனை நோக்கி "மனம் என்பது மாறுவது செல்வா. அப்படி மாற ஒருவர் எவ்வளவோ அனுபவப்படவும் வேண்டியிருக்கிறது.நீங்கள் காரில்தானே வந்திருக்கிறீர்கள்? வாருங்கள். கொஞ்சம் தள்ளிப் போய் நின்று பேசுவோம். இது வழியாக போகிறவர்களுக்கு இடைஞ்சலாக நிற்கிறோம்" என்றாள்.

பிரகாரம் சுற்றக் கமலி வந்தாலும் சட்டென அவள் கண்ணில் படாதபடி அதே சமயம் ஒரேயடியாக மறைந்தும் இராமல் ஒரு பெரிய மரத்தை ஒட்டி நின்றபடி "உங்களிடம் 'செல்' இருக்கிறதல்லவா?" என்று கேட்டாள்.

செல்வராஜாவுடைய ஆட்கள் இருவரும் வந்து இவர்கள் இருவரும் சேர்ந்து நின்று பேசிக் கொண்டிருப்பதைக் கண்டு திகைத்துவிட்டு ஒதுங்கி நின்றனர்.

நடேசன் புதல்வனிடம் 'செல்'இராதா?

"என்ன கேள்வி இது?" என்றபடி செல்லை எடுத்துக் கொடுத்தான் அவன்.

அதை வாங்கி பட்டன்களைத் தட்டினாள் அவள் "அப்பா நான் பவித்ரா பேசுகிறேன்" என்றாள்.

செல்வராஜாவும் மற்றவர்களும் புரியாமல் நோக்கும் போதே "அப்பா" என்றாள் அவள் அழுத்தத்துடன். "இப்போது நான் மிஸ்டர் செல்வராஜாவின் செல்லில்தான் பேசுகிறேன். அவர்

என்னைச் சென்னைக்கு அழைத்து வருவதாகச் சொல்லியிருக்கிறார்....ம்?"என்றவள் செல்வராஜாவைப் பார்த்து "இங்கிருந்து சென்னைக்குச் செல்ல எவ்வளவு நேரம் ஆகும்?:" என்று வினவினாள்.

அவனும் அவனுடைய அடியாட்களுமாய் மூவருமே பதில் சொல்லவும் "ஆறு மணிநேரம் ஆகும் அப்பா. அப்படியானால் மதியச் சாப்பாட்டுக்கு நாங்கள் அங்கே வந்துவிடுவோம். அம்மாவிடம் மீன் புட்டு செய்யச் சொல்லுங்கள் அப்பா. அப்புறம் பூண்டுக்குழம்பும். நாக்குச் செத்துக் கிடக்கிறதுப்பா. ம்ம்? தப்பிவிட்டேன்பா. எல்லாம் வந்து சொல்லுகிறேன். பன்னிரண்டிலிருந்து ஒரு மணிக்குள் வருவோம்" என்று பேச்சை முடித்தாள்.

"அவ்வளவு கணக்காக நேரம் சொல்ல வேண்டுமா? சற்றுத் தங்கி 'சிரம பரிகாரம்' செய்து கொண்டு நிதானமாகப் போகலாமே" என்றான் செல்வராஜா.

அவன் குறிப்பிட்ட 'சிரம பரிகார'த்தின்பொருள் யாருக்குமே புரியாமல் இல்லை. புரியாதது போல நடிப்பதில் பயனும் இல்லை.

நெஞ்சுக்குள் பந்தாய்த் திரண்ட பீதியை மறைத்தபடி "உங்கள் காருக்குச் சென்று பேசலாமா?" என்றாள் பவித்ரா.

அவன் காரில் ஏறும் போது அந்தப் பெண் கமலியிடம் கூறுவது ஓரக்கண்ணில் பட்டது. கமலியின் திகைப்பை நெஞ்சு வலிக்கக் கவனித்தபடியே காரில் ஏறி அமர்ந்தாள்.

அவள் அருகே தானும் உட்கார்ந்து "கேட்டேனே? வேண்டுமானால் தஞ்சையில் ரூம் போட்டுக் கொள்ளலாம்" என்று அவளை இன்னமும் அணுக முயன்றான் செல்வராஜா.

ஒரு கம்பீரத்துடன் கை உயர்த்தி அவனைத் தேக்கினாள் பவித்ரா.

அவன் 'என்னடி' என்பதுபோல நோக்க "நான் கடத்தப்பட்ட விவரம் உங்களுக்குத் தெரியும் அல்லவா?" என்று கேட்டாள்.

அவன் ஒப்புதலாய்த் தலையசைத்தான். "ஆனால் அதில் எங்களுக்குச் சந்தேகமும் உண்டு."

புருவம் சுளித்து "என்னது? சந்தேகமா? அப்பா போனில் கூறியது போலவா? உங்களிடம் நானாகத்தானே வந்து நின்றேன்? நீங்கள் ஒன்றும் என்னைக் கண்டு பிடிக்க வில்லையே. எவ்வளவு கஷ்டப்பட்டு அங்கிருந்து தப்பித்து மரத்தின் பின்னே ஒளிந்திருந்தேன். உங்களைக் கண்டதும் 'அப்பாடி' என்று கூப்பிட்டேனே. என் மீது என்ன சந்தேகம்?" என்று கேட்டாள் அவள்.

"அப்போதுதான் சந்தேகம். இப்போது இல்லை." என்றான் அவன் "ஆனால்..."

"பாருங்கள் செல்வா. எனக்குப் பல கொள்கைகள். அவைகளுக்கு முரணாக அப்பா ஓர் ஏற்பாடு செய்தார். என் கொள்கைகளுக்கு நேர்மாறு என்று எதிர்த்தேன். ஆனால் நான் கடத்தப்பட்டது எனக்குப் பெரிய அதிர்ச்சி. எந்த வித உரிமையும் இல்லாதவர்கள் என் விருப்பத்துக்கு மாறாக என்னைப் பிடித்துக் கொண்டு போனதும், கண்ணைக் கட்டியதும், அடைத்து வைத்ததும்... இன்னும் செத்துவிடுவேன் என்ற பயம் மட்டும் இல்லை என்றால் என்னென்னவோ நடந்திருக்கும். பிடிக்காத சாப்பாட்டை வாய்க்குள் திணிப்பார்கள் தெரியுமா? பட்டினியில் நான் செத்துவிடக் கூடாதாம். அவர்களுக்குப் பொன் முட்டையிடும் வாத்து போய்விடுமாம்."

தன் உடல் தேறியிருப்பது செல்வராஜாவின் சந்தேகத்தைக் கிளப்பி விடக்கூடாதே என்று அவள் சொன்னதுதான்.

அவளது விளக்கத்தை ஏற்று "அதனால்தான் முன்னைவிட நன்றாயிருக்கிறாய்.. அப்படியே 'லபக்' கென்று தின்னத் தூண்டும் லட்டு மாதிரி" என்று இளித்தான் அவன்.

அவனது இளிப்பைக் கவனியாதது போல அவள் தொடர்ந்தாள். "அப்படி அடைபட்டுத் தனியாகக் கிடந்த போது ரொம்ப யோசித்தேன். உரிமையே இல்லாதவர்கள் என்னை இப்படி நடத்துகிறார்கள். பெற்று வளர்த்த அப்பாவுக்கு நம் மீது எவ்வளவு உரிமை உண்டு? அவர் சொல்வதை மீறலாமா என்று யோசித்தேன். அதனால்தான் இரண்டாவது என்றாலும் அப்பா சொல்லிவிட்டதால் அதை ஒத்துக் கொள்ள வேண்டும் என்று முடிவு செய்தேன்..."

"அதுதான் முடிவு செய்துவிட்டாயில்லை? பிறகு என்ன?" என்று அவள் தொடையில் வைக்கக் கையை நீட்டினான் அவன்.

சட்டென ஒதுங்கி நெஞ்சு பந்தயக் குதிரையாக ஓடுவதைக் காட்டிக் கொள்ளாமல் அவனை நேராகப் பார்த்தாள் அவள். "பாருங்கள் செல்வா. அப்பா சொன்னதற்காக இரண்டாவது என்பதற்கு ஒத்து கொண்டிருக்கிறேன். ஆனால் திருமணத்துக்கு முன்பாக முறையற்ற எதையும் என்னால். ஏற்றுக் கொள்ள முடியாது. செத்துவிடுவேன். உங்கள் அப்பா சொன்னது போலக் கிணற்றுத் தண்ணீர் நான். பொறுத்து வாழுவதோ அன்றிச் சாகடிப்பதோ உங்கள் விருப்பம்" என்று எடுப்பாக முடித்தாள் அவள்.

"காரை எடுங்களேண்டா. நேரே சென்னைக்கு ஓட்டித் தொலை" என்று தன் அடியாட்களிடம் எரிந்து விழுந்தான் அவன்.

கிணற்றுத் தண்ணீர் அத்தோடு அந்தப் 'பொன் முட்டையிடும் வாத்து.'

அவளுக்கு ஏதேனும் நேர்ந்தால் தொலைத்துக் கட்டிவிடுவேன் என்றிருக்கிறாரே தந்தை.

கொள்கையாம் கொள்கை. இதற்கெல்லாம் அப்புறமாக இவளை அழ வைக்க வேண்டும்.

பின்புறம் வசதியாகச் சாய்ந்து கண்ணை மூடிக் கொண்டு தூங்கத் தொடங்கினான் செல்வராஜா.

ஆனால் சென்னைக்குச் சென்ற பிறகு அவர்களுக்காக வீட்டில் காத்திருந்த நாகேந்திரனிடம் ரொம்பவும் கண்டிப்பாகப் பேசினான். "உங்கள் பெண்ணுக்காக இன்னும் மாதக் கணக்கில் காத்திருக்க என்னால் முடியாது. இன்னும் ஒரு வாரம். அதற்குள் அவள் கேட்கிற அந்தத் திருமணம் நடந்தாக வேண்டும். இல்லாவிட்டால் யாருக்கும் நல்லதில்லை" என்று மிரட்டல் தொனியில் கூறிவிட்டு சாப்பிடும்படி அவர் அழைத்ததற்குப் பதிலே சொல்லாமல் போய்விட்டான்.

ஏழே நாள் அவகாசம்.

தாயிடம் முகம் புதைத்துக் கிடந்தவளிடம் குடைந்து குடைந்து நாகேந்திரன் கேட்டுப் பார்த்தார். ஆனால் அவருக்கு வேண்டிய மாதிரி விவரம் எதுவும் அவருக்குக் கிடைக்கவில்லை.

யாரோ இரண்டு பேர் மயக்கம் கொடுத்து அவளைப் பிடித்துக்கொண்டு போனார்கள். அவளை ஓர் அறையில் அடைத்து வைத்தார்கள். எப்போதும் முகமூடியுடன் இருந்தார்கள். இருவருமாக வெளியே சென்றிருந்த ஒரே ஒரு சமயத்தில் ஹேர்பின்னால் வெளிப்புறத் தாள்பாளைத் திறந்து கொண்டு ஓடி வந்து விட்டாள். செல்வராஜாவைப் பார்க்க நேர்ந்தது சென்னைவரை வந்து சேர்வதற்கு வசதியாகிப் போயிற்று என்றாள் அவள்.

செல்வராஜாவைப் போலவே அவரும் கொஞ்சம் சந்தேகமாகப் பார்க்க, அவனிடம் படித்த கதையையே பெற்றவரிடமும் பவித்ரா படித்தாள். உரிமை உள்ளவர் பேச்சுக்குப் பணியாத பாவத்துக்குத் தண்டனையாகத்தான் உரிமையற்றவர்கள் கையில் இந்தப்பாடு படும்படியாக ஆயிற்று என்று அவள் கண்ணீர் விடவும் "சரிசரி விடு. இப்போதுதான் புத்தி வந்துவிட்டதே." என்று அவரே அவளைத் தேற்றினார்.

இதில் எப்படியாவது நித்யபூரணனை மாட்டி வைத்துவிட நாகேந்திரன் ஆசைப்பட்டார்.

அவளைக் கடத்திப் போனதே அவன்தான். போலீசில் புகார் கொடுத்து அவனை உள்ளே தள்ளினால்தான் தன்னால் நிம்மதியாக இருக்க முடியும் என்றார் அவர். குறைந்த பட்சம் வம்பு வழக்கு என்று பெயரையாவது கெடுக்கலாமில்லையா?

பதிலாகப் பூரணன் கூறியதையே திருப்பிப் படித்தாள் மகள். "செய்யலாம் அப்பா என்னைக் கடத்தியவர்களைப் பழி வாங்கவேண்டும் என்று எனக்கும் ஆசைதான். பழி வாங்கியேதான் தீர வேண்டும். பூரணன் பரத் என்று தான் அவர்களும் ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டார்கள்..."

"பார் பார். அவர்கள்தான். உடனே போலீசில்..."

"பொறுங்கள் அப்பா இதெல்லாம் வெறும் வாய் வார்த்தைதானே? அதை நிரூபிக்க நம்மிடம் ஆதாரம் இல்லையேப்பா. நாம் தொழில் முறைப் போட்டி பொறாமையில் செய்ல்லுகிறோம் என்று பழியை அவர்கள் நம்மீது திருப்பி விட்டால் பிறகு நம் பெயரல்லவா கெட்டுவிடும்? அதை என் மாமனார் ஒப்புவாரா?"

நடேசனை மகள் மாமனார் என்று குறிப்பிட்டாள் என்பதில் அப்படியே உச்சி குளிர்ந்துவிட்டது அவருக்கு.

அவர் அந்த மனநிலையில் இருக்கும் போதே மகள் மேலே பேசினாள். "அப்பா என்னைக் கடத்திப் போன அந்தப் பூரணனும் பரத்தும் ஏதோ ஃபார்முலா பற்றிப் பேசினார்கள் அப்பா. அது மட்டும் கிடைத்தால் கோடிக்கணக்கில் லாபம் வருமாமே. அதைப் பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள் அப்பா. தொலைத்துவிடாதீர்கள்" என்று எச்சரித்தாள்.

இதை விடக் கொஞ்சம் அதிகமாக நடித்து பூரணனின் அசல் குறிப்பு எங்கே இருக்கிறது என்று தெரிந்து கொள்ளத்தான் அவளுக்கு ஆசை. ஆனால் அவர் சந்தேகப்பட்டுவிட்டால் எல்லாமே கெட்டுவிடும் என்பதால் ஃபார்முலா பற்றிய பேச்சை அத்தோடு நிறுத்திக் கொண்டாள்.

"அதைப் பற்றி நீ கவலைப் படாதே கண்ணு. யாரும் தொட முடியாதபடி பத்திரமாக வைத்திருக்கிறேன்" என்றதோடு அவரும் நிறுத்திக் கொண்டார்.

ஆனால் அவரது பார்வை ஒரு வினாடி அவரது பூட்டிய தனியறைப் பக்கம் பாய்ந்து மீண்டது போன்ற பிரமை அவளுக்கு. அவளது ஐயம் சரியானதுதானா?

ஆனால் அதைப்பற்றி மேலே பேசாமல் நித்யபூரணனை எப்படியாவது பழி வாங்க வேண்டும் என்று மட்டும் திரும்பவும் சொன்னாள். குறைந்த பட்சமாய் மனதார அவனைத் திட்டவேனும் செய்ய வேண்டும் என்று கறுவினாள்.

அந்த அளவில் நாகேந்திரனும் திருப்தியாகி அவரது வேலையைப் பார்க்கப் போனார்.

சும்மாவே ஆராய்ச்சி வேலை. அத்தோடு வருங்கால மருமகனின் ஏழுநாள் கெடு. அதைப் பற்றி வேறு சம்பந்தியிடம் கலந்து ஆலோசிக்க வேண்டுமே!

அறையினுள்ளிருந்த நாலைந்து ஜெராக்ஸ் காப்பிகளை எடுத்துக் கொண்டு தந்தை வெளியே செல்லும் வரை பவித்ரா புன்னகையைப் பூசிக் கொண்டு நடமாடினாள்.

அவர் சென்ற பிறகு தனி அறைக்குத் தாயை அழைத்துச் சென்று கதவைத் தாளிட்டு விட்டு வந்து அவள் மடியில் விழுந்து குமுறிக் குமுறி அழுதாள்.

இது முன்னைவிடப் பெரிய விஷயம் என்று உணர்ந்தாள் ரஞ்சிதம்.

ஒருவாறு மகளை ஆறுதல் படுத்தி விவரம் கேட்டபோது பவித்ரா தாயிடம் எதையும் ஒளிக்கவில்லை.

யாரும் ஒட்டுக் கேட்க வழியில்லை என்பதை மட்டும் உறுதி செய்துகொண்டு முக்கியமானதைச் சுருக்கமாகத் தாயிடம் கூறினாள்.

கடைசியாக "அப்போது சாவதற்குப் பயமாக இருந்ததும்மா. எனக்குப் பிறகு நீங்கள் ரொம்பவும் தவிப்பீர்களே என்று கவலைப்பட்டேன்" என்றவளை வேதனையோடு தடுத்து "அப்படிச் சொல்லாதே கண்ணம்மா" என்றாள் ரஞ்சிதம்.

"அதுதான் அம்மா உண்மை. அதனாலேயே 'விதி' என்று நான் பணிந்தும் போயிருக்கலாம் ஆனால் இப்போது எல்லாம் மாறிவிட்டது. நித்யாவை... நித்யபூரணனை என் மனதில் நினைத்து விட்டேன் அம்மா. இன்னொருவன் தீண்டுமுன் சத்தியமாகச் செத்துவிடுவேன்" என்று விசும்பியபடியே பவித்ரா கூறினாலும் அவள் குரலிலும் முகத்திலும் இருந்த உறுதி ரஞ்சிதத்தைத் திகைக்க வைத்தது. திகைத்துக் கலங்கவும் வைத்தது.

நித்யபூரணன்.

எதிரிக் குடும்பமான 'பரிமள'த்தைச் சேர்ந்தவன்.

மூன்று தலைமுறையாக அட்டமுக்குச் சொல்ல முடியாத பெருமை உடைய குடும்பம்.

நாகேந்திரனின் சில்வரை புத்திக்கும் அந்தக் குடும்பத்துக்கும் எப்படிப் பொருந்தும்?

அவர்களிடமே திருடிய நாகேந்திரனுடைய மகளை அவர்களுடைய முதல் வாரிசுக்கு எப்படி இணை சேர்ப்பார்கள்?

இங்கே இந்த வலையிலிருந்து மகள் தப்புவதே கடினம். அதற்கு மேல் அவள் அந்த வீட்டுக்குள் புகுவது... ஊகூம் சாத்தியமே இல்லையே!

அப்படியானால் மகளுடைய வாழ்நாளை எண்ண வேண்டியதுதானா?

இறுக அணைத்த தாயின் மனதைப் படித்தவளாக "இதிலிருந்து மீள ஒரே ஒரு வழி இருக்கிறதும்மா" என்றாள் பவித்ரா.

"மெய்யாகவா? என்ன அது?"

பவித்ரா வழியைச் சொன்னாள்.

தாயின் முகத்தில் குழப்பத்தைக் காணவும் "அம்மா இப்போது அவர்களுக்கு அந்த ஃபார்முலா 'இன்றியமையாதது' என்பார்களே அந்த மாதிரி அவசியம் அவர்களுடையது தான் என்றாலும் தொலைந்துவிட்டது. அதைத் திருப்பிக் கொடுக்கிறவளை ஏற்றுக் கொள்ளத் தோன்றாதா? நன்றி செலுத்துகிற மாதிரியாவது" என்றாள்.

அந்த நம்பிக்கை, பவித்ராவுக்கே அவ்வளவாக இல்லைதான். தாய்க்காகச் சொன்னதுதான். ஆனால் பூரணனின் பொருளை அவனிடம் சேர்த்த பிறகு செத்தாலும் பரவாயில்லை என்பது அவளது எண்ணம்.

"நிச்சயமாகச் சொல்ல முடியாத ஒரு வாய்ப்புதான். அந்தக் குறிப்பைத் திருடியது உன் அப்பா என்பதால் பெரும்பாலும் எதிர்மறையான முடிவுதான் வரும் என்றாலும் அதைக்கூட

முயன்று பார்க்க வழியில்லையேம்மா" என்றாள் ரஞ்சிதம் வருத்தத்துடன். "நம் வீட்டிலேயே இப்போது நடேசனுடைய ஆட்களின் காவல்தான். நான் கூட வெளியே போக முடியாது."

ஒரு கணம் சோர்ந்த போதும் பவித்ரா உடனே உறுதியுடன் நிமிர்ந்தாள். "நாம் போக முடியாவிட்டாலும் அந்த ஃபார்முலா கட்டாயம் போயாக வேண்டும் அம்மா. அதை நித்யனிடம் சேர்ப்பது என் கடமை. அதற்கு மேல் நான் வாழ்வதும் சாவதும் கடவுள் கையில்" என்றாள்.

தடுத்தோ. மறுத்தோ எதுவும் கூறாமல் மகள் சொன்னதைச் செய்தாள் ரஞ்சிதம். நூற்றில் ஒரு வாய்ப்பாக மகள் நல்லபடியாக வாழக்கூடும் என்றால் செய்து பார்க்க வேண்டும்தானே?

வீட்டில் கடுமையான காவல். அத்தோடு மனைவியோ, மகளோ பூரணன் பக்கம் சாயக் கூடும் என்ற எண்ணம் சிறிதும் இல்லாததால் நாகேந்திரன் அந்த ஃபார்முலாவை வீட்டில்தான் வைத்திருந்தார். பரிமளத்தார் போலக் கவனக் குறைவாக அல்ல. பூட்டிய அறைக்குள் இரும்பு பீரோவின் ரகசிய அறையுள்.

ஆனால் ஒரு செட் சாவிகள் அவரிடம் இருந்த போதும் மாஸ்டர் கீ செட் வீட்டில் இருந்தது.

அதைப் பயன்படுத்தி ரஞ்சிதம் அசல் குறிப்பை எடுத்து மகளிடம் கொடுத்தாள்.

நீண்ட சதுரத்தில் கையால் எழுதப்பட்ட காகிதம்.

அதன் நகல்கள் நிறைய அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவற்றுள் ஒன்றை எடுத்து கிட்டத்தட்ட அசலைப் போன்ற ஒன்றை பவித்ரா தயாரித்தாள். அதை மீண்டும் பீரோவினுள் பழைய மாதிரியே வைத்துக் கதவையும் பூட்டினார்கள்.

பிறகு பவித்ரா நித்யபூரணனுக்கு ஒரு கடிதம் எழுதினாள். அதற்குரிய உறையையும் அவளே தயாரித்தாள். மெல்லியதாக

இருந்த காக்கிக்கலர் காகித உறை கிழிந்து, கடிதம் அவன் படிக்குமுன் தொலைந்து விடக் கூடாதாம்.

மகள் எழுதியிருந்த கடிதத்தைப் படித்துப் பார்த்த நாகேந்திரனுக்கு ஒரே சந்தோஷம்.

'ஹா ஹா ஹா' என்ற உரக்கச் சிரித்தார். "இதைப் படித்ததும் அந்தப் பயலுக்குக் கொஞ்சமேனும் வயிறு கலங்கத்தான் செய்யும்" என்று கூறி மகிழ்ந்தவர், அவரே கூரியரை அழைத்து கடிதத்தை உள்ளே வைத்து மகள் ஒட்டித் தந்த அந்தக் கவரைக் கொடுத்து அனுப்பினார்.

இனி எல்லாம் அந்த நித்யபூரணன் கையில் இருக்கிறது என்று எண்ணினாள் ரஞ்சிதம்.

அவன் ஏதாவது செய்வானா?

செய்ய வேண்டுமே என்று அந்தத் தாய் மனம் ஏங்கியது.

ஆனால் பவித்ரா என்ற பெயரைக் கேட்டாலே பொங்கி வெடிக்கிற நிலையில் நித்யபூரணன் அப்போது இருந்தான்.

செல்வராஜாவைப் பற்றிய பவித்ராவின் அருவறுப்பை அறிந்திருந்ததால் அவனால் அவளுக்குத் தொல்லை வராமல் தடுப்பதற்கான பெரு முயற்சியில் நித்யபூரணன் ஈடுபட்டிருந்தான்.

அது கிட்டத் தட்ட வெற்றி என்கிற நிலைக்கு வந்திருந்தது.

முயற்சி வெற்றியான பிறகுதான் பவித்ராவைச் சந்திக்கச் செல்வது என்று முதலில் நினைத்திருந்தான். ஆனால் அலுவல் காரணமாகத் திருச்சி வரை செல்லும் வாய்ப்புக் கிட்ட, உளவாக வந்தவனை உதறவும் முடிந்ததால் அருள் வாசலுக்குக் காரைத் திருப்பி விட்டான்.

உள்ளம் துள்ளச் சென்று பாததால் கோயிலில் இருந்து அப்போதுதான் திரும்பி வந்து குழப்பத்துடன் உட்கார்ந்திருந்தாள் கமலி.

பவித்ரா இல்லை என்றபோது, எப்படியோ கண்டுபிடித்து அவளைக் கொண்டு போய் விட்டார்களே என்ற தவிப்புதான் என்ன பாடு படுகிறாளோ என்ற வேதனை.

ஆனால் கமலிக்குச் சேதி சொல்லி அனுப்பிவிட்டுச் சென்றாள் என்றதும், அவனுமே குழம்பிப் போனான். தகவல் சொல்லிவிட்டுப் போவது என்றால் அவளே விருப்பப்பட்டு அல்லவா சென்றிருக்கிறாள்.

மரத்தோரம் மறைந்தாற்போல நின்று பவித்ரா 'செல்'லில் பேசியதைக் கண்டதாக ஒருவர் தெரிவித்ததை கமலி கூறவும், பூரணனுக்குப் பகீர் என்றது.

அப்படியானால் பவித்ராவிடம் 'செல்போன்' இருந்ததா? எப்போதுமே? அவளைச் சோதித்துப் பார்க்கக் கூடத் தோன்ற வில்லையே? அப்படியானால் அவள் அவனை முழுக்க முழுக்க முட்டாளடித்துக் கொண்டே இருந்திருக்கிறாள். ஒரு வாரம் அவள் பின்னே அலைந்து யாரும் துணை வரவில்லை என்று முடிவு செய்தானே. கையில் 'செல்' இருக்கும்போது வேறு யார் வேண்டும்?

தந்தையும் மகளும் கூட்டா? அதனால்தான் மகளை விடுவிப்பதில் நாகேந்திரன் அவசரம் காட்டவில்லையா? என்னென்ன தடயங்களைச் சேகரித்துக் கொண்டு இப்போது போயிருக்கிறாள்?

கடவுளே, குடும்பத்துக்குப் பெருமை சேர்க்காதது கூடத் தப்பில்லை. அவன் அவமானத்தை அல்லவா கொண்டு வந்து விட்டான்.

ஆனாலும் அவளா? இப்படியா? நம்ப மாட்டாமல் தவித்தான் அவன்.

பூரணனின் மனதில் வீசிய புயல் அவன் முகத்தில் தெரிந்ததோ?

"பவித்ரா நல்ல பெண், நித்யா. நடந்தது என்ன என்று நமக்குத் தெரியவில்லை. அவ்வளவுதான். அவளைத் தவறாக நினைக்காதே" என்றாள் கமலி.

தன் மனமும் அப்படி எண்ணவே விரும்புவதைச் சொல்லாமல் வெறுமனே தலையாட்டிவிட்டு "நான் அவள் வீட்டில் விசாரிக்கிறேன். அங்கே வந்துவிட்டால் உனக்குத் தகவல் கொடுக்கிறேன்" என்று கூறிவிட்டு உடனே கிளம்பிவிட்டான் அவன்.

திருச்சி வேலையை முடித்துக் கொண்டு அவன் சென்னைக்குத் திரும்பி வந்தால் பவித்ரா அவள் வீட்டுக்குத் திரும்பி வந்துவிட்ட விவரம் கிடைத்தது.

அவளது செல்லில் தனக்கும் சொல்வக்கூடத் தோன்ற வில்லையே என்று ஏங்கியவன் அந்த ஏக்கத்திற்காகத் தன் மீதே கோபம் கொண்டான்.

கமலிக்குச் சுருக்கமாகத் தெரிவித்தான்.

பிறகு எந்த வேலையும் ஓடாமல் உட்கார்ந்திருந்தான்.

நடந்த நடப்புகள், பவித்ராவைக் குற்றம் சாட்டியபோதும் அவனால் ஏன் அதை ஒத்துக் கொள்ள முடியவில்லை? அவனது ஆசை கொண்ட மனம், அவளிடம் தப்பை ஒத்துக் கொள்ளாதா?

தவித்தபடி அவன் அமர்ந்திருந்த போது அவனுடைய பத்திரிகைக்கார நண்பன் போன் செய்தான். "என்னப்பா பூரண், இன்று அச்சில் ஏறுகிறது. இரவு பன்னிரெண்டு மணிக்கு உனக்கு ஒன்றும் மாற்றும் எண்ணம் இல்லையே?" என்று கேட்டான். "இருந்தால் இப்போதே சொல்லிவிடு."

ஒரு கணம் நித்யபூரணன் யோசித்தான். இது அவளுக்காகச் செய்யத் தொடங்கிய வேலை. அவசியம் இல்லை என்பது போல

அவள் தெளிவாகக் காட்டி விட்டாள். ஆனாலும் அவள் வாழ்வு அழியும்படி விட்டுவிட அவனால் முடியாது.

"இல்லை சுந்தர். இதில் மறு பரிசீலனைக்கே இடமில்லை" என்றான் பிடிவாதமான குரலில்.

"ஓகேப்பா. நாளைப் பத்திரிகையில் பார்" என்று பேச்சை முடித்தான், அந்த சுந்தர்.

மறுநாள் பத்திரிகையில் பார்த்ததும் என்ன நடக்கும்? ஆத்திரப்படுவாளா? ஆனால் அன்றைக்கு அவ்வளவு அருவறுப்புடன் பேசினாளே!

பங்குப் பத்திரம் பதிவாகிவிட்டது என்று அவள் தந்தை ஆடிய ஆட்டத்தைப் பற்றிப் பவித்ரா சொன்னதை வைத்து அதன் நகலுக்கு ஏற்பாடு செய்து அதை வாங்கி நண்பனிடம் கொடுத்திருந்தான் பூரணன். அந்த அடிப்படையில் வரும் செய்தியைப் பார்த்ததும் பவித்ரா என்ன நினைப்பாள்?

முன்பானால், இதனால் நல்ல விளைவு ஏற்படக்கூடும் என்று மகிழ்ச்சி அடைவாள் என்று உறுதியாக எண்ணியிருப்பான். ஆனால், இப்போது அவன் மனம் குழம்பியது. ஆனால் எப்படியாவது செல்வராஜாவிடமிருந்து அவள் தப்பினால் சரி.

மறுநாள் பத்திரிகைகளைப் பார்த்த போது, நண்பன் சுந்தரின் துணிச்சல், பூரணனுக்கே வியப்பளித்தது.

நடேசன், 'உங்களுக்காக' நிதி நிறுவனத்திலிருந்து ஏகப்பட்ட பணத்தைக் கையாடல் செய்திருப்பதாகவும் அந்தப் பணத்தைத் தன் பெயரிலும் தன் குடும்பத்தார் பெயரிலும் மற்ற தொழில்களில் முதலீடு செய்யப் பயன்படுத்தியிருப்பதாகவும் பத்திரிகைச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த வரிசையில் கடைசியாக வாசனைப் பொருள் தயாரிப்புக்காக எடுக்கப்பட்டிருந்த மூன்று கோடி ரூபாய் பற்றி எழுதி, அதன்

பத்திர நகலையும் சுந்தர் வெளியிட்டிருந்தான். நிதி நிறுவனத்தில் பணத்தைப் போட்டு விட்டு, வட்டிக்காக மாதக் கணக்கில் காத்திருக்கும் அப்பாவிகள் இப்போதாவது விழித்துக் கொள்வார்களா என்று கேட்டிருந்தது. பெரிய அடி.

இவ்வளவு நேரடியாகத் தாக்கியிருக்கிறானே. அவனுக்கு ஏதாவது துன்பம் வருமோ?

ஆனால் அதைப் பற்றிய நினைவு மறக்கும்படி, நித்யபூரணனுக்குக் கூரியரில் ஒரு கடிதம் வந்தது.

பொதுவாக அவனுக்கு வரும் கடிதங்களைப் பார்த்து, ரகம் வாரியாகப் பிரித்து வைப்பது மகேஷுடைய பொறுப்பு. அந்தக் கூரியர் கடிதத்தைப் பார்த்ததும் அவன் கொதித்துப் போனான்.

அவன் அதை பரத்திடம் காட்ட, இருவருமாக ஆத்திரத்துடன் பூரணனிடம் சென்றார்கள்.

"அண்ணா இந்தப் பவித்ராவின் திமிரைப் பார்த்தாயா? உன்னை எப்படியெல்லாம் திட்டிக் கடிதம் எழுதியிருக்கிறாள், தெரியுமா?" என்று சீறினார்கள்.

கடிதத்துக்காகக் கையை நீட்டியவனிடம் அதைக் கொடுக்காமல் "நானே வாசிக்கிறேன். பார். நீ பொல்லாதவனாம். நய வஞ்சகனாம். பெண்களைக் கடத்தி, அவர்களின் பின்னே ஒளிந்து கொண்டு காரியம் சாதிக்கும் கோழையாம். தம்பிகளை ஏவி, அவர்களை மாட்டி வைத்துவிட்டு ஓடி விடுவாயாம். இத்யாதி. அதற்கு மேலும் எழுதியிருப்பதைப் பாரேன். இந்தக் கெட்ட புத்தியை எல்லாம் நல்லவன் போல ஓர் உறையைப் போட்டுக் கொண்டு மறைத்து விடுகிறாயாம். பொய்யான அந்த உறையைக் கிழித்து, அதற்குள்ளே இருக்கும் உன் உண்மை உருவை வெளியே கொண்டு வருவதே இனி அவளது வாழ்க்கை லட்சியமாம். பார் அண்ணா, மறுபடியும் என்ன எழுதியிருக்கிறாள். எல்லாத் திரிசமன்களையும் அழுந்த மூடி

உறைமேல் உறையிட்டு ஒளித்து வைக்கிறாயாம். ஆனால் எத்தனை உறையிட்டாலும் அத்தனையையும் அவள் அகற்றி உன் சுயரூபத்தை உலகத்துக்குக் காட்டி விடுவாளாம். என்ன திமிர் இருந்தால்..." என்று இருவருமாகச் சொல்லிக் கொண்டு இருந்த போதே பூரணன் சட்டென எழுந்தான்.

"இந்தக் கடிதம் வந்த உறை எங்கே?"

"என் மேஜையில். 'இங்கே, கவனமாகக் கிழிக்கவும்' என்றெல்லாம் எழுதிப் புதுமாதிரியாகத் தடிமனான கவராக இருந்ததா? அப்படியே எடுத்து வைத்தேன்."

மகேஷ் சொல்லிக் கொண்டிருக்கும் போதே வேகமாக நடந்த பூரணனை மற்ற இருவரும் பின் தொடர மூவருமாக மகேஷின் மேஜைக்கு வந்து சேர்ந்திருந்தனர்.

சற்றுப் பெரிய அளவில் இருந்த அந்தக் கவரை எடுத்து உயரே தூக்கி வெளிச்சத்தில் பார்த்தான் பூரணன். கவர் தடிமனாக இருக்கக் காரணம் ஒன்றினுள் ஒன்றாக அதில் இரு உறைகள் இருந்ததால் என்று தெரிந்தது. கவனத்துடன் கவரை ஓரமாக வெட்டிப் பார்த்தால் அதன் இரு உறைகளுக்கும் இடையில் அவன் கைப்பட எழுதி வைத்த புதிய தயாரிப்புக்கான ஃபார்முலா இருந்தது.

சற்று நேரம் அங்கே நிசப்தம் நிலவியது.

அதன் பின் "ஹிப் ஹிப் ஹுர்ரே" என்று தம்பிமார் இருவரும் அண்ணனைத் தூக்கிக் கொண்டு உற்சாகக் கூச்சலிட்டுத் தூள் கிளப்பினர்.

"அண்ணிடா, மகேஷ். பவித்ரா அண்ணாவைப் பார்க்கிற விதத்தை நீ காண வேண்டுமடா" என்று பரத் அளக்க, "அப்படியா?" என்று அதிசயம் காட்டினான் மகேஷ்.

"ஷ் விடுங்களடா. இது அலுவலகம். தாத்தா வரையிலும் போனால் நன்றாயிராது" என்று நித்யபூரணன் அடக்கிய பிறகே மற்ற இருவரும் அமைதியாயினர்.

அப்புறம் பவித்ராவைப் பற்றிப் பாராட்டு.

மற்றவர்களுக்குத் தெரியாதபடி, கெட்டிக்காரத்தனமாக அவர்களுடைய ஃபார்முலாவை அனுப்பி விட்டாளாம்.

பூரணனின் மனம் வேறு நினைத்தது.

இவ்வளவு ஒளிவு மறைவாக ஒரு கடிதம் அனுப்ப வேண்டுமானால், அங்கே என்ன மாதிரியான சூழ்நிலையில் பவித்ரா இருக்கிறாள்? அவள் எழுதும் கடிதங்கள் கூட அடுத்தவரால் படிக்கப்படுகின்றன என்று தானே அர்த்தம்? படிக்கப்பட்டு அவர்கள் முன்னிலையில் கடித உறை ஒட்டப்படுகிறது.

சுற்றிலும் செல்வராஜாவுடைய ஆட்கள் காவல் இருக்க, அசோக வனத்து சீதையாக பவித்ரா சோர்ந்து அமர்ந்திருப்பது போன்று ஒரு கற்பனை தோன்ற அவன் பதறிப் போனான்.

பவித்ராவைப் பார்த்தே ஆக வேண்டும் போல அவன் மனம் துடிக்கத் தொடங்கியது.

உள்ளுணர்வு ஒருவனை வழி நடத்திச் செல்லும் கடவுள் என்பார்கள்.

அந்த உள்ளுணர்வுதான் பவித்ராவைப் பார்க்க வேண்டும் என்று சொல்லுகிறதோ? அதை அலட்சியப்படுத்திவிட்டு அப்புறம் அவளுக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்துவிட்டால் என்ன செய்வது? எப்படித் தாங்குவது?

தாங்கவே முடியாது!

அதைவிட அவளுக்கு ஒன்றுமே இல்லாமல் சும்மா இருந்தால் கூட அங்கே அவமானப்பட நேர்ந்தால்கூட அவளைப் போய்ப் பார்த்துவிட்டு வந்தால்தான் நிம்மதியாக இருக்க முடியும்.

மேலும், பவித்ராவைப் பார்க்க வந்ததாக ஏன் சொல்ல வேண்டும்? நித்யபூரணன் வாசனைப் பொருள் தயாரிப்பாளர் சங்கத் தலைவன். அந்த வகையில் நாகேந்திரனைச் சந்திக்க வந்ததாக அவன் சொன்னால் அதில் யார் என்ன குற்றம் காண முடியும்?

எப்படியும், பவித்ராவைப் பார்த்தே ஆகவேண்டும் என்று அவன் கிளம்பவும், எதற்கும் இருக்கட்டும் என்று தம்பியர் இருவரும் அவனோடு கிளம்பினர்.

அப்படி மூவருமாகச் சென்றதும் நல்லதாகிப் போயிற்று. ஏனெனில் பத்திரிகைச் செய்தியைப் படித்துவிட்டு அதை ஏற்பாடு செய்தது பவித்ராதான் என்று எண்ணிக் கொண்டு அவள் வீட்டுக்கே வந்து பேயாட்டம் ஆடிக் கொண்டிருந்தான் செல்வராஜா.

"ஏய், வாடி இங்கே. நீதானே இந்தப் பத்திர நகல் கொடுத்தே? அம்மன் அருள்புரத்தில் நீயாக வந்து பேசினியே அப்பவே யோசித்திருக்க வேணும். உன்னையும் போட்டு நசுக்கியிருக்க வேணும்டீ. உன் பேச்சுக்கு மதிப்புக் கொடுத்து உன்னை விட்டேன் பாரு. குணத்தைக் காட்டிவிட்டே ஆனால் இந்த செல்வராஜா ஒருத்தியை நினைத்த பிறகு அவளைத் தொடாமல் விட மாட்டாண்டீ. நாளைக்கு என்னவேண்டு மானாலும் நடக்கட்டும். இன்றைக்கு இப்போது உன்னை என்ன பண்ணுகிறேன் பார். ஏய்... வாடீ" என்று பவித்ராவைப் பிடித்து இழுத்தான்.

"ஊகூம். அவள் என் மகள் தம்பி. தாலி கட்டு முன்னே அதெல்லாம் கூடாது" என்று நாகேந்திரன் குறுக்கே வர, அவரைப் பிடித்து அவன் தள்ளிய வேகத்தில் அவர் உருண்டு விழுந்தார்.

ரஞ்சிதம் ஏற்கனவே ஓர் அறைக்குள் அடைக்கப் பட்டிருந்தாள். "ஐயோ என் மகளை விடு. சொல்லச் சொல்லப் படு குழியில் தள்ளி விட்டீர்களே. ஐயோ, அவளைக் காப்பாற்றுங்களேன்" என்று கதறினாள் அவள்.

கையில் அகப்பட்டதை எடுத்துவீசி, அவனைத் தடுக்க முயன்ற பவித்ரா அதையும் மீறி அவன் அவளது ஒரு கையைப் பற்றி விடவும் மறு கையை நீட்டி நகங்களால் அவன் முகத்தில் நன்றாகக் கீறிவிட்டாள்.

எதிர்பாராத வலியில் பிடியை விட்டவனுக்கு பெரும் ஆவேசம் வந்து விட்டது.

"என்னையாடி பிறாண்டினாய்? உன்னை... உன்னை என்ன செய்கிறேன் பார்" என்று அவன் கையை வீசிய வேகத்தில் அந்த அறை மட்டும் அவள் கன்னத்தில் விழுந்திருந்தால் பவித்ராவின் செவிப்பறை கிழிந்திருக்கும்.

ஆனால் "சின்ன குழந்தையப்பா. விட்டு விடு" என்று கெஞ்சியபடி குறுக்கே வந்த நாகேந்திரன் அந்த அறையை வாங்கிக் கொண்டு மறுபடியும் கீழே விழுந்தார்.

"கழுதை என்னிடமா, ஆட்டம் காட்டுகிறாய்?" என்று மீண்டும் அவளை நோக்கிப் பாய்ந்தான் செல்வராஜா.

நித்யபூரணனும் அவனுடைய சகோதரர்களும் நாகேந்திரன் வீட்டை அடைந்த போது, வெளிக்கதவு சாத்தப்பட்டிருந்தது. காவலாக நின்ற இரு கட்டைத் தடியர்களும் 'வீட்டில் யாரும் இல்லை. வெளியே போயிருக்கிறார்கள்' என்றார்கள்.

"பத்திரிகைச் செய்தியைப் பார்த்துவிட்டு நடேசன் வீட்டுக்கு விசாரிக்கப் போயிருப்பார்கள்" என்றான் பரத்.

'நடேசன்' என்ற வார்த்தை அந்த இருவரிடமும் விளைவித்த ஒரு சிறு மாற்றம், பூரணனை யோசிக்க வைத்தது.

இவர்கள் நடேசனின் ஆட்கள்.

உள்ளிருந்து ரஞ்சிதத்தின் கூக்குரலும் லேசாகக் கேட்கவே அவன் சட்டென முடிவெடுத்தான்.

இவர்கள் அடியாட்கள். அவர்களோடு சண்டை போடுவது அவ்வளவு சரியில்லை. கத்தி கித்தி வைத்திருந்தார்கள் என்றால் ஆபத்தாகிவிடும். முக்கியமாகத் தம்பிமாருக்கு அபாயம் நேர விடக் கூடாது. அத்தோடு நேரமும் வீணாகும். அதனால்..

தம்பியை அசையாது பார்த்து "பரத் போலீஸ் கமிஷனரை செல்போனில் கூப்பிட்டு நடேசன் இங்கே ஒளிந்து கொண்டு இருக்கிறார் என்று தெரிவித்து அவரைக் கைதுபண்ண வரச் சொல்லு" என்று உத்திரவிட்டான். "இந்தாப்பா நீங்களும் அவர் ஆட்கள்தானே? ஓரமாப் போய் நில்லுங்கள். போலீசிடம் நீங்களும்...." என்று அவன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அண்ணன் ஏதோ திட்டமிடுகிறான் என்பது புரிந்து "இதோண்ணா" என்று பையில் கையை விட்டு செல்போனை எடுத்தான்.

'போலீஸ்' என்றதுமே சற்றுக் கலக்கத்துடன் நின்ற இருவரும் பரத் செல்லை எடுத்ததும் ஒருவரை ஒருவர் பார்த்துவிட்டு ஓடத் தொடங்கினார்கள்.

பின்தொடருமாறு சைகை செய்துவிட்டு பூரணன் வேகமாக வீட்டினுள் சென்றான்.

அங்கே செல்வராஜாவின் கையில் அப்போதுதான் சிக்கி விடுபடப் போராடிக் கொண்டிருந்தாள் பவித்ரா.

நித்யபூரணனைக் கண்டதும் ஒரு முயற்சியில் செல்வராஜாவை உதறிவிட்டு "நித்யா" என்ற கதறலுடன் ஓடிவந்து அவனிடம் ஒண்டிக் கொண்டாள் அவள்.

கூட வந்த இருவரும் செல்வராஜாவைப் பிடித்து நிறுத்துவதை அவள் கவனிக்கவே இல்லை.

சில கணங்கள் கழித்து லேசாக அவள் தலையை வருடி "ஷ் அடக்கிக் கொள் பவி" என்று அவள் காதோரம் முணு முணுத்தான் நித்யபூரணன்.

அவள் சமாளித்துக் கொள்ளவும் அடைபட்டுக் கிடந்த ரஞ்சிதத்தின் பக்கம் கையைக் காட்டிவிட்டு "விட்டுவிடுங்கம்மா அந்தக் குடும்பத்தை இனிப் போலீஸ் கவனித்துக் கொள்ளும்" என்றவன் சிரமத்துடன் எழுந்து கொண்டிருந்த நாகேந்திரனிடம் சென்று அவருக்கு உதவினான்.

சிறு ரத்த காயம் பட்டிருப்பது கண்டு பவித்ராவிடம் பஞ்சும் மருந்தும் கொண்டுவரச் சொல்லி காயத்தைத் துடைத்து மருந்திட்டான்.

செல்வராஜாவை விரட்டியடித்துவிட்டு அன்றைய களேபரத்தில் அறையெங்கும் சிதறிக்கிடந்த பொருட்களை பரத்தும் மகேஷும் எடுத்து அடுக்கினர்.

அதற்குள் உள்ளே சென்று எல்லோருக்கும் காஃபியோடு ரஞ்சிதம் வந்தாள்.

"எதற்கம்மா வீண் சிரமம்?" என்று வினயமாகப் பேசிய போதும் அந்த நேரத்தில் எல்லோருக்குமே அந்த காஃபி தேவையாகத்தான் இருந்தது.

சிறு பேச்சினூடே எல்லோருமாகக் காஃபி அருந்தினர்.

பத்திரிகைச் செய்தி. நடேசன் பற்றிய பேச்சு வந்தது. "ஆறேழு மாதங்களாகவே 'டெப்பாசிட்' செய்த பணத்துக்கு

அவர் வட்டியே கொடுக்கவில்லை என்று கேள்வி. இன்னும் சில மாதங்களில் தானாக விழுந்திருப்பார். பத்திரிகைச் செய்தியால் வீழ்ச்சி உடனே நிகழ்ந்துவிட்டது" என்றான் பூரணன்.

இளைஞர்கள் பானத்துக்கு நன்றி சொன்னபோது "சரியான நேரத்தில் வந்து பெரிய ஆபத்தில் இருந்து காப்பாற்றியதற்கு நாங்கள் தான் நன்றி சொல்ல வேண்டும்" என்றாள் ரஞ்சிதம்.

ஒப்புதலாகப் பவித்ரா புன்னகை செய்ய அவ்வளவு நேரம் பேசாதிருந்த நாகேந்திரன் எழுந்து உள்ளே சென்றார்.

திரும்பி வந்து "வயதுக்கு ஏற்றபடி இராமல் பெரிய தப்பு செய்தேன். மன்னித்துவிடப்பா" என்று பூரணனிடம் அவர் நீட்டிய காகிதத்தைப் பார்த்ததும் அவன் புன்னகையை அடக்க பரத்தும் மகேஷும் வாய்விட்டுச் சிரித்தனர்.

"அசலைத்தான் அண்ணி நேற்றே அனுப்பி விட்டார்களே" என்று மேலும் சிரித்தனர்.

அண்ணியா?

திகைப்புடன் அவர் நோக்க "ஷ் சும்மா இருங்களடா. தாத்தாவிடம் பேச வேண்டும்"-என்று தம்பியரைப் பூரணன் அடக்கினான்.

உதட்டைக் கடித்துக் கொண்டு நின்ற மகளைப் பார்த்ததும் அவருக்கு என்னவோ புரிந்தது போல இருந்தது. கண் கலங்கியது. பூரணனின் கையைப் பற்றி "தம்பீ நான் கெட்டவன்தான். ஆனால் என் பெண் ரொம்ப நல்லவளப்பா. தாத்தாவிடம் சொல்லுங்கள்... எனக்காக அவளை ஒதுக்கிவிடவேவே..." என்றவரின் குரல் தழதழத்தது மேலே பேச முடியாமல் தடுமாறியது.

"அதெல்லாம் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் நீங்கள் கவலையே படாதீர்கள் அங்கிள். ஆண்ட்டியின் மீன் புட்டை

அவ்வளவு லேசில் நான் விட்டுவிடுவேனா? என்ன பவித்ரா சரிதானே? அங்கிளுக்குத் தைரியம் சொல்லுங்கள்" என்ற பரத் எழுந்தான். "இனிச் சீக்கிரம் கிளம்புவோமா? நிறைய வேலை இருக்கிறதே. கல்யாண வேலை."

பூரணன் நினைத்தது போலவே நித்யானந்தத்துக்கு முதலில் இந்தத் திருமணத்தில் அவ்வளவாக விருப்பம் இல்லைதான். ஆனால் பேரனின் எண்ணம் தெரிந்ததுமே அவர் அதற்குமேல் மறுத்துப் பேசவில்லை. அத்தோடு பவித்ராவைப் பற்றி பரத்தின் புகழாரம். அத்தோடு நேரில் வந்து பேசிய கமலியின் பாராட்டு இவற்றோடு அவள் ஃபார்முலாவைப் பூரணனுக்கு அனுப்பிய விதமும் தெரிய வந்ததும் பெண்ணுக்குப் பூ வைத்துவிட்டு வருமாறு வைர மாலையுடன் மனைவியை அனுப்பி விட்டார்.

விரைவிலேயே திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

இருவரும் தனிமையில் சந்தித்தபோது பவித்ரா கணவன் முகத்தை யோசனையாகப் பார்த்தாள்.

கண்ணை மறைத்து விழுந்த கூந்தல் கற்றையை ஒதுக்கி அவள் முகம் தூக்கி "என்னடா?" என்று கனிவோடு கேட்டான் அவன்.

அவன் கையை அப்படியே கன்னத்தோடு சேர்த்து அழுத்திக் கொண்டவளின் கண்கள் வேசாகக் கலங்கின. "இது ஒன்றுதானே எனக்கு? கமலிக்கா வீட்டில் தூங்கப் போகுமுன் ஒரு தடவை மற்றபடி..."

"மற்றபடி...?" என்று அவள் கையைப் பற்றி முத்தமிட்டு விளையாட்டாய்க் கேட்டான் அவன்.

"மற்றபடி என்ன? எல்லாமே நான்தானே உங்களுக்காக ஓடி ஓடிச் செய்தேன்? பரத்துக்கு வைத்தியம் பார்த்துவிட்டுத் திரும்பி வந்தது உங்களுக்காக அப்பாவுடன் பேசியது. உங்கள் பேச்சை

ஏற்று. கடைசியாக அந்த ஃபார்முலா. எல்லாம் பைத்தியம் மாதிரிச் செய்தேன்" என்றாள் அவள் சற்றே தாங்கலோடு.

அவளைக் கூட்டிச் சென்று கட்டிலில் அமர வைத்து அவன் கேட்டான். "உனக்காக நான் ஒன்றுமே செய்யவில்லை. அதுதானே? பெரிய குற்றச்சாட்டு. ஆமாம் நடேசன் விஷயம் பத்திரிகையில் இப்போது வந்தது எப்படி என்று நினைத்தாயாம்?"

"எப்படி? நீ நீங்களா? உங்கள் வேலையா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் அவள்.

"பின்னே? வரவேற்பின் போது சுந்தர் என்று ரொம்பவும் ஒல்லியான ஒருவனை அறிமுகப்படுத்தினேனே. அவன் ஒரு ஜர்னலிஸ்ட் என் நண்பனும் கூட என் மனம் உட்பட எல்லா விஷயத்தையும் அவனிடம் சொன்னேன். எவ்வளவு முடியுமோ அவ்வளவு சீக்கிரமாகச் செய்து கொடுத்தான்" என்றவன் மனைவியின் கையைப் பற்றித் தன் கைக்குள் அடக்கிச் சொன்னான்.

"முதல் நாள் உன்னைத் தொட்டுத் தூக்கிய வினாடியிலிருந்தே எனக்குள் மாற்றம்தான் பவி. காரில் கண்ணைக் கட்டக்கூடாது என்று கீழே உட்கார்ந்தாயே. உடம்பு வலிக்குமே என்று எவ்வளவு கஷ்டமா இருந்தது தெரியுமா? அன்றைக்கே உன் முன்னிலையில் உன் தந்தையை அலட்சியப்படுத்திப் பேச என்னால் முடியவில்லையே. பெரியவர் என்பதே இல்லாமல் 'நாகேந்திரன்' என்று பெயரைச் சொல்லத் தொடங்கிவிட்டு முடிக்காமல் உன் தந்தை என்று மாற்றிக் கொண்டே இருந்தேன். என் பலவீனம் புரிந்ததால்தான் பரத்தை இருமடங்கு எச்சரிக்கை செய்தேன். உன் தோற்றம் ரசித்துவிட்டு அதை மறைக்கத் தம்பியைப் பார்க்க ஓடுவேன். உன்னிடம் மயங்கி கடமை பொறுப்பில் தவறிவிடுவேனோ

என்ற பயத்தில்தான் மறுநாள் நான் ஓய்வு இல்லத்திலிருந்து கிளம்பியதே..."

முகம் மலர "ஐயோ, நிஜமாகவா?" என்று வியந்தாள் பவித்ரா.

"ஐயோ, நிஜம்தாங்க" என்று அவளைப் போலவே சொல்லிக்காட்டிச் சிரித்தான் அவன்.

கூடச் சேர்ந்து பவித்ரா சிரிப்பதைப் பார்த்து ரசித்துவிட்டு மீண்டும் தொடர்ந்தான். கடைசியாகக் கமலிக்கா வீட்டுக்குப் போன பிறகு என்னதான் கடமை என்று பார்த்தாலும் ஒரு போதும் உன்னைவிட என்னால் முடியாது என்று புரிபட்டது. அதிலும் பேச்சினூடே உன்னை அறியாமலே 'நித்யா' என்று என்னை அழைத்தாய் பார். உன்னை இழக்க முடியாது என்று சர்வ நிச்சயமாகத் தெரிந்து போயிற்று. கடமையையும் விடாமல் உன்னையும் காப்பாற்ற வழி தேடினேன். வாய்ப்பைத் தந்தது அந்த அயோக்கியனின் நிதி நிறுவனம். எல்லா ஏற்பாடுகளும் செய்து விட்டு அருள் வாசலுக்கு ஓடிவந்தால் அம்மையார் அந்தர்த்தானம் ஆகி விட்டீர்கள். அன்று எனக்கு எப்படி இருந்தது தெரியுமா?" என்று உடல் சிலிர்த்தான் நித்யபூரணன்.

"ரொம்பக் கோபமாக இருந்ததா?"

"கோபமா?" ஒரு பெருமூச்சு விட்டுத் தன்னைச் சமனப்படுத்திக்கொண்டு அவன் சொன்னான். "நீ 'செல்' வில் பேசினாய் என்று அறிந்தபோது ஏமாந்துவிட்டேனோ என்று ஒரு கணம் ஆத்திரப்பட்டது உண்மைதான். ஆனால் நான் முழுமையாக உணர்ந்தது வேறு" என்றவன் ஒரு வேகத்துடன் அவளை இழுத்து இறுக அணைத்தான். "என்உயிரே என்னை விட்டுப் போனது போல இருந்தது" என்றான் கரகரத்த குரலில்.

அந்த அணைப்பில் கட்டுண்டு சற்று நேரம் இருந்து விட்டு பவித்ரா அன்று நடந்ததைப் பற்றிய விவரம் கூறினாள். கோயிலில் வேண்டிக் கொண்டது. அங்கே செல்வராஜாவைப் பார்க்க நேர்ந்தது. முடிவெடுத்தது எல்லாம் சொல்லிப் பிறகு நடந்ததையும் அவனிடம் விவரித்தாள்.

ஆனால் உருகுவதற்குப் பதிலாக அவன் ஆத்திரப்பட்டான். "பெரிய தியாகச் செம்மல். ஆமாம். நீ இல்லாமல் போய் இந்த ஃபார்முலா கிடைத்து எனக்கு என்னடி பிரயோஜனம்? அதைப் பயன்படுத்தித் தொழிலை நடத்த நானும் தானே இருக்கிறேன்?"

பதறிப்போய் "நித்யா" என்று அவனை இறுக அணைத்துக் கொண்டாள் அவள்.

கோபம் குறையவில்லை அவனுக்கு. "இப்போது புரிகிறதா? எனக்கும் இப்படித்தானே இருக்கும்? என் அன்பை விட அப்படி என்னம்மா உன் நேசம் பெரியது? இருவருமாகச் சேர்ந்து வாழ நான் வழி தேடினால் நீ ஒரேயடியாக முடித்துவிடப் பார்த்தாயாக்கும்?" என்று படபடத்தான்.

அவனை மட்டுமாக நினைத்தது கூடத் தப்பு போலத் தெரிகிறதே. அவனை இழந்து அவளுக்கு வாழ முடியாதது போலத்தான் அவனுக்கும் இருக்கும்?

இன்னோரன்ன வார்த்தைகளால் 'காதவிக்கிறேன்' என்று அவன் அறிவித்ததில்லையே என்றால் அவளும்தான் மனதை வெளியிட்டதில்லை. ஆனால் அவன் இருவருக்குமாக யோசிக்கவில்லையே?

அன்று தியாகமாகத் தோன்றியது இன்று தவறாகத் தெரிந்தது. சுயநலமாகக்கூட.

மெல்ல விழி உயர்த்தி அவனைப் பார்த்தாள்.ஒரு கையால் அவன் கன்னத்தை மெல்லத் தொட்டு "சாரிம்மா" என்றாள் மென் குரலில்.

முகம் இளக, அவளது கையைப் பற்றி முத்தமிட்டான் அவன். இனிமேல் எந்தக் காரணம் கொண்டும் ஒரு கணமேனும் இப்படி நினைக்கத் தோன்றுமா உனக்கு?" என்ற போது அவன் குரலும் கனிந்திருந்தது.

"ஊகூம்" என்று ஆறுதலாய் அவன் மார்பில் சாய்ந்து அண்ணாந்து அவன் முகத்தைப் பார்த்தாள் பவித்ரா.

கண்ணில் காதலுடன் மனைவியை நோக்கிக் குனிந்தான் அவன்.